Azim Premji Foundation

# திசைமானி

ஒன்று கூடிய பயணம்

Issue : 23 | July 2018




# Trees Around Us...


**Perspectives**
தமிழகத்தின் மூத்த கல்வியாளர் எஸ்.எஸ். இராஜகோபால் அவர்களுடன் ஒரு உரையாடல்

**Perspectives**
ஆயிஷா - எங்களைச் செதுக்கிய சிற்பி

**Classroom Diaries**
Reading in Class I

**Teaching Resources**
Learning Circle

**Event Updates**
Workshop on Motion



Arts in Education - Education Resource Center, Villianur



Exposure visit - Pichandikulam forest



Kathaiyum Kalaikalum-Education Resource Center, Lawspet



Kathaiyum Kalaiyum with Ezhil - Nonankuppam



Book Review with J. Krishnamoorthy - Mudaliarpet



Maths TLM Display - Villianur



Workshop on Paraiyum Pattum - Villianur



Workshop on Motion - Mudaliarpet



Kathai Solli with Satish - Mudaliarpet



Sigappu Ball Point Pena - Book Review, Nonankuppam

# Thisaimaani July 2018

www. azimpremjifoundationpuducherry.org

## Perspectives | கண்ணோட்டங்கள்

Discussions on the aims of education, its connections with society, how children learn and the role of a teacher. | இப்பகுதியில் கல்வியின் நோக்கங்கள் மற்றும் சமூகத்துடன் அதன் தொடர்பு பற்றிய விவாதங்கள், குழந்தைகள் எவ்வாறு கற்கின்றனர் மற்றும் அதில் ஆசிரியரின் பங்கு பற்றி பகிர்ந்துள்ளனர்




தமிழகத்தின் மூத்த கல்வியாளர் எஸ்.எஸ் இராஜகோபால் அவர்களுடன் ஒரு உரையாடல் 01





ஆயிஷா - எங்களைச் செதுக்கிய சிற்பி 04

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் 08


## Classroom Diaries | வகுப்பறை நாட்குறிப்புகள்

This section carries articles on classroom experiences and reflections by teachers. We hope that sharing of these direct experiences will enrich the readers. | ஆசிரியர்களின் வகுப்பறை அனுபவங்களையும் அவற்றிலிருந்து கிடைக்கும் பிரதிபலிப்புகளையும் இப்பகுதி தங்கி வருகிறது. இத்தகைய நேரடி அனுபவப் பகிர்வுகள் வாசிப்போர்க்கு மேலும் வளம் சேர்ப்பதாக அமையும் என்று எதிர்பார்க்கிறோம்.


நடித்து கற்றோம் 11






Enabling Reading in Class 1 12

Creating Interest through Picture Interaction and Choreography 14

Collective Participation and Learning Through Choreography 15





The Little Fir Tree – Puppet Show 16

Choreographing 'Wake Up!' 18





Cooking, Recipe Writing and Learning English 20

Little Buds, Growing Plants 21





Wall Painting as a Learning Tool in the EVS Classroom 22

Blooming Petals – An Outdoor Learning Experience 24





சுற்றியுள்ள தாவரங்களை அறிவோம்... 26

# Thisaimaani July 2018

www. azimpremjifoundationpuducherry.org



Addressing Number Sense Challenges 28



பாடல் எழுதி எழுத்துக்களை அறிவோம் 30




வாசித்தலில் வித்தியாசம் 32

யார், யார், யார்? 34

புதிர் விளையாட்டின் கற்றல் பகிர்வுகள் 36

கௌதாரியும் முயலும் 38



இயற்கையை வருணித்தலும் வாசித்தலும் 41

இயற்கை 44

இயற்கை 46

காடு எம் வீடு 49



ஒரு கதை சொல்லவா? 51

என் குழந்தைகளும் எனக்குள் நடக்கும் கற்றலும்... 55



விசையும் இயக்கமும் 58

## Teaching Resources | கற்பித்தல் வளங்கள்

Activities, projects and resources for upcoming lessons | இப்பகுதியில் வரவிருக்கும் பாடங்களுக்கான செயல்பாடுகள், செயல் திட்டங்கள் மற்றும் வளங்களை பகிர்ந்துள்ளனர்



Learning Circle 61

## Event updates | நிகழ்வுகள்

Briefings from teacher discussions, workshops and exposure visits in the last two months. | இப்பகுதியில் கடந்த இரண்டு மாதங்களில் நடந்த ஆசிரியர் விவாதங்கள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் களப்பயணங்கள் பற்றிய சிறு விளக்கங்கள் உள்ளன.

Art in Education 63



Documentary Screening and Discussion – Island of Lemurs 64

# Thisaimaani July 2018

www. azimpremjifoundationpuducherry.org


Have you seen forests in cities? 64

Engaging learners in EVS classroom 65


Are Plastics really needed for our life? 65





Exposure Visit to Nadukuppam GHSS and Pitchandikulam Forest 66

Nature and Pedagogy of Mathematics 67


Number Skills – Workshop Summary 68

Workshop on Motion 69

வகுப்பறையைத் தயார் செய்வோம் 71





கைவினையும் கதையும் 74

கதையும் கலையும் - திரு . எழில் அவர்களின் பயிற்சிப்பட்டறை அறிக்கை 76





பறை இசையும் பாட்டும் 78

கதை கூறலும் கலந்துரையாடலும் 82


**School Gallery |**
**பள்ளிச் நிகழ்வுகள்-தொகுப்பு**

Photo updates from events that happened in government schools Events at School | இப்பகுதியில் அரசு பள்ளிகளில் நடந்த நிகழ்வுகள் பற்றிய புகைப்பட தொகுப்பு அமைந்துள்ளது.




World Environment Day Celebration 84





Foldscope – Microscopy for all 85

தேசிய வாசிப்பு நாள் 86





Reading Month Celebration 87

Student's Day Celebration 87

Photo Gallery 89

# தமிழகத்தின் மூத்த கல்வியாளர் எஸ்.எஸ் இராஜகோபால் அவர்களுடன் ஒரு உரையாடல்




இளம் வயதில் கல்விப்பணியைத் துவங்கியவர், இன்றும் அரசுப்பள்ளிகளைக் காப்பாற்ற அயராது உழைத்து வருகிறார். தேசிய தொழிற்கல்வியின் கல்விக்குழு உறுப்பினர். பல மாநிலங்களின் கல்விக்குழு ஆலோசகர், கல்வியாளர், சிந்தனையாளர், கல்வி செயல்பாட்டாளர்… என அறியப்படுபவர் எஸ். எஸ். இராஜகோபால்.

**1.எந்த வயதில் தலைமை ஆசிரியர் ஆனீர்கள்?**

1950 இல் அந்தியூர் மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியில் கணித ஆசிரியராகச் சேர்ந்தேன். அக்காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளும், உதவி பெறும் தனியார் பள்ளிகளும் தான் கல்வி அளிக்கும் பொறுப்பினை ஏற்றிருந்தனர். அரசின் பங்கு மிக மிகக் குறைவு.

அரசு, ஆசிரியர் கல்வி நிறுவனங்களோடு இணைந்த மாதிரிப் பள்ளிகள் மட்டுமே கல்வித் துறையின் நேரடிப் பொறுப்பில் இருந்தன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மான்யம் அளிப்பதோடு சரி.

முதல் பதினாறு ஆண்டுகள் கழகப் பள்ளிகளிலேயே பணி புரிந்தேன். அதில் படித்த மாணவர்களுள் ஏறக்குறைய அனைவரும் முதல் தலைமுறை மாணவர்கள். ஆங்கிலப் பாடத்திட்டம் கடுமையாக இருக்கும். ஆனாலும் கல்வி ஒன்றே தங்கள் வாழ்வில் ஒளியூட்டும் என்று உறுதியாக நம்பிக் கற்று வெற்றி பெற்றனர். நான் எனது 25ஆம் வயதிலேயே தலைமையாசிரியர் ஆனேன்.

**2. ஒரு தலைமையாசிரியராக உங்களுக்கான அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்தினீர்கள்?**

ஒரு முறை எனது பள்ளியில் மாணவர் சேர்க்கை அதிகமாயிடுச்சு. ஆனா, வாத்தியாருங்க பத்தல. அந்த ஊரில் டிகிரி படிச்சுட்டு ஒருத்தர் விவசாயம் செய்வது எனக்குத் தெரியும். அவரைக் கூப்பிட்டு, 'ஏம்ப்பா பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளைங்களுக்குச் சொல்லித் தர வாத்தியார் இல்ல, நீங்க வேலைக்கு வந்துடுங்க' என்றேன். அதுக்கு அவரு, 'ஏனுங்கய்யா, பருத்தி போட்டு லட்ச ரூபா சம்பாதிக்கிறேன், இது என்ன 100 ரூபா உத்யோகம்… அப்படீன்னா நான் சொன்னேன்…. 'இது சம்பளத்துக்காக இல்லீங்க, சமுதாயத்துக்காக வாங்க…' அப்படின்னு சொன்னேன், அவரும் சரின்னுட்டார், நானே அப்பாயின்ட்மென்ட் போட்டுட்டேன்.

ஃபைல் எழுதி வச்சிட்டேன், அதாவது பள்ளி திறந்து செயல்படும் நாளில் மாணவனுக்கு கல்வி தர ஆசிரியர் இல்லாத சூழல் என்பது மிகப் பெரிய

பாவமும் குற்றமும் (sin and crime), ஆகவே தலைமை ஆசிரியராகிய நான் எனது பள்ளி மாணவருக்குப் புதிய ஆசிரியரை நியமிக்கிறேன்னு எழுதிக் கையெழுத்துப் போட்டுட்டேன், ஆனா கலெக்டர் இதனால ரொம்ப கோபமாய்ட்டார், ஏன்னா அவரு தான் பொறுப்பு, என்னைய ஒரு வார்த்தைக் கேட்காம செய்துட்டீங்களேன்னு கோபப்பட்டாரு. அதோடு இல்லாம, ஊரில் காலையில் 7:30 மணிக்கெல்லாம் கூப்பிட்டு அனுப்பிட்டாரு, அந்த ஹெட்மாஸ்ட்ர வரச் சொல்லுங்கன்னு...

நானும் போய்ட்டேன், உட்காரச் சொன்னார்.... உட்கார்ந்தேன்.. ரொம்ப சத்தம் போட்டார். என்னயக் கேட்காம எப்படி நீங்க வாத்யார நியமிக்கலாம்? அதோட sin and crime வேற எழுதி வச்சுருக்கீங்க என்று கலெக்டர் கேட்க , நான் உங்களப் பத்தி எழுதலயே, கல்வித் துறைக்குத் தானே எழுதினேன்னு தைரியமா சொன்னேன், அப்புறமும், நான் என்ன பண்றேன்னு பாருங்க, உங்கள வேற ஊருக்கு மாத்தப் போறேன்னார்.

சரி, அதனாலென்ன எங்க போட்டாலும் இது அரசுப்பணி, நான் போய் வேலை செய்வேன்னு சொல்லிட்டு வந்துட்டேன், வெளியில நான் நடந்து வரும்போது என்னைப் பார்த்த தோட்டக்காரர், “பெரியய்யா (கலெக்ட்டரை அப்படியே அழைக்கும் பழக்கம் அன்று இருந்தது) இந்த வாத்யாரு ஹெச்செம்மா நம்ம ஊருக்கு வந்த பிறகுதான் பிள்ளைங்க நல்லாப் படிக்கிறாங்க, ரொம்ப நல்லவருன்னு அவர் கிட்ட என்னப் பத்தி சொல்ல, அந்த சமயத்தில் ஊர் பிரஸிடென்ட் நம்ம ஊர் வாத்தியார், நிறைய உதவி பண்றாங்க எனவும் கூற, கலெக்டர் அப்புறம் புரிஞ்சுகிட்டு என்னய மாற்றம் எதுவும் செய்யலங்க...” என்றார்.

**3. உங்கள் பணிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட பாடத்திட்டம் பற்றிய உங்கள் நினைவுகளைப் பகிருங்கள்**

“நியூ மேத், நியூ சைன்ஸ் ஆகியவை கொண்டு வரப்பட்டன, அவை முந்தைய பாடத்திட்டங்களிலிருந்து முழுமையாக மாற்றப்பட்டது”. அது, ஸ்புட்னிக்கிற்குப் பின் அமெரிக்கக் கல்வித் திட்டத்தில் உருவாக்கப்பட்ட மாற்றங்களை உள்ளடக்கியதாம்.

**4. தமிழக அரசின் புதிய பாடத்திட்டம் பள்ளிக் குழந்தைகளை எந்த அளவிற்கு அரசுப் பள்ளிகளை நோக்கி ஈர்க்கும்?**

பாடத்திட்டம் எதுவும் ஒரு புரட்சியை உருவாக்காது. அரசின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளினின்று தான் கல்விக் கொள்கை பிறக்கும். அவற்றில் மாற்றம் இல்லையென்றால் எப்பாடத்திட்டமும் புரட்சியை உருவாக்காது. நாட்டு நலனை முன்வைக்காது தனி நபர் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பாடத்திட்டங்களை உருவாக்கப்பட்டுள்ளன. எத்தகைய இந்தியா, எத்தகைய தமிழ்நாடு என்பவை வரையறுக்கப்படாது நீட் போன்றவற்றை மையப்படுத்தியுள்ளது. தொடக்கக்கல்வி தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றது. நன்மாணிக்கங்கள் பலவும் எட்டாம் வகுப்பு வருமுன்னே மறைந்து விடுகின்றனர்.

வகுப்பறை தான் முக்கியம். உன்னத பாடத்திட்டமும் குப்பையாகலாம். மென்னையான பாடத் திட்டம் உன்னதத்தை எட்ட வைக்க நல்லாசிரியரால் முடியும்.

பாடத்திட்ட மாற்றத்தோடு வகுப்பறையை மேம்படுத்த வேண்டும். அது ஆணைகளால் முடியாது. ஆசிரியரின் அடிப்படை அணுகுமுறையில் மாற்றம் வேண்டும்.

**5. QR CODE.....முறை பற்றித் தங்கள் கருத்து?**

QR CODE நவீன கணினி உத்திகள், கல்வி தனிநபர் வளர்ச்சிக்கு வித்திட வேண்டும் என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டது. தாமதமாகக் கற்கவும், மதிப்பீட்டுக் கொள்ளவும் உதவும். கல்வி மறுக்கப்பட்ட எளியவர்க்கு ஆசிரியரே உற்ற துணை. சிறப்பான பயிற்சியும், அறிவும் தேவைப்படும் ஒரு உத்தி.

**6. தனியார் பள்ளிகளின் ஆதிக்கம் எந்தக் காலகட்டத்தில் பெருகியது?**

இன்று புற்றீசல் போலப் பரவியிருக்கும் தனியார் பள்ளிகள், தமிழகத்தில் 1978 ஆம் ஆண்டில் தான் கட்டணப் பள்ளிகளாகத் தொடங்கப்பட்டன. அதே போல, சரியாக அதே நேரத்தில் தான், பொதுப்பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிறைவு செய்யக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

முக்கியமான பாடங்களைச் சொல்லித் தர ஆசிரியர்கள் இல்லாமலேயே மேல் நிலைத் தேர்வை எதிர்கொள்ளும் அவல நிலைக்கு, எளிய குடும்பங்களிலிருந்து வந்த மாணவர்கள் தள்ளப்பட்டனர். இந்த நிலையிலும் அந்த எளிய மாணவர்கள் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றுத் தேறினார்கள் என்றால் அவர்களது கல்வித் தரத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

**7. இந்த சில நாட்களாக தமிழகம் முழுவதும் 800 பள்ளிகள் மூடுவதாக வந்துள்ள செய்திகள் பற்றி உங்கள் கருத்தும், ஆசிரியர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவதும் என்ன?**

1991 யில் உலகவங்கி, அனைவருக்கும் கல்வி 2000 பிரகடனம் வெளியிட அனைத்து நாட்டுத் தலைவர்களின் கூட்டத்தை ஷோம்டியான் நகரின் கூட்டியது. கட்டாயக் கல்வி என்பது தொடக்கக்கல்வி என்று சுருக்கிவிட்டது. இன்னமும் அவ்விலக்கை எட்டாத நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பெயரளவிற்கு நிதி உதவி என்று சொல்லிவிட்டு கல்வி பற்றிய முடிவுகள் அனைத்தையும் அதுவே மேற்கொண்டது. டிபிஈபி, எஸ்.எஸ்.ஏ போன்ற எல்லாத் திட்டங்களும் உலக வங்கியால் திணிக்கப்பட்டது. கல்வி, மருத்துவம் தனியார் பொறுப்பில் விட வேண்டுமென்றும் அரசின் பங்கு பெயரளவில் இருந்தால் போதும் என்ற உலக வங்கியின் பரிந்துரையை ஏற்று தனியார் பள்ளிகளை வெகுவாக வளர்த்தது. இதன் விளைவு இன்று அரசுப் பள்ளிகள் மூடல், ஆசிரியர்கள் ஒன்றும் செய்வதற்கில்லை. ஒரு பள்ளி இருக்கும்பொழுது மற்றொரு பள்ளிக்கு அனுமதி வழங்கப்பட்டது என்ற விதி காற்றில் பறக்கவிடப்பட்டது. அரசின் அறிவிக்கப்படாத கொள்கையை எதிர்த்து நிற்கமுடியுமா?

**8. கல்வியாளர்கள் என்று யாரைக் குறிப்பிட வேண்டும். ஆசிரியர்களும் அவர்களும் ஒன்றா? ஆசிரியர்களுக்குத் தெளிவுபடுத்த இதை விளக்குங்களேன்.**

தமக்கென்று ஒரு கல்விக் கொள்கையைத் தாமாகவே வகுத்து அதனைச் செயல்படுத்துவரே கல்வியாளர்கள். ஆசிரியர்க்குக் கல்விக் கொள்கை தேவையில்லை. வெறும் பாடம் கற்பிப்பவர். ஒரு கல்விக்கூட நிர்வாகியோ, பாடநூல் எழுதுபவரோ கல்வியாளர் ஆகமாட்டார்.

(மேன்மை ஜூன்-18 இதழில் இருந்து எடுக்கப்பட்ட சிறுபகுதி. நன்றி மேன்மை)

கணித ஆண்டாகப் பரிந்துரை

ஓராண்டு கர்நாடக மாநிலத்தில் நிறைய மாணவர்கள் கணித்தில் தோல்வி அடைந்தனர். அம்மாநிலக் கல்விச்செயலர் கணித பாடம் கற்பித்தலை மேம்படுத்த ஆலோசனை பெற எஸ் எஸ் ராஷகோபால் அவர்களை அழைத்திருக்கிறார். அவர்களால் செல்ல முடியவில்லை. பாடத்திட்டத்தையும் வினாத்தாளையும் அனுப்புமாறு கேட்டு சில விஜயங்களை பரிந்துரைத்துள்ளார். அப்பரிந்துரைகள் செயல் முறைப் படுத்தப்பட்ட்தோடு கணித ஆண்டாகவும் அறிவிக்கப் பட்டது.

# ஆயிஷா - எங்களைச் செதுக்கிய சிற்பி

**ஆசிரியருக்கு அறிவு புகட்டிய இளம் விஞ்ஞானியை மேடையேற்றினோம், மாணவரின் மனநிலையை மற்றவரும் உணர...**

ஒரு நல்ல புத்தகம் நல்ல நண்பர் மட்டுமல்ல, நம்மையே மாற்றக்கூடிய வல்லமை படைத்தது. இன்று நல்ல ஆசிரியராக வலம் வர எனக்கு நிழலாய் என்னுடன் இருக்கும் என் ஆயிஷாவை மேடையில் திசைமானி வழியே காட்சிப்படுத்த எண்ணினேன். என் ஆயிஷா என்னை எப்படி நல்ல ஆசிரியராக மாற்றினாள். அதைப் போலவே, பல நல்ல சிறந்த ஆசிரியர்கள் உருவாக என் ஆயிஷா உதவுவாள் எனும் நம்பிக்கையில் தோன்றியது தான் என் ஆயிஷாவிற்கு நான் உயிர் கொடுத்தது. புத்தகத்தைப் படித்து உணர்வதை விட நாடகம் அதை இன்னும் உணர்வுப் பூர்வமாக கொண்டு செல்லும் என்பதால் அதைச் செயல்படுத்தத் துடித்தேன்.

**கதை உயிரோவியமானது**

நாடகத்தில் திருமதி. கவிதா (ஆசிரியை, அரியாங்குப்பம் மணவெளி) திருமதி. கெஜலட்சுமி (ஆசிரியை, கரிக்கலாம்பாக்கம்) ஆசிரியராகவும் ஆயிஷாவாகவும் நடித்தனர். நாடகத்தைப்பற்றி விவாதித்த பொழுது, பலரின் ஒட்டுமொத்த கருத்தும் எண்ணமுமே என்னை ஆயிஷாவின் டீச்சராக்கியது. இதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆயிஷாவின் டீச்சராக என்னால் நடிக்க முடியுமா என்பது இன்று வரை நம்ப முடியவில்லை.



நாடகத்திற்கான கதையைத் தயாரித்து எழுதினோம். பல நாட்கள் உட்கார்ந்து யோசித்து காட்சிகள் அமைத்தோம். இது உண்மையாக நடந்த நிகழ்ச்சி என்பதால் கட்டுக்கதை எழுத முடியாது. நம் விருப்பம் போல் காட்சிகளை மாற்ற முடியாது கொடுக்கப்பட்ட நேரமோ 15 நிமிடம் அதற்குள்ளாக என்ன? எதை? எப்படி? கொடுப்பது என்பது மிகவும் சிக்கலாகவே இருந்தாலும் துணிந்து கடுமையாக உழைத்து களத்தில் இறங்கினோம்.

நடித்துப் பழகினோம். எங்களால் நடிக்க இயலவில்லை. ஒவ்வொரு முறையும் பயிற்சி செய்யும் பொழுது அழுது நின்ற நேரம் அதிகம். நான் தான் ஆயிஷாவுடன் வாழ்கிறேன் என்றால் என்னுடன் இந்த நாடகத்தில் நடித்த அத்தனை பேரும் ஒவ்வொரு முறையும் அழுதோம். அப்பொழுதுதான் தெரிந்தது ஆயிஷா என்னை மட்டும் தாக்கவில்லை, பலரின் இதயத்தை தாக்கியிருக்கிறாள். பல நல்ல ஆசிரியர்களுடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அதனால் தான் அரசுப்பள்ளிகள் இன்றும் செழிப்பாக ஆலமரமாய் கம்பீரமாக நிற்கின்றன என்பதை அறிந்தேன்.

**நடிப்பின் நுணுக்கங்கள்**

அந்தப் புத்தகம் உரைநடையில் ஒரு வரலாறு போல் இருக்கும். கடந்த கால மற்றும் நிகழ்கால நிகழ்வுகளை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. இத்தருணத்தில் நாடகத்துறையில் அனுபவம் பெற்ற திரு. அருணகிரி அவர்கள் மிகச் சிறப்பாக எங்களை வழிநடத்தி நடிக்க வைத்தார்.

நாடகம் என்றால் சும்மா கையை அசைத்து வசனம் பேசுவது என்ற என் எண்ணம் முழுதாக மாறியது. இதை இப்படித்தான் வெளிப்படுத்த வேண்டும், இங்கு நின்று தான் அதைச் சொல்ல வேண்டும்

என்ற வரைபடமும் தேவை என்பதை உணர்ந்தேன். குழந்தைகளை நாடகம் நடிக்க வைக்கும் பொழுது என்னென்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டேன். இதைப்போல செய்தால்தான் அது பார்வையாளர்களைக் கவரும். மேலும் சொல்லக் கூடிய விஷயமும் அவர்களுக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்தேன்.

ஒவ்வொரு முறையும் திருத்தம் செய்யும் பொழுது வருத்தமாகவும், கோபமாகவும் தான் இருந்தது. நாளை நாடகம் நடத்தப்பட வேண்டும் என்பதால் எனக்கு பயம் வந்து விட்டது. ஒரு கட்டத்தில் என்னால் முடியாது என்ற முடிவுக்கே வந்து விட்டேன் ஆசிரியரும் மற்ற அனைவரும் என்னை ஊக்கப்படுத்தி நடிக்கச் செய்தனர். ஆசிரியர் என்னைச் செதுக்க ஆரம்பித்து விட்டார். அதற்கு நான் முழு ஒத்துழைப்பு தருவதில் ஆர்வமும் ஈடுபாடும் இருந்தாலும் நேரம் இல்லையே என்பது எங்களின் வருத்தமாக இருந்தது. முயன்று நடித்துப் பழகினோம். நாடகம் முடிந்த பிறகுதான் ஐயோ, நடிக்காமல் போயிருந்தால் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை நான் இழந்திருப்பேன் என்று தோன்றியது.



நேரமின்மை காரணமாகவோ பயம் மற்றும் கோபம் காரணமாகவோ நான் நடிக்கமுடியாது என்று நினைத்து என் முயற்சியைக் கைவிட்டிருந்தால் இன்று நான் ஆயிஷா டீச்சர் என்ற பெயரை எடுத்திருக்க முடியாது. அனைவரும் என்னை ஆயிஷா டீச்சர் என்று அழைப்பது பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. இந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது முயற்சியுடன் உழைப்பும் தான். என்னால் முடியாது என்று நினைத்து தோல்வியைக் கண்டு துவண்டு, முயற்சியை விடும் பொழுது வெற்றி நம்மை விட்டு தூர ஓடி விடும். நம் இலக்கை நாம் அடைய முடியாது என்பதை உணர்ந்தேன்.



இதைப்போன்றுதான் அனைத்து செயல்களையும் தவறாமல் செய்து முயன்று வெற்றி பெற வேண்டும். ஒரு பிள்ளையைப் படிப்பு வராது, நீ லாயக்கில்லை, நீ உருப்பட மாட்ட, திருந்த மாட்ட போன்ற எத்தனை வசவுகளால் கொல்கின்றோமோ! அக்குழந்தை தளர்ந்து எனக்கு வராது என்ற முடிவுக்கு வந்து விட்டால்... யார் பொறுப்பு? சிற்பி அணு அணுவாக முயற்சித்தால் மட்டுமே அழகிய சிலை செய்ய முடியும். அதை விடுத்து ஆத்திரமும், அவசரமும் கொண்டால் கல் சுக்கு நூறாக உடைந்து விடும் என்பதை உணர்ந்தேன். முடியாது என்ற வார்த்தையை மறந்தும் பயன்படுத்தக் கூடாது என்று முடிவு செய்ததோடு எம் பள்ளிக் குழந்தைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் இதை உணர்த்த முயல்கிறேன்.

**எங்கள் இதயத்தைத் துளையிட்ட ஆயிஷா**

ஆயிஷா வெறும் கதையாகிவிடக் கூடாது. ஒரு குழந்தையை அடித்துத் துன்புறுத்தினால் தான் அவர்கள் மனம் பாதிக்கும் என்பதல்ல. கடினமான ஒரு சில வார்த்தைகள் கூட வேண்டாம், அவர்கள்

**""நாடகம் என்றால் சும்மா கையை அசைத்து வசனம் பேசுவது என்ற என் எண்ணம் முழுதாக மாறியது. இதை இப்படித்தான் வெளிப்படுத்த வேண்டும், இங்கு நின்று தான் அதைச் சொல்ல வேண்டும் என்ற வரைபடமும் தேவை."**

**கடினமான ஒரு சில  வார்த்தைகள் கூட வேண்டாம், அவர்கள் சொல்ல வந்ததை நாம் கேட்காமல் அலட்சியம் செய்தால் கூட அவர்கள் மனம் வாடும், உடனே சோர்ந்து விடுவர். ஏன், நமது பார்வை ஒன்றே (கோபம், அலட்சியம், அதிகாரம், ஆணவம் கலந்த பார்வை) அவர்களை அடங்கி ஒடுங்கச் செய்து விடும்**

சொல்ல வந்ததை நாம் கேட்காமல் அலட்சியம் செய்தால் கூட அவர்கள் மனம் வாடும், உடனே சோர்ந்து விடுவர். ஏன், நமது பார்வை ஒன்றே (கோபம், அலட்சியம், அதிகாரம், ஆணவம் கலந்த பார்வை) அவர்களை அடங்கி ஒடுங்கச் செய்து விடும் என்பதை உணர்த்தவே இதை நான் காட்சிப்படுத்த எண்ணினேன். சிறிது யோசித்தால் நமக்கே உண்மை புரியும். நம் குழந்தையாக இருந்தால் என்ன செய்வோம். அவர்கள் கேட்கும் முன் அவர்களின் தேவையறிந்து எதையும் செய்யத் தயாராக இருக்கின்றோம். இல்லை என்ற பதில் சொல்ல நமக்குள் எவ்வளவு தயக்கம். அது போலத்தான் நம்மை நாடி வரும் குழந்தைகளும், அவர்களிடம் நாம் காட்டும் அலட்சியம், பாரபட்சம், அடக்குமுறை அவர்களைத் தானாகவே ஒடுக்கி விடும் என்பதில் துளியும் ஐயமில்லை. வகுப்பறை என்பது நமது இடம் அல்ல; நமக்கான ஒன்றல்ல; அது குழந்தைகளுடையது; அவர்களுக்கானது. இந்த எண்ணம், நம்பிக்கை குழந்தையிடம் ஏற்படும் பொழுது மட்டுமே குழந்தை ஈடுபாட்டுடன் கற்க முன்வரும். ஏன்? நாமும் அப்படித்தானே? நமக்குப் பிடித்தால் மட்டுமே, நம்பிக்கை, ஆர்வம் இருந்தால் மட்டுமே நாம் செயல்களில் ஈடுபடுவோம். முயற்சி செய்ய அடுத்த அடி எடுத்து வைப்போம். நமக்கே இவ்வாறென்றால், நம்மை நாடி வரும் குழந்தைகளை நாம் எப்படித் தயார்படுத்த வேண்டும். குழந்தைகள் ஒவ்வொருவரும் கண்ணாடி பாத்திரம் போன்றவர்கள். மிக கவனமாகக் கையாள்வது ஆசிரியராகிய நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை நாம் மறக்கவோ மறைக்கவோ முடியாது. ஆசிரியர் என்ற அதிகாரத்தை விடுத்து, கற்றலுக்கு உதவி செய்பவர், சூழலை ஏற்படுத்தித் தருபவர் என்ற நினைவோடு வரும் காலங்களில் அடியெடுத்து வைப்போம்.

### எங்களை உருமாற்றியவள்

என் ஆயிஷா 2001-ல் எனக்கு அறிமுகமானாள். என் ஆயிஷா  என்னுள் ஏற்படுத்திய பாதிப்பால் அன்று முதல் இன்று வரை எந்த சந்தர்ப்பமாக, எந்த நேரமாக, எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும், என்னிடம் செய்தியைச் சொல்ல வரும் குழந்தையிடம் பிறகு கேட்கிறேன், சும்மா இரு கையைக்கட்டு, வாயை மூடு போன்ற அர்த்தமற்ற வார்த்தைகளைச் சிறிதும் பயன்படுத்தாமல் அவர்களுக்கு மதிப்பளித்து, அவர்கள் கூறும் செய்தியைக் கேட்டு பதிலளித்தபின்தான் எனது பணியை நான் தொடருவேன். என்னுடைய பணியில் எத்துணை ஆயிஷாக்களுக்கு நான் உயிர் கொடுத்திருக்கிறேன் என்று இன்று நினைக்கும் பொழுது எனக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதுடன் கொஞ்சம் திமிராகவும் தான் இருக்கின்றது. நல்லாசிரியராக நான் உருவாகக் காரணமாக இருந்த ஆயிஷாவுக்கு நன்றி கூறுவதுடன், இந்த நாடகம் என்னை ஆயிஷா டீச்சராக மாற்றி மீண்டும் எனக்கு மறு ஜென்மம் கொடுத்திருப்பதை என்னால் உணரமுடிகிறது. இந்த அனுபவத்தைப் பகிர்ந்தால் இன்னும் எத்தனை ஆயிஷா டீச்சர்கள் உருவாகி ஆயிஷாக்கள் என்னும் வேரைத் தாங்கும் ஆலமர விழுதுகளாக உருவாகத் தயாராக இருக்கின்றனரோ!!!

### ஆயிஷா - அரிதான அனுபவங்கள்

ஆயிஷா மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் புத்தகம்.  ஒவ்வொரு முறை படிக்கும் போதும் கண்ணீர் சிந்த வைக்கும் புத்தகம்.  இந்தப் புத்தகம் நாடகமாக அரங்கேறியது இந்த ஆண்டு மேடையில் திசைமானியில். சிலிர்க்க வைத்த அனுபவம். சிறிய கதாபாத்திரம் என்றாலும் நாடக ஒத்திகை நான்கு நாட்களில் கிடைத்த அனுபவம் விலைமதிப்பில்லாதது. எங்கு? எப்படி? வசனம் பேசுவது அரங்கு அமைப்பது எவ்வாறு? என்பது போன்ற நுணுக்கங்கள் அறிந்தேன். பொதுவாக நாம் வகுப்பறையில் நாடகம் சொல்லிக்கொடுக்கும் போது வசனத்தில் மட்டுமே கவனம் செலுத்துவோம். ஆனால் இந்த ஆயிஷா நாடகத்திற்குப் பிறகு வசனங்கள் மட்டும் நாடகத்திற்கு உயிர் ஊட்டுவதில்லை அதையும்

தாண்டி காட்சி அமைப்பு, கதாபாத்திரங்கள் நிற்கும் இடங்கள், நடக்கும் முறை, உரையாடும் முறை அரங்கில் பயன்படுத்தப்படும் பொருட்கள் என அனைத்துமே நாடகத்திற்கு உயிரோட்டமானவை. இந்த நாடகத்தின் ஒத்திகை பார்க்கும்போது கற்றுக் கொண்டது அதிகம். அழுதுகொண்டே பேசுவது பார்வையாளர்களைக் கவராது என்றார் எங்களுக்குப் பயிற்சி அளித்த ஆசிரியர்.

ஆயிஷா புத்தகம் நாடகமாக மாறத் தொடங்கியதும் பற்பல ஆச்சரியங்கள் காத்திருந்தன. நாடகத்தின் துவக்கமே வித்தியாசமாக இருந்தது. நாலாபுறமும் பாடம் நடத்தும் ஆசிரியரின் குரல்கள், சந்தேகம் கேட்கும் மாணவர்களை அதட்டியும் கண்டித்தும் ஆசிரியரின் குரல்கள் எனத்தொடங்கியது. இந்தச் சிறிய காட்சி ஆயிஷாவை அறிமுகப்படுத்தவில்லை, கதை மாந்தர்கள் யாரையும் அறிமுகப்படுத்தவில்லை. ஆனால் எந்த மாதிரியான நாடகம் எனப் பார்வையாளர்களைச் சிந்திக்க வைப்பதாக இருந்தது. இதிலிருந்து நாடகத்தின் துவக்கமே பார்வையாளர்களை எதிர்பார்ப்பை அதிகரிக்க வைப்பதாக இருக்க வேண்டும் என அறிந்தோம்.

ஆயிஷா நாடகத்தில் ஒருபுறம் படுக்கை, புத்தக அடுக்கு, மையத்தில் கரும்பலகை, சிறிய சமையலறை என அமைத்தோம். இந்த அரங்கை வடிவமைக்கும் போது பயிற்சி அளித்த நாடக ஆசிரியர் அரங்கில் வைக்கப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் உயிருண்டு; அவற்றைக் காட்சிகாக மட்டுமே அல்லாமல் பயன்படுத்தவும் வேண்டும் என்றார்.

உணர்ச்சி வசப்பட்டு உரக்க பேசுவதால் மட்டுமே புரிய வைக்க முடியும் என்பது தவறு. அமைதியாகவும் அழுத்தமாகவும் நமது கருத்துக்களைக் கூறினால் போதுமானது என்றது எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது.

நாடகத்தில் ஒருவர் நடிக்கும் போது, மேடையில் அந்தக் காட்சியில் இருக்கும் மற்றவர்கள் சும்மா இருக்கக் கூடாது என்றும், நின்று கொண்டும் நடந்து கொண்டு மட்டுமே நடிக்கக் கூடாது என்பதையும், மேடையை முழுவதுமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதும் நாங்கள் கற்ற சிற்சில நுணுக்கங்கள். மொத்தத்தில் ஆயிஷா எனது வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட ஒரு நெகிழ்வான அனுபவம்.






**மு.சாந்தகுமாரி,** த.ஆ,
அ.தொ.ப வடுவகுப்பம்



**சு. கவிதா,** தொ.ப.ஆ,
அ.தொ.ப. மணவெளி (அ)

# பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்

**பெரியாரைப் போலவே, பெரியாரின் பெயரைச் சூட இப்பள்ளி பல போராட்டங்களை எதிர் கொண்டது.**

பெரியாரின் வாழ்க்கைப் புத்தகத்தின் பெரும்பாலான ஏடுகள் போராட்டங்களும் எதிர்ப்புகளும் நிறைந்தவையாகவே இருக்கின்றன. முரண்பாடுகளையே, முக்தி பெறச் செய்யும் வழியென்று நினைத்திருந்த முட்டாள் சமூகத்தினர் புத்தி பெறப் போராடிய மாமனிதன் தந்தை பெரியார். பறையரும் பாமரரும் பாராள வேண்டும் என்ற அவருடைய உயரிய எண்ணத்திற்கு உரமிட்டவர்கள் வெகு சிலரே. அவரை விமர்சித்தவர்கள்தான் ஏராளம். இப்படிப்பட்ட சூழலில், தன்னலம் கருதாத் தியாக உள்ளத்தின் திரு உருவாக விளங்கியவரின் பெயரை ஒரு பள்ளித் தாங்கி நிற்கிறது என்றால் அதன் பின்புலம் யாராக இருக்கக்கூடும்? பெரியாரைப் போலவே அந்தப் பள்ளியும் அவர் பெயரைச் சூடுவதற்குப் பல போராட்டங்களைச் சந்தித்து இருக்குமோ என்ற எண்ணம் என் உள்ளத்தினுள் ஓடிக்கொண்டிருந்தது. அரியாங்குப்பம் தந்தை பெரியார் மேனிலைப் பள்ளிக்கு அப்பெயர் வரக் காரணமாக இருந்தவர்கள் யார்? அதன் வரலாறு என்ன என்பதைத் தேடி என் பயணம் தொடங்கியது. இம்முறையும் எனக்கு வழிகாட்டியவர் என் மதிப்பிற்குரிய ஆசான் திரு. இளங்கோ தாமோதரன் அவர்கள்தான்.

யாரிடம் கேட்டால் இதுபற்றிய தகவல்களைப் பெறமுடியும் என்று கேட்க அவரை தொலைபேசியில் நான் தொடர்புக் கொண்டபோது, ‘பெரியாரின் பெயரை பள்ளிக்கு வைக்க வேண்டும்’ என்று முன்மொழிந்தவரின் சீடன் நான்: அவரோடு சேர்ந்து உழைத்தவர்களில் நானும் ஒருவன் என்றார். இவ்வளவு எளிதாக என் வேலை முடியும் என்று நான் சிறிதளவும் நினைக்கவில்லை.



உள்ளத்தில் மகிழ்ச்சிப் பெருக்கு பொங்க உடனடியாகத் தயாராகிவிட்டேன் அவரிடம் அந்த உண்மைக் கதையைக் கேட்பதற்கு. அவ்வளவும் தொலைபேசியிலா? அது சாத்தியமல்ல, நானே நேரில் வருகிறேன் என்றார். சற்றே ஏமாற்றத்துடன் தொலைபேசியினைத் துண்டித்தேன். மழை வந்து தடைப் போடவே, நான் வெகு நாட்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஒரு நாள் ஐயா அவர்கள் எங்கள் இல்லத்திற்கு வருகைபுரிந்தார். வெகு நாட்களாக படிக்கத் துடித்த 'பொன்னியின் செல்வன்' புத்தகம் கையில் கிடைத்தது போன்ற ஓர் உணர்வு. ஆர்வம் மேலிட, பேனாவும் நோட்டுமாக அவருடன் அமர்ந்துவிட்டேன். அவர் சொன்னது சொன்னபடியே உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

ஆரிஃப் மியான் - என்றொரு அற்புதமான மனிதர். அவர்தான் அரியங்குப்பம் பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் அப்போது. 1976-ல் என்று நினைக்கிறேன். நான் அந்தப் பள்ளிக்கு மாற்றலாகிச் சென்றேன். அவருடன் பணியாற்றிய காலங்கள் என்றென்றும் மறக்கமுடியாதவை. ஏனென்றால் அவர் ஒரு மிகச் சிறந்த நிர்வாகி மட்டுமல்ல ; மனிதநேய மாண்பாளரும் கூட. அவரிடம் நாங்கள் கற்றுக் கொண்டது ஏராளம். அவர் ஒரு தமிழ் விரும்பி. பெரியார் பற்றாளர். இப்படி அவரைப் பற்றி அடுக்கிக்கொண்டே போகலாம்.

அவர் எங்கள் பள்ளிக்கு வந்தவுடன் செய்த முதல் வேலை staff council அமைத்ததுதான். ஏனென்றால் ஆசிரியர்கள் மத்தியில் அந்த அளவுக்கு நெருக்கம் இல்லாமல் இருந்ததுதான். பள்ளிச் சார்ந்த எந்த அலுவலாக இருந்தாலும் ஆசிரியர் செயற்குழுவைக் கலந்தாலோசித்த பிறகுதான் செய்வார். அப்படி ஒரு வழக்கத்தை அவர் ஏற்படுத்தியிருந்தார். ஆசிரியர்களை ஒரு குடும்பமாக நினைக்க வைத்த பெருமை அவரையே சாரும்.

எந்தப் பள்ளிக்குச் சென்றாலும் வகுப்பறைகளுக்குப் பெயர் வைப்பது என்பது அவருடைய பழக்கம். அப்படித்தான் அந்தப் பள்ளியிலும் எல்லா வகுப்பறைகளுக்கும் பெயர் வைத்துவிட்டு அவருடைய அறைக்கும் பெயர் வைத்தார் - அது - "பெரியார் பாசறை". அவர் எந்தப் பள்ளிக்குச் சென்றாலும் அவருடைய அறைக்குப் பெயர் பெரியார் பாசறைதான். அந்த அளவுக்குப் பெரியாரின் மீது ஈடுபாடுக் கொண்டவர். அவரைப் பின்பற்றியே நானும் எந்தப் பள்ளிக்குச் சென்றாலும் என்னுடைய வகுப்பறைக்கு பெரியார் பாசறை என்று பெயர் வைக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன்.

அந்த நாளில் பள்ளிகளுக்குப் பெயர் வைப்பது என்பது வழக்கத்தில் இல்லை. பின்பு பள்ளிகளுக்குப் பெயர் வைக்கும் உரிமையை அரசு அந்தந்தப் பள்ளி நிர்வாகங்களிடமே ஒப்படைத்திருந்தது. பள்ளி நிர்வாகம் மற்றும் அப்பள்ளியை சார்ந்த சமுதாய மக்கள் ஒன்றிணைந்து அளிக்கும் பெயரினை அங்கீகரிக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தது.இந்நிலையில் ஒரு நாள், ஆசிரியர் கூட்டத்தினைக் கூட்டி, நம் பள்ளிக்குப் பெயர் வைக்கலாம் என்று நினைக்கிறேன். பகுத்தறிவாளரும் சமூக சமத்துவத்தை நிலைநாட்டுவதையே தன் வாழ்நாள் லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவருமான சமூகச் சீர்திருத்தவாதி பெரியார் அவர்களின் பெயரை வைக்கலாம் என்பது என்னுடைய கருத்து. அதையே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று அவசியமில்லை. உங்கள் விருப்பம் எதுவாக இருந்தாலும் கலந்தாலோசித்துச் சொல்லுங்கள்; நாம் மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பார்க்கலாம் என்றார். ஆசிரியர்கள் அனைவரும் முழுமனதுடன் பெரியாரின் பெயரை வைக்க ஒப்புக்கொண்டனர். எல்லோரும் ஏற்றுக்கொண்டாலும் இந்தச் செயலில் அவருக்குப் பக்கபலமாக இருந்து அதை நடத்திக் கொடுத்தவர் ஆசிரியர் திரு.அரிமதி தென்னவன் அவர்கள்தான். அவரும் ஒரு தீவிரப் பெரியார் பற்றாளர்.

எங்களின் இந்த எண்ணத்தை நடைமுறைப்படுத்தும் செயலின் முதற்கட்டமாக, அன்று அந்தப் பகுதியின் MLA திரு.சுப்புராயன் அவர்களைச் சந்தித்தோம். அவரிடம் எங்கள் கோரிக்கையை வைத்தபோது, மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இவ்வளவு நாளாக இந்தப் பள்ளிக்கு எதிரிலேயே இருக்கிறேன்; எனக்கு இப்படி ஓர் எண்ணம் தோன்றவில்லையே; உங்களுக்குத் தோன்றியதில் மிக்க மகிழ்ச்சி என்று கூறிவிட்டு அதற்கான ஏற்பாடுகளை செய்தார். சட்டமன்றம்வரை எங்களின் கோரிக்கையை எடுத்துச் சென்று அரசிடமிருந்து அதற்கான ஆணையையும் பெற்றுத்தந்தார். அனைத்து

ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு எங்களின் எண்ணம் ஈடேறியது. பெயர் வைத்ததோடு நில்லாமல் பெரியாரின் கழுத்தளவுச் சிலை ஒன்றைப் பள்ளி வளாகத்திற்குள் நிறுவினோம். அதனை திரு. சுப்புராயன் அவர்களே திறந்தும் வைத்தார். அன்றிலிருந்து அரியாங்குப்பம் பள்ளி தந்தை பெரியார் அரசு உயர் நிலைப் பள்ளி ஆனது.

ஆனால், இந்த விஜயம் அவ்வளவு எளிதாக நடைபெறவில்லை. ஏதோ ஆரிஃப் மியான் ஐயா அவர்கள் நினைத்தார். திரு. சுப்புராயன் அவர்களை சந்தித்தார்,பெயர் வைத்தார் என்று சொல்லிவிட முடியாது. அந்த ஊர் மக்களில் பெரும்பாலானோர் அதனை ஆதரித்தபோதும், அப்பகுதியில் வாழ்ந்த உயர்வகுப்பு மக்கள் கடுமையாக எதிர்த்தனர். அதை நேரில் நின்றுப் பார்த்தவர்கள் நாங்கள். ஆனால் அதை இப்பொழுது சொல்லவும் கூடாது. ஏன் இந்த எதிர்ப்பு என்று வினவினேன். பெரியாரின் சமத்துவக் கொள்கைகளை விடுத்து அவருடைய கடவுள் மறுப்புக் கொள்கை அதற்கு முக்கிய காரணமாக அவர்களால் மேற்கோள் காட்டப்பட்டது. அவர்களை பொறுத்தவரை பெரியார் என்றால் கடவுளை மறுப்பவர் மட்டும்தான். அவர் நாத்திகர் இல்லையா? அவருடைய பெயரை வைப்பது எங்களின் உணர்வுகளைப் புண்படுத்துவது போல் உள்ளது என்று அவர்கள் வாதிட்டனர். தொந்தரவும் கொடுத்தனர். ஏன்! மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கே தொந்தரவுக் கொடுத்தனர். பெரியார் பெயரை பள்ளிக்கு வைக்கக்கூடாது என்று போரடினர். அவ்வளவையும் சமாளித்துதான் திரு. சுப்புராயன் அவர்கள் பள்ளிக்குப் பெயர் சூட்டினார். அதன் பின்னரும் பெரியார் எதிர்பாளர்களால் பள்ளிக்கு தொந்தரவுகள் வந்த வண்ணம் இருந்தன. ஓர் உதாரணம் கூற வேண்டுமென்றால்,பள்ளிக்கு உட்பட்ட பகுதிகளை பசுமையாக்கும் பொருட்டு 'மரக்கன்றுகள்' பல ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் நடப்பட்டன. ஆனால் அந்த மரக்கன்றுகள் நடப்பட்ட இரவே பெரியார் எதிர்பாளர்களால் அவைகள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டிருந்தன. இது போன்று பல சம்பவங்களை உதாரணம் கூறலாம். ஆசிரியர்களும் மாணவர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் பெரியாரின் நாத்திக கொள்கையில் மையம் கொண்டிருந்த சமத்துவம் மற்றும் சமூக நீதி ஆகியவற்றில் உறுதியாக நின்றனர். பெரியாரின் போராட்ட குணம் இயல்பாகவே அவரின் சீடர்களிடத்திலும் அமைந்திருந்தது வியப்புக்குரியதன்று! எவ்வளவு சவால்கள் வந்தாலும் மாணவர் சேர்க்கை மட்டும் குறைவதில்லை. பள்ளி ஆசிரியர்களின் கடும் உழைப்பு, காலம் தவறாமை, அர்ப்பணிப்பு ஆகியவற்றின் காரணமாக இது சாத்தியமானது. மூடநம்பிக்கைகளுக்கு ஆதிக்க வெறிக்கும் எதிரான முற்போக்குக் கருத்துக்களை, பள்ளியின் செயல்பாடுகளில் இன்றும் நாம் காணலாம். பாட திட்டத்துடன் சேர்த்து பள்ளி விடுமுறை நாட்களில் மாணவர்களுக்குப் பாரம்பரிய தமிழ் காளையான சிலம்பம் கற்பிக்கப்படுவது எனும் கற்றலுடன் இணைந்த கலை வளர்ப்பு நடவடிக்கை இதற்கு ஓர் உதாரணம்.

எதனையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அதனை வினவி அறியும் பகுத்தறிவும், பெண் கல்வி, பெண்களுக்குச் சொத்துரிமை எனும் பெண் விடுதலை உணர்வும் , ஷாதி மத வர்க்க வேறுபாடுகளற்ற சமுதாயம் அமைய வேண்டும் என்ற சமத்துவ உணர்வும் தான் தந்தை பெரியார் அவர்கள் உயிர் மூச்சாய் நினைத்த கொள்கைகள். அக்காலத்திற்கு மட்டுமின்றி எக்காலத்திற்கும் பொருந்தும் இக்கொள்கைகளை மாணவர்கள் புரிந்து கொண்டு அவர் கனவு கண்ட வளமான சமத்துவச் சமுதாயம் அமைக்கப் பாடுபட வேண்டும்.



**கு. பச்சையம்மாள்**, TGT
அ.பெ.மே.ப காலாப்பட்டு

# நடித்து கற்றோம்

**பாடத்தை எளிதில் கற்க மிகவும் உதவியது உரையாடலும், நடித்து கற்றலும்**

பாடப்பொருள் சிரமமின்றி மாணவர்களைச் சென்றடைய வேண்டும் என்றால் அவர்களை வைத்து ஒரு Role Play பண்ணலாம் என முடிவு செய்தேன்.

Role play - க்கு தேவையான பொருட்களை வகுப்பறையில் உள்ள பொருட்களைப் பயன்படுத்திச் செய்து கொண்டேன். chart, waste invitation cards, straw, sticks, saree box போன்றவற்றை வைத்து முகமூடிகள் உருவாக்கினோம்.

Role play செய்வதற்கு முன் அவர்களிடம் சிறிது நேரம் உரையாடி அவர்களை ஆயத்த படுத்தினேன். ஆர்வமாய் பதில் கூறிய மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப கதாபாத்திரத்தை வழங்கினேன். கதாப்பாத்திரங்கள் வெறும் 3 பன்றிகள் மற்றும் 1 ஓநாய் தான். எனவே மீதம் உள்ள மாணவர்களைத் துணை கதாப்பாத்திரங்கள் வைத்துக் கொண்டேன்.





ஒன்றாம் வகுப்பு மாணவர்கள் என்பதால் அவர்கள் நிலைக்கு ஏற்ற ஓரிரு வாக்கியங்களில் மாணவர்களைப் பேச பயிற்சி அளித்தேன்.

Eg:

what is your name?

My name is Raju.

Now, you are Sonu. What is your name now?

My name is Sonu.

Where do you live?

I live in Straw house

இறுதியாக, கதையின் தலைப்பை ஒரு மாணவி கூறினாள்.

பின்பு மூன்று பன்றிகளும் தம் பெயரையும் தாம் வசிக்கும் வீட்டின் பெயரையும் கூறுவார்கள். முகமூடிகளை மாட்டிகொண்டு, இடையிடையே ஓநாய் என்ன செய்ய போகிறது என்று கூற மூன்று மாணவர்கள் இருந்தனர். காலைப் பேரவையில் மற்ற மாணவர்கள் முன் இந்த Role play வைச் செய்ய வைத்த போது அனைவரும் கண்டு மகிழ்ந்தனர்.

அதன் பிறகு என் மாணவர்கள் அனைவரும் அதை ஒரு கதை போலவே தங்களுக்குள் கூறிக்கொண்டு விளையாட ஆரம்பித்து விட்டனர்.

இச்செயல்பாடு மூலம் மாணவர்களிடம் மிகத் தெளிவாகக் கதையைப் புரிய வைக்க முடிந்தது. மேலும் பயம் மற்றும் தயக்கமின்றி ஆங்கிலத்தில் உரையாட ஓர் ஆரம்பமாய் அமைந்தது.







**L. Rajathilagam,** PST
GPS, Sembiyapalayam.

# Enabling Reading in Class 1

*Developing reading skill through videos and game.*

Developing reading skills of students is one of the primary concerns of a language teacher. It is also a skill that many students struggle with, especially while learning a second language like English. Students are not able to read English even after reaching class 5. Teachers should build confidence among students to use the language without fear, right from the start of school. In this article I discuss the strategy that I use with my class 1 students to enhance their reading skills.

This year, I began teaching with the first lesson of English – Three Little Pigs. Ever since I attended the Acquiring Competence in English (ACE) workshop, I preferred that pedagogy to be followed in class. Students were able to understand things faster when they were taught using the ACE pedagogy.

**Watching a video of the story**

To develop an interest among my students, I decided to first show them a video of the story. So, I took them to our HM's office and showed them the story of the 'Three Little Pigs' from YouTube. Students seemed very interested. At this stage, they were able to identify the characters in the story as *'pannikutti'* and *'nari'.*

Thus using the video as a medium, I was able to help them register the title of the lesson as well as the characters in it.

Following the video session, I helped students recollect the story in the class. When I wrote the title on the board and gave them some practice, they were able to read it by themselves. I do not resort to letter-by-letter reading. Students learn best when they are able to read the text graphically, as a whole.

**Narrating the story**


After they had watched the video, I proceeded to narrate the story by introducing the characters Ani and Bini, who are non-textual, imaginary characters used in all the units of Class 1. The advantage of using these characters is that they help in stringing together all the lessons with a common point to begin narration. They also help in setting a context for narrating the story.

I began narration by showing the picture of Ani and Bini and asking them to identify them. First they identified them as a boy and a girl. Then, I introduced their names. I narrated the story of the Three Little Pigs, as if Ani and Bini were listening to the story from their grandmother.

**Teaching the key words in the story**

As I narrated the story, there were a few things that were achieved:

- When students repetitively came across words from the text, during the narration of the story and in the follow-up activities, they were familiarized with the names of the characters in the story, and some key words like – 'straw', 'sticks', 'bricks', 'big bad wolf, 'huff and puff', 'blow your house', etc.
- When I had asked them questions on how heavy or light certain objects in the class were, they understood the concept of




weight. This helped them in comprehending why the straw house and the stick house were blown away by the wolf.


- After watching the video and listening to the story, students were also able to recollect phrases like 'huff and puff', and 'will blow down your house'.

**Transacting the lesson**

As I mentioned earlier, I always try to help students to practice graphical reading (i.e., reading text as whole, instead of reading letter-by-letter). So, when I had written words on the blackboard and helped them read those, they became familiar with some of the text. After I had familiarized the words, I organized a small game for them.

I arranged words of a sentence, in different chart pieces and mixed them up. Students were asked to sequence the words and form the correct sentence. Optimal support was given while doing this. I stuck coloured pictures of the three houses and the pigs on a foam sheet, along with the corresponding words. This way, students were able to associate the words with the pictures and learn them easily. This also helped them to read those words on their own.

Using this foam board, a game was also played in the class. Students were asked to match names of characters given in bits of chart paper with the pictures of the houses stuck on the foam board.




Students were able to match correctly without assistance.

**Reading process**

After these activities, students were given practice in reading the story from the book. I read out the story several times after which they attempted to read it on their own. By now, students were not only familiar with the story but were also able to read simple words from the textbook. Students also enacted the story using masks of the characters.

**Few hindrances**



Students write in cursive script while the textbook has print script. This confuses them a lot. The previous batch was able to read the textbook quite earlier and at ease than the current batch. I infer, this is because my previous batch of students did not have to practice writing in the cursive style until their second term; whereas, the current batch of students have to write a page of it every day. Nevertheless, progress in reading has only slowed down but is consistent.



**Jaya .R**
GPS, Reddiarpalayam

# Creating Interest Through Picture Interaction and Choreography

*How to create interest among the students through picture interaction and choreography.*

**Introduction**

Teachers often face challenges in their day-to-day teaching. During the last term, I attended a workshop on 'Acquiring Competence in English' (ACE) and this training raised many doubts in my mind regarding the teaching of English to my children; whether I was teaching in the correct way or not.

**In my classroom**

After attending the training, when I implemented the ACE way of teaching in my classroom, my children looked at me in a different way with a question mark on their faces. So, it was very challenging for me to take the initial steps. But I had the confidence to proceed further and experiment it with my students.

So, the first thing, I did in my classroom was **Picture Interaction**.

Firstly, I showed a picture related to the poem or the textbook picture for it and elicited ideas from the students. I asked them to list out the objects and characters in the picture by asking many interactive questions. As the children were listing out, I wrote them on the board's margin. Finally, I asked the students to come towards the board and read the words without spelling it. I felt that the children were interested in this method.

Next, I read the poem to the children with proper gestures and intonation. Then I asked the children to read the poem in groups. With the help of peers, they could easily understand and read the poem. Whenever they faced any difficulty in reading, they immediately asked their peers or me.

The second thing I did was **Choreography**.

Since they had understood the poem, the students planned the scenes by themselves. Then some of the students sang the poem while the others acted out the scenes. Students were very excited to do the choreography session. Now whenever I start to teach a poem, their first question is, 'When are we going to do choreography?' They actively engage in performing the choreography and choose their own roles and decide their actions.

**Conclusion**

Now-a-days I am very satisfied that my children are producing language on their own and I'm trying my best to engage all my children in the classroom processes to help them acquire the second language more efficiently.

*"The goal is concrete, the intention has been set, but if I don't stop and reflect, there's no point to it all!"* - Nicole Arndt.





**Nithiya. M**

GPS, Archivakpet

# Collective Participation and Learning Through Choreography

*Enbling language learning through practicing choreography in the classroom.*

**Introduction**

I am handling Class 4 English. When I was doing unit 1 poem: Wake Up, I first spoke to children about the poem and asked them to share their morning routine. Since they were very interested in sharing, I decided to make the learning of this poem a memorable one. I thought of choreographing the poem since all the children would be able to actively participate. I feel that choreography is an easy and effective way for children to sing, act and fully understand a poem.

**About the poem**

A child (Neha) is sleepy and is not ready to get up from bed. Neha is in her house and the door opens into a garden. Her friend (Raju) comes to wake her up pointing to all of nature that is awake and saying that it is a lovely day. The child (Neha), her friend (Raju), birds, sun, horses, cow, sheep, tiny chicken, ducks, bees, trees and plants are the characters in the poem.

**Process**

I divided students into two groups. The first group comprised of students who were good at reading. The second group included all the other students. While the first group sang the poem, the second group acted according to the lines in the poem. For example, first Neha sleeps and then her friend tries to wake her up while the others act like trees and animals.

**Reflection**

After finishing the choreography, my students eagerly asked me to do this for all the upcoming poems. I was really surprised to see the wonderful performance of my students. They were now thorough with the poem. They were able to fully understand the theme of the poem and each child got a chance to participate in the choreography process. This was greatly satisfying for me. I will always select this technique to teach a poem.



**G. Om Shanthi**
GPS, Kalapet

# The Little Fir Tree – Puppet Show

*Making learning easy and exciting through the use of puppets for story-telling*

**About the story**

This is a story of a Little Fir Tree that was granted four wishes by a magician for its kindness. The first wish of the tree is to get green leaves like its other friends. The wish is fulfilled. However, a goat comes and eats up all the green leaves. The tree makes a second wish - it asks for golden leaves. This time a man steals the leaves. The tree is sad and makes a third wish - it asks for glass leaves. But they break because of the heavy wind. Finally, the tree realized its mistake and went back to its natural form – a little fir tree.

**Topic of reflection**

Using puppets to tell a story is highly entertaining as well as educational in many ways. I have used puppets in my class to tell the story of The Little Fir Tree

**Puppet show**


After teaching the lesson, the story was narrated as a puppet show. Puppets were made out of waste cloths, papers, charts, card boards, socks, sticks, etc. Students were also involved in the show along with their teachers. They provided background sounds like bird calls, rain, etc. Some of them were also handling the puppets while the teachers were narrating the story in English.

It started with “once upon a time, there was a little fir tree...”. Background sounds were added by the children who were blowing a whistle that sounded like birds’ sounds.



“Then a magician entered, who was accompanied by rain”. The sound of rain was used for that scene. “He sat under the tree. The fir tree saved him from getting wet in rain. So, he granted four wishes to the tree for being kind.........so on and so forth”.





It was exciting for both students and teachers to watch and learn through puppetry. It brought the story to life. Students were enthralled by the audio-visual addition to an exciting tale.



## Discussion

We then had a discussion on "Where do you find fir trees? Are there fir trees in Puducherry? Is the Christmas tree also called a fir tree?" and so on.

While discussing the magician, a few children performed some magic tricks using coins, books and money.

## Outcome

- Students were excited and were very happy watching the puppet show. They listened with curiosity. We wouldn't have seen that kind of interest if we had just explained the story with the textbook.

  - Students were able to learn the theme of the lesson 'greed will harm us.' They realised that they should not be greedy for what other people have.
  - They were able to understand the lesson in English.
  - They were very interested in making puppets using clay and cloth.
  - A few pieces of paper and a little paint will make the lesson funny and mesmerizing.

Let us make our little puppet theatre in the classroom and hold children's attention.

**K. Revathi**
GPS, Pillaiyarkuppam

# Choreographing 'Wake Up!'

*Familiarizing the poem and enhancing learning through choreography*

Choreography is the art of designing sequences of movements in a synchronized manner. As a performance art, it comes under theatre.

**Why should it be a part of the language classroom?**

Theatre has been influential in many people's lives. It is a creative medium that helps enhance learning among students. In the language classroom, theatre can help improve the students' understanding of the text. Choreographing a poem in a textbook brings it to life.

**The process**

After the poem has been taught in class, the students plan the choreography with the guidance of the teacher. The teacher negotiates with the class to decide the characters, locations, scenes, events and the sequence of actions. Students will decide the number of scenes and actions, who should play which character, etc.

**CHOREOGRAPHING 'WAKE UP!'**

I negotiated with my children for the preparation of the script for the choreography. I asked them the following questions:

- Who are the characters in the poem?
- In how many locations does the story happen?
- How many scenes are there?
- What are the sequence of actions happening in the first and the second scene?
- What is the background of the first and second scene?

After the discussion, my children decided to have two scenes in the choreography. Raju, Radhika and Neha were identified as the main characters. The first scene happens in a playground, which has trees, a pond, some plants and creatures like squirrel, butterfly, etc., in it. The second scene happens at Neha's house. With their previous experience, my children were able to perform effortlessly.

**SCENE 1**

Characters: Raju (Monisha) and Radhika (Yashvarthini)

Location: playground

Chorus: plant (Udayaraj), tree (Ragavi), pond (Mathivathini), squirrel (Dhanusri) and Keerthana reads the poem

➢ The chorus creates the background (trees, plants, pond, squirrel and butterfly)

➢ Raju and Radhika enter holding hands.

➢ They play in the playground.

➢ They exit the scene.

**SCENE 2**

Characters: Neha (Mathivathini), Rathika (Yashvarthini)

Location: Neha's house

Chorus: tree (Ragavi), plant (Dhanusri), Neha's house (Monisha and Udayaraj)

- The chorus group creates the background (tree, plant, house)
- Neha is sleeping in her house.
- Radhika enters the scene.
- She tries to wake up Neha.

Thus the process continues. My children enjoyed doing choreography and it has helped in bringing out the creativity in them while also improving their English language skills at the same time.









**A. Nathan**
PST, GPS Sinnakarayambuthur

Classroom Diaries

# Cooking, Recipe Writing and Learning English

*Developing vocabulary through engaging activities and recipe-writing*

Teaching English at primary level is a challenging task. There are various opinions on when the instruction should start, which approaches and techniques work best, etc. Whatsoever, children should be actively engaged in the classroom activities for language learning to happen.

To teach the lesson 'Wonderful Waste' (Grade 5, Unit 1) in an interesting manner, I planned to prepare the dish 'AVIAL' in the classroom. Students were excited on hearing this and they brought one ingredient each from their homes. I began by explaining the process of preparing the dish. Students listened and interacted with enthusiasm and later joined me in preparing the dish.

While preparing the dish, I used new words (which occurred in the lesson) such as 'tempting', 'whipped', 'survey', 'ground', 'starting', 'commanded', 'sternly', 'scraps' and 'stripes' and explained their meanings as well. I also made students to use those words at appropriate times while preparing the dish. Students later tasted the 'AVIAL' prepared by them. I then asked them to write a recipe for their favourite dish. They wrote recipes for bread roast, omelette, bread bajji, vegetable soup, bread sandwich, etc. The best recipes were selected and awarded prizes.

In my experience, children respond better when being engaged in practical activities, rather than the usual practices such as reading from textbooks. They gain confidence when given a task which they are able to do. Such tasks and activities can be included to make the teaching of the curriculum more effective, engaging and enjoyable.








**Rajkumar. N,** PST
GPS, Vinayagampet.

# Little Buds, Growing Plants

*This article emphasizes the importance of growing plants within the classroom in making teaching - learning richer.*

Science is a subject full of fun filled activities. Children learn more and also easily while learning by doing activities themselves. In the lesson 'plant fairy' for grade three EVS, children learn about plants, leaves and their types. I felt that teaching this topic with textbook and pictures would not be effective. So, I decided to make this chapter's learning to be happier, easier and effective. Strength of my class is 24, and they were divided into six groups (four students each). All the activities were designed according to the groups. To learn different parts of the plants and germination, children were asked to bring a seed of their own choice. Students had brought soya, beans, mustard, tomato, pumpkin and some also brought orange and apple seeds. All children were given transparent pot cups and soil. They were asked to sow the seed they had brought. Each group took care of their plant. Everyday children poured water, kept it under sunlight (since the plant could not be kept inside the classroom, they kept it under sunlight for some time) and observed seed germination. It was observed that the mustard and beans grew faster than other seeds that were sown. They also learned about sources needed for a plant to grow. Children were asked to write every day about their observations. They were asked to observe any changes appearing on the surface the soil, how the shoot appears, and when it appears where the root is, and if they could see the seed and the seed coat.

When the shoot appeared, the child whose seed germinated was so happy. Children started to observe and discuss their plant's growth, in how many days the shoot appeared and what it looked like. Students were also shown an animated video on germination of a seed and parts of a plant *(https://www.youtube.com/results?search_query=aum+sum+time+plant+germination).* This video could be cropped according to the kids' level while showing. Children could correlate that video with their own plant. Children by learning along with doing an activity, will never forget what they learn. After the activity and observation, all the saplings were planted in the school premises and the students were asked to take care of them. The students enjoyed a lot. These little buds, growing little plants, were so curious and happy with the growth of their own plants.







**Indra Priyadharshini**
GPS, KT Kuppam

# Wall Painting as a Learning Tool in the EVS Classroom

*This article is about the wall painting carried out within the classroom to depict trees and their role in our ecosystem.*

**Objectives**

- To observe and understand trees around us.
- Create a vibrant class atmosphere through wall painting.

**Introduction**

Plants are very important to the environment. Trees are our lifeline as it is our primary source for food. Humans cannot survive without plants. They also play an important role giving out oxygen through the process of photosynthesis. However, we are becoming ignorant and forgetting the importance of trees.


To sensitize students on the importance of trees, I planned to do a tree drawing activity in my class. There are 10 students in my class coming from a nearby village called Thimmanayakanpalayam (TN Palayam).

**Tree Activity**

Before starting the activity, I asked my students to collect and bring whatever materials they get from the trees.

The next day they brought leaves, barks, and a bird's nest to the class. They had picked them up from the nearby badam, neem and rain trees.

I painted a tree on the wall of my classroom and pasted some paper leaves on the branches of the tree. While painting, students were observing and helping me with the colors. Some were even suggesting modifications on the shape of the branches and leaves. We pasted pictures of some birds, insects and flowers on the tree.



**Follow up**

I have decided that as a follow up, we will depict the seasonal variation of trees on the wall drawing. If a flower blooms on the tree, we will paste the flower's picture. If there is fruit, we will paste the fruit's picture. If the trees shed their leaves, we will tear off some leaves from the painting. The purpose is to make this activity a live phenomenon in the class. All these changes will be done after engaging students in a discussion on what they have observed.

**Reflection**

The students really enjoyed this activity. Using the picture on the wall, we discussed the importance of trees. Students shared their ideas - trees give us air to breath, fruits and flowers to eat, wood to make furniture, gives us shade,

is a source of medicine and provides shelter for birds and animals. They learnt about some of the creatures that live around the tree – they saw a squirrel running on the bark of the tree, a myna and a crow standing on the branches etc. It was evident that they had started keenly observing the tree.


Children love to look at the colours, shapes and movement of animals. They enjoyed visualizing the tree inside a classroom. This has caught the attention of students in other classes as well and they want to do the same in their class.

At the end of the class, I asked students to draw a tree on a white sheet and the things they see around it. Some sample students work is attached below. We can use this activity for both lesson 1 and 2 in grade 3.









**B. Sasirekha**
GMS, TN Palayam

# Blooming Petals – An Outdoor Learning Experience

*This article is about the set of outdoor activities for children on plants to make them curious and interested.*

The plant fairy lesson is a wonderful lesson in Environmental Studies (EVS) for 3rd Std, which brings out the fairy in every child. I taught the lesson with the help of an external resource person (RP) from Azim Premji Foundation. This lesson was done over a period of five classes.

**Day 1:** It was a surprise for children, since two external people joined and handled the class. We had a discussion with kids on living and non-living things.

Below are a few highlights of the discussion -

*What are the living and non-living things you see on the way?*
*Living things – trees, dog, crow, animals*
*Non-living things – house, cycle, shops*

*What are the living and non-living things in the classroom?*
*Living things – you, us (students)*
*Non-living things – bench, wardrobe, black board, chalk, shirt, window*

*Why do you think bench is a non-living thing?*
*Because it does not have any feeling and does not move.*

*Trees also do not move. Why is it a living thing?*
*Some students said that yes so it is also non-living thing. Some said that trees grow so it is a living thing. From which the children gave the final verdict "plants are living things' because, they grow, they move, they eat, they breathe.*

Then the students explored the school premises, collected dry leaves, and discussed about them. I advised every student to collect one fallen leaf from the ground. Once they had collected, they were divided into groups.

**Day 2:** Students were enthusiastic to show the different leaves they had collected.



Children were asked to share about the shapes, sizes, colors and margin of the leaves. We asked the children to look for the smell of leaves too. Students sitting in groups curiously observed the leaves of badam, neem and guava trees.



Children's observations – Badam leaf is dark red in colour, soft in texture, long and with some lines inside the leaf. Neem leaf has broken edges, looks narrow, is green in colour, dried ones are yellow in colour and has some lines. Dry leaves had a hard texture. However, the freshly fallen leaves had a soft texture.

Snapshot of the discussion with children,

*Teacher – Have you all collected the leaves?*
*Students – Yes ma'am*
*Teacher – Can you identify the trees of the leaves you have?*
*Students – Yes ma'am. Badam, Neem, Guava tree.*
*Teacher – Very good! What is the colour of the leaf?*
*Students – Brown! Red! Orange! Yellow! Green!*
*Teacher – So many colours, Wow! Why do you think they are of different colours?*
*Students – Because (i) they are fallen on mud (ii) they are from different trees (iii) they are dry (iv) they had fallen from tree on different days - one today, one yesterday and one day before yesterday.*
*Teacher – All of your answers are correct. What is the shape of your leaf?*
*Students – Diamond! Like a coconut! Triangle! Spade!*
*Teacher – How are the margins of the leaf?*
*Students – It looks like staircase, pricky and it has design.*
*Teacher – How does the leaf feel to touch?*
*Students – Soft! Rough! Like a rubber! Thick! Thin! Like a candle.*
*Teacher – How does the leaf smell?*
*Students – Good, bad. It smells like badam milk.*

**Day 3:** Students did observation under a tree. It was exciting to see how keenly children observed. They were given a print out in which they elaborated the tree trunk, leaves, flowers, fruits, roots and their characteristics. They also noted the animals they saw on the tree.



**Day 4:** Children were asked about patterns of leaves and flowers. They ran around the school making tracings of trunks and leaves with crayons. Then they were taught the important words related to a tree and names of some common trees around them. Writing practice was given.

**Day 5:** Children brought flowers, leaves and fruits of the same tree as the teacher had instructed the day before. They brought leaf, flower, and fruits of guava, mango, drumstick, badam, banana and lemon trees. The children were evaluated by asking them to group the leaf, fruit and flower of a same tree. For example, banana leaf has to be matched with its flower and fruit. Students arranged the leaf, flower, and fruit of the plants correctly. The student who did it correctly were given the 'Plant Fairy' title.

**Follow-up work**



The children were asked to befriend a tree in school/home and name it. They must take care of the tree throughout their life.

**Reflections**

The children loved the class because they were outside the class most of the time. They enjoyed learning because it was happening unconsciously. They also learned better and faster. Thanks to the APF team who made the class lively and enjoyable.

After all, isn't EVS supposed to be learning along with the nature….

**Srilakshmi Vijayakumar**
GPS, Embalam

# சுற்றியுள்ள தாவரங்களை அறிவோம்...

**சுற்றுப்புறத்தில் உள்ள தாவரங்களை உற்று நோக்கி ஆவணபடுத்தி கலந்துரையாடி அவற்றின் வேறுபாடுகளை உணர்ந்து கற்ற அனுபவம்**

**பாட நோக்கம்**

- உயிருள்ளவை உயிரற்றவை வேறுபாடறிதல்
- சுற்றி உள்ள தாவரங்களை அடையாளம்\ கண்டறிதல்
- தாவரங்களின் பாகங்களையும் அவை எவ்வகையில் வேறுபட்டுள்ளன என்பது பற்றியும் புரியச் செய்தல்
- தாவரங்களை அவற்றின் பாகங்கள் மற்றும் முழுமையாக வளர்ந்த அளவை வைத்து வகைபடுத்துதல்

**வகுப்பறை செயல்பாடுகள்**

1. **உயிருள்ளவை/உயிரற்றவை வேறுபாடறியச் செய்தல்**

மாணவர்களிடம் வினாக்கள் கேட்டு உயிருள்ளவை, உயிரற்றவை வேறுபாடுகள் அறியச் செய்தேன். வகுப்பறையில் நடந்த உரையாடல் கீழே,

*ஆசிரியர் : உங்களைச் சுற்றி என்னென்ன உள்ளன?*

*மாணவர்கள்: நாற்காலி, மேசை, பென்சில்.*

*ஆசிரியர் : நீங்கள் பள்ளிக்கு வரும்போது என்னென்ன பார்க்கிறீர்கள்?*

*மாணவர்கள் : தாவரங்கள் (செடிகள்/ மரங்கள்), பறவைகள், வீடுகள், வண்டிகள்*

*ஆசிரியர் : ஆமாம், நம்மைச் சுற்றி நிறைய உள்ளன. இதில் எவை உயிருள்ளவை?*

*மாணவர்கள் : நாய், மாடு, பறவைகள்*

*ஆசிரியர் : சரி. எதனால் அவை உயிருள்ளவை என்று சொல்கிறீர்கள்?*

*மாணவர்கள் : அவை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகரும்.*

*ஆசிரியர் : உயிருள்ளவை நகரும், பேசும். அவைகள் சாப்பிடுமா?*

*மாணவர்கள் : ஆமாம் சாப்பிடும்*

*ஆசிரியர் : எதற்காகச் சாப்பிட வேண்டும்?*

*மாணவர்கள் : பெரிதாக. வளர.*

*ஆசிரியர் : சரி உயிருள்ளவை நகரும், பேசும், வளரும். செடி/ மரம் உயிருள்ளவையா?*

*அதற்கு ஒரு சிலர் உயிருள்ளவை என்றும், ஒருசிலர் உயிரற்றவை என்றும், சொன்னார்கள். தாவரங்கள் வளரும், சுவாசிக்கும், உணரும் தன்மைக் கொண்டது. ஆனால் நகராது. தாவரங்களுக்கும் உயிர் உண்டு என விளக்கினேன்.*

இவ்வாறு உயிருள்ளவை நகரும், சுவாசிக்கும், வளரும், இனப்பெருக்கம் செய்யும் என்பதனை வினாக்கள் மூலம் புரியச் செய்தேன். பின்னர் உயிருள்ளவை, உயிரற்றவை பற்றி powerpointஐப் பயன்படுத்திக் கலந்துரையாடினோம். இந்தக் கட்சிப்படுத்துதலின் மூலம் மாணவர்கள் எளிதாகப் புரிந்தது கொண்டனர்.

1. **தாவரங்களின் பாகங்களை அறிதல்**

குப்பைமேனி செடியைக் கொண்டு வந்து அதன் பாகங்களை நினைவு கூறச் செய்தேன். பின்னர் தாவரங்களின் பாகங்கள் உள்ள அட்டைகளை வைத்து அது எந்தத் தாவரத்தின் பாகங்கள் (இலை, பூ, தண்டு) என்பதை பாகுபடுத்தினோம். மாணவர்கள் தாவரங்களின் பாகங்களை ஆர்வமுடன் பாகுபடுத்தினர். நெற்செடியின் பாகங்களைப் பாகுபடுத்தும் போது மாணவர்கள்

அதை அரிசி என்று சொன்னார்கள். பின்னர் உரையாடலின் மூலம் அது நெல் என்பதை அறிந்து கொண்டனர்.

### 2. மரங்களை உற்றுநோக்கல்



பள்ளியைச் சுற்றியுள்ள இடத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று உற்றுநோக்கச் செய்தேன். அந்தத் தாவரத்தின் பெயர், உயரம், பூவின் நிறம், இலையின் அமைப்பு, தொட்டுப்பார்த்து அதன் தன்மைகள் ஆகியவற்றை அறியச் செய்தேன். முருங்கைமரம், நாவரசமரம், மல்லிகை, கற்பூரவல்லி, கொய்யா, பப்பாளி, செம்பருத்தி, தென்னைமரம், வேப்பமரம், போன்றவற்றை உற்றுநோக்கினர். வகுப்பறைக்கு அவற்றின் இலை, பூ, தண்டு, போன்றவற்றைக் கொண்டு வந்தனர். பின் அவற்றின் அமைப்பு, அளவு, நிறம், நரம்பமைப்பு, செடியா /மரமா/ கொடியா என்பதைப்பற்றிக் கலந்துரையாடி மகிழ்ந்தனர். இதன் மூலம் மாணவர்களின் உற்றுநோக்கல் திறன் அதிகமானது. இந்த நேரடி அனுபவம் அவர்களுக்கு மகிழ்ச்சி அளித்தது.

### 3. வேறுபாடறியச் செய்தல்

மாணவர்களைப் பல இலைகள், பூக்களை வகுப்பறைக்குக் கொண்டு வரச் சொன்னதும் ரோஜா, மல்லிகை, செம்பருத்தி, வேப்பம், பூவரசன், கற்பூரவல்லி, போன்ற செடிகளின் இலைகளைக் கொண்டு வந்தனர். இலைகளை உற்றுநோக்கச் செய்து அது எந்த தாவரம் எனக் கூறச் செய்தேன். பின்னர் இலைகள், பூக்கள் அதன் வடிவம், அளவு, நிறம், மணம் போன்றவற்றில் உள்ள வேறுபாடுகளைப் புரிய வைத்தேன்.

### 4. இலைகளை அச்சு எடுத்தல்

இலைகளைத் தாளில் வைத்து அச்சு எடுப்பதன் மூலம் இலையின் அமைப்பு, அதன் வெளிவடிவம் (margin), உள் நரம்பு அமைப்பு (venation) ஆகியவற்றை அறியச் செய்தேன். மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

### 5. மரங்களின் தொகுப்பு (album) தயாரித்தல்

மாணவர்கள் ஒவ்வொருவரையும் ஏதாவது ஒரு மரத்தை வரையச் செய்தேன். பின்னர் அம் மரம் தொடர்பான இலை, பூ, காய், தண்டினைச் சேகரித்து ஒட்டினர். பூவரச மரம், முருங்கை மரம், கொய்யாமரம் ஆகிய மரத்தின் பாகங்களைக் கொண்டு தொகுப்பைத் தயாரித்து இருந்தனர். பின்னர் வகுப்பறையில் மற்ற மாணவர்களின் தொகுப்பைக் கண்டு உரையாடினர். இது மாணவர்களிடம் தாங்களே ஒரு album தயாரிக்க முடியம் என்ற மனப்பான்மையை வளர்த்தது.

### நன்றாகச் சென்றது

- வகுப்பறையை விட்டு வெளியே சென்று கற்றல் மாணவர்களிடையே மகிழ்ச்சியையும், கற்றலை எளிதாகவும் மாற்றுகிறது. அனைத்து செயல்பாடுகளும் மாணவர்களிடையே ஆர்வத்தினைத் தூண்டி கற்றல் - கற்பித்தல் சிறப்படையச் செய்தது. பாடநோக்கம் மாணவர்களைச் சென்றடைந்தது.
- பாகுபடுத்தல் செயல்பாடு அவர்களிடையே ஆர்வத்தைத் தூண்டியது.
- குழு அமைப்பு கற்றலை எளிமையாக்கியது

### மாற்ற வேண்டியது

- மாணவர்கள் அவர்களைச் சுற்றியுள்ள தாவரங்களின் பெயர்களை அறியச் சில செயல்பாடுகளைச் செய்ய வேண்டும்.
- தாவரங்களின் பயன்கள், முக்கியத்துவத்தை விளக்கும் காணொளியை அதிகம் காண்பிக்க வேண்டும்.



**கு.மகேஸ்வரி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப. கலிதீர்த்தாள்குப்பம் பேட்.

# Addressing Number Sense Challenges

*This classroom diary helps to understand the common problems among children in number and helps to understand how to overcome it through certain activites.*

**Warm Up Activity (To improve mental ability):**

The students were asked to count the number 15 in descending order one after another; that is, if a student says 15, next will say 14 and so on. All the students joined in counting.

Similarly, they counted till 20 in the ascending order. This was to gain students' attention at the beginning of the class.

**Main Activity**

The class began with multiple representations of the numbers using fingers. For instance, students would represent number 8 in different ways: that is, 5 in one hand, 3 in another hand, or 4 in both the hands, and so on. Initially, students had difficulty in understanding the concept. But




gradually, with this way of representation, they began to grasp better. As we gave many examples and gave them practice with using different numbers, they were able to understand better. At the end of the activity, students concluded that single number can be represented in many ways and any which way they had wanted. To make their understanding even deeper the same activity was followed for various other numbers.

For instance, for number '7', students will represent as either 5+2 or 4+3, using fingers and so on.

**Follow-up Activity:** In this activity, I would count my ten fingers 1 to 5 in one hand and 10 to 6 on the other hand and add them as 5+6 and tell the students that I have 11 fingers. Some students were surprised at this. However, a few of them realized that I was counting backwards (10 to 6) on one hand and forward on the other and recognized this as wrong.

This activity was used to strengthen students' understanding of the concept.

**Dienes Blocks:** Dienes Blocks consists of different units of place value put together to represent a number.




Students were explained the place values of these shapes and how they are aggregative in nature (that is, how all these shapes can be used collectively to represent three/two digit numbers).

At first, students were asked to get into bench-wise teams. Then, students were asked to show how to represent the number 14 using Dienes blocks. Most of the teams used one 'ten' and four 'ones'. Whereas, one group chose to represent '14' using fourteen 'one' blocks.

At the end of the class, one student was called

and asked to represent 55. The student was unable to do it in the stipulated time, which was count of 10. This warranted that the concept needed further clarity amongst certain students. Next, students were given the number '35' to be organized using Dienes blocks. Though group 1's initial count was just 34, later the students corrected it when it was pointed out.

| Student responses on the BB | | |
|---|---|---|
| **Group** | **Tens** | **Ones** |
| Group 1 | 2 | 15 |
| Group 2 | 3 | 5 |
| Group 3 | 3 | 5 |
| Group 4 | 3 | 5 |

Which team is the winner?

The other students were of the opinion that group 1 is wrong. One student asked whether there could be values more than 10s in the ones. When we checked group 1's blocks, it was found that they had run out of tens blocks and they had only unit blocks to keep. Students in groups discussed if this was right or wrong.

At this moment, teacher started evaluating each groups' blocks beginning with group 4 and he drew the block arrangement of each group on the board. Groups 4, 3 and 2 had the same answer and it was clarified very well by using the blocks and later converting it to numbers. But group 1 was also right. The teacher demonstrated this by translating the block to the count of 35. Other groups counted and verified the number.

After Dienes Block session, we further made the students count the numbers in ascending order. Most of the students were able to play the number game except for one student. The students had problems with the number '40' as they seem to have confused it with '14' when counting. To check student's understanding, he was asked to count numbers from 47 to 53.



This time, he was able to count correctly. The students were also able to count numbers till 100 in the group. They were fast as well as loud. However, students slowed down when they were asked to count alone. Even students who were fast in counting in groups, tend to think and stammer when the previous number had been told by someone else and not themselves.

During this process, it was noticed while counting that one student skipped number '14'. So he was asked to start counting from 1 to 20. It was understood that the problem, was with 'teen' numbers. They were misunderstanding them to be numbers ending with 'ty'. The boy also had a special case issue with the number '15' which he kept pronouncing as 'five-teen'. But he was completely comfortable while counting numbers between 31-39, but cannot tell 40.

Even though the children were facing problems, the activity enabled them to identify the numbers properly and also helped them in recognizing the numbers. We addressed this problem by asking them to repeat the naming of numbers after us, after we clearly pronounced it for them.






**R. Senthil Kumar**
GHS, Kanuvapet

# பாடல் எழுதி எழுத்துக்களை அறிவோம்

**கதைகளும் பாடல்களும் படங்களும் எங்களுக்குப் புரிகிறது. அ, ஆ, க, கா... புரியவில்லையே**

இக்கல்வியாண்டில் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒன்றாம் வகுப்பில் நுழைந்தேன். என் மாணவர்களைப் போல் நானும் பல ஆச்சரியங்களையும் அனுபவங்களையும் எதிர்பார்த்து இந்த ஆண்டைத் தொடங்கினோம். மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தனர். தமிழைப் பொறுத்தவரை, அவர்கள் நிறைய பேசினார்கள், கேள்வி கேட்டார்கள், யோசித்தார்கள். இந்த வகுப்பறையில் என் வேலை என்ன? அவர்களை எழுதவும் வாசிக்கவும் செய்ய வேண்டும். ஆனால் இவைதானே கடினம்! தெரிந்ததிலிருந்து தெரியாததைக் கற்கும் முறையைக் கையில் எடுத்தேன். பேசவைத்தேன்; கவனிக்கச் செய்தேன்; சிந்திக்கத் துணைபுரிந்தேன்; கேள்வி கேட்க இடம் கொடுத்தேன். விளைவு, பாடல்களை உருவாக்கினர்; வாசிக்கத் தொடங்கினர். இந்த இனிய அனுபவத்தின் விளைவுகளை ஒரு வாரத்திலேயே அறுவடைச் செய்ய முடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை, ஆனால் கிடைத்தது.



பட்டாம்பூச்சிகளாய் சுற்றித் திரிய வேண்டிய குழந்தைகள் பள்ளிக்கு வந்த உடனே அவர்கள் கையில் பாடபுத்தகத்தைக் கொடுத்து ஓரிடத்தில் அமரவைக்க எனக்கு விருப்பமில்லை. அவர்கள் விளையாட வேண்டும், அதே நேரம் மொழித்திறன்களும் வளர வேண்டும். 'பாடி ஆடி விளையாடலாம்' முதல் வகுப்பு பாடங்கள் அனைத்திலும் வண்ண வண்ணப் படங்கள் நிறைந்திருந்தன. அவற்றைப் பயன்படுத்தி என் குழந்தைகளே பாடல்களை உருவாக்கும் வகையில் பாடத்திட்டத்தை வடிவமைத்தேன். இதோ, எனது வகுப்பறை அனுபவங்கள் உங்களுக்காக.

**பாட நோக்கம்**:

- பிடித்த விளையாட்டுகள் பற்றிப் பேசி மகிழ்தல்
- பாட்டுப் பாடி மகிழ்தல்

**கற்றல் செயல்பாடுகள்**:

**மாணவர்களைத் தயார்படுத்துதல்**:
ஆட்டுக்குட்டிப் பாடல் ஒன்றைப் பாடி வகுப்பைத் தொடங்கினோம். அனைத்து குழந்தைகளும் ராகத்தோடும் உடல் அசைவுகளோடும் முகபாவங்களோடும் பாடினர்.

ஐப்பசியும் வந்தது, அடைமழையும் பெய்தது

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி, வீட்டுக்குளே ஓடிவா

சும்மா நீயும் மழையிலே துள்ளித் துள்ளி ஓடாதே

அம்மா வந்தா வைவாளே, ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி

இதைத் தொடர்ந்து பாட புத்தகத்தில் உள்ள 'ஆலமரத்துல விளையாட்டு' என்ற பாடலைப் பல முறைப் பாடினோம்.

**பாடத்தை அறிமுகம் செய்தல்**: புத்தகத்தில் உள்ள படத்தைக் காட்டி உற்று நோக்கச் செய்து அதில் உள்ளவற்றின் பெயர்களைக் கூறச் செய்து, அவற்றைக் கரும்பலகையில் எழுதினேன். ஆலமரம், விழுதுகள், அனில், முயல், குரங்கு, கிளி, காக்கா

"நீங்கள் சொன்னதைத் தான் நான் எழுதுகிறேன்" என்று பலமுறை கூறி, ஒலி வடிவத்திற்கும் வரிவடிவத்திற்கும் உள்ள தொடர்பை உணர்த்திக்கொண்டே இருந்தேன்.

**ஆலமரம் பற்றிப் பேசுதல்**: ஆலமரத்தைப் பார்த்து இருக்கிறீர்களா? ஆலமரம் எப்படி இருக்கும்? ஆலமரத்தில் என்னென்னவெல்லாம் இருக்கும்? அதில் நீங்கள் விளையாடி இருக்கிறீர்களா? என்று உரையாடினோம்.

**பாடலை உருவாக்குதல்**: புத்தகத்தில் உள்ள ஆலமரத்தைக் காட்டி 'எப்படிப்பட்ட ஆலமரம்?' என்று கேட்க, 'பெரிய ஆலமரம்' என்று பதில் வந்தது. ஒரு சார்ட் தாளைக் கரும்பலகையில் ஒட்டி அதன் மீது 'பெரிய பெரிய ஆலமரம்' என்று எழுதினேன். இரண்டு மூன்று முறைச் சொல்லிக்கொண்டே இருந்தனர். அடுத்ததாக ஆலம் பழம் எந்த அளவில் இருக்கும் என்றேன். சின்னது என்றனர்.

பெரிய பெரிய ஆலமரம்

சின்ன சின்ன ஆலம்பழம்

என்ற பாடல் உருவானது. அனைவரும் சேர்ந்துப் பாடினோம், இருவர் இருவராக வாசித்தனர், தமது நோட்டுப்புத்தகத்தில் எழுதிக் கொண்டனர், இவ்விரு வரிகளில் உள்ள வார்த்தைகளை அடையாளம் கண்டுகொண்டனர். இதில் பெரும்பாலும் பேச்சு



ஆலமரத்தைக் காட்டி பாடல் உருவாக்குவதற்காக உரையாடுதல்



மாணவர்கள் கூறுவதை எழுதுதல்



மாணவர்கள் தாமாக வாசித்தல்

வழக்கையே மாணவர்கள் கடைபிடிக்கிறனர். ஆலம் பழம் என்பது அவர்களுக்கு அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை. அதனால் ஆரம்பத்தில் சிரமப்பட்டனர். இனி அவர்களுக்கு மிகவும் நெருக்கமான பொருட்களை வைத்து மட்டுமே இத்தகைய செயல்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

தமிழில் ஒரு எழுத்துக் கூட அறிமுகமாகாத நிலையில், படத்தைப் பார்த்து இரண்டு வரிகளைத் தாமே உருவாக்கி, வாசித்து, எழுதி....

அடுத்தநாள் வகுப்பில் "மிஸ், எங்கம்மா பாட்டு சூப்பர்ன்னு சொன்னாங்க", "எங்கப்பா இன்னொரு தடவப் பாடுன்னு சொன்னாங்க" போன்ற குரல்கள் ஒலித்தன.

அடுத்தடுத்த நாட்களில், தாம் பார்க்கும் அனைத்து பொருட்களைப் பற்றியும் இருவரிப் பாடலைச் சொல்லத் தொடங்கி விட்டனர். பூனை, எலி, அனில், யானை, சாக்பீஸ், மயில், நாய், முயல்... என்று நீண்டுகொண்டே இருக்கிறது.

பாடல் வரிகளில் உள்ள சொற்களை அடையாளம் காணுவதோடு அவற்றைத் தனியே எடுத்து எழுதுவும் இதே சொற்கள் வேறு இடங்களில் இருந்தால் அடையாளம் காணவும் செய்கிறார்கள். சொற்களைப் பலமுறை கூறுவதன் மூலம் எழுத்துக்களை அடையாளம் காணுவது எளிதாகி விடுகிறது.

அடுத்ததாகச் சொற்களிலிருந்து எழுத்துக்களை அறிமுகம் செய்யும் முயற்சிக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.




**சு.தமிழரசி**, தொ.ப.அ,
அ.தொ.ப தானம்பாளையம்

# வாசித்தலில் வித்தியாசம்

**க முதல் கௌ வரை பொருட்கள் மூலம் கற்பித்தல்**

மாணவர்களிடம் அவர்களுக்குத் தெரிந்த பொருட்களின் பெயர்களைச் கூறச்செய்து அவற்றைப் படமாக வரைந்து வண்ணமிடச் செய்தேன். சில படங்களைப் பழைய தாள்களிலிருந்து வெட்டி ஓட்டச் செய்தேன். பிறகு படங்களுக்குறிய ஒரு சில வாக்கியங்களை எழுதச் செய்து அனைத்து அட்டைகளையும். ஒன்றாக இணைத்து அனைவரையும் வட்டமாக அமரச்செய்து படிக்கச் செய்தேன். ஆசிரியர் எழுதிய குறிப்பேட்டை பார்த்து மாணவர்கள் எழுதினர்.

இவ்வாறு கற்றல் கற்பித்தல் நடைப்பெற்றதால் தெரிந்தவற்றை வரைந்து வண்ணமிடவும், அவற்றைப் பற்றிய தங்களின் கருத்துக்களை எழுதியும் படித்தும் மகிழ்ந்ததால் கற்றல் சுமையாக இல்லாமல் சுகமான நிகழ்வாக இருந்தது.



மாணவர்களிடம், வாங்கிய சொற்கள் அடங்கிய வார்த்தை அட்டைகளைக் கொடுத்து குழுவாக அமர்ந்து சரியான வாக்கியத்தை அமைத்து படிக்கச் சொன்னேன். அனைத்து மாணவர்களும் ஆர்வமுடன் தேர்ந்தெடுத்து வாக்கியத்தை அமைத்து படித்து மகிழ்ந்தனர். அட்டைகள்



வண்ணமிகுந்து காணப்பட்டதால் சொற்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் வண்ணங்களை வைத்து அடுக்கினர். பிறகு அட்டையிலுள்ள சொற்களைப் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. அதன் பின்னர் சொற்களை மாற்றி அமைத்து படித்தனர். இதனால் வாசித்தல் பயிற்சி மிகவும்



எளிமையாக நிகழ்ந்தது.

மாணவர்களுக்கு உயிரெழுத்துக்கள் மற்றும் மெய்யெழுத்துகளை கற்பிப்பதில் உள்ள கடினத்தன்மையைப் போக்க பாடல் மூலமாகவும், விளையாட்டு முறையிலும் கற்றல் கற்பித்தல்



எளிதாக நிகழ்ந்தது. பிறகு ‘க’ முதல் ‘கௌ’ வரை உள்ள எழுத்துக்களுக்கு உரிய சொற்களை மாணவர்களைக் கூறச் செய்தேன். அவர்கள் சுற்றுபுறத்திலிருந்து தெரிந்த சொற்களை ஆர்வமுடன் கூறி மகிழ்ந்தனர். பிறகு ‘ச’ வரிசை சொற்களைத் தேர்ந்தெடுத்து அவ்வரிசைக்குரிய பொருட்களைச் சேகரித்து ஒரு கண்காட்சி அமைத்து மாணவர்களைக் காணச் செய்ததால் கற்றல் உயிரோட்டமாக நிகழ்ந்தது. கண்காட்சியில் அனைத்து எழுத்துகளுக்கும் மாணவர்கள் தாமாகவே முயற்சி செய்து தங்கள் சூழலிலிருந்தும், தெரிந்தவற்றிலிருந்தும், அவர்களுக்குத் தெரிந்த சொற்களை வரிசைபடுத்திக் கொள்ள மிகவும் உதவியாக இருந்தது.

இதைத்தொடர்ந்து மற்ற எழுத்து வரிசைகளுக்குரிய பொருட்களையும் சேகரித்து மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகக் கண்காட்சி அமைத்து மகிழ்ந்தனர்.

இவ்வாறு மாணவர் விரும்பும் வண்ணம் அவர்களை ஈடுபடுத்திக் கற்றல் கற்பித்தல் நிகழ்ந்ததால் எளிமையானதாகவும், இனிமையானதாகவும், உயிரோட்டமுள்ளதாகவும் கற்றல் சூழல் அமைந்தது



**நம்பிக்கை மேரி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப, ஓடைவெளி.

# யார், யார், யார்?

**கேள்வி கேட்போம், கதை கதைப்போம், களித்திருப்போம், கற்கவும் செய்வோம்**

"யார் இந்தக் குழந்தைகள்?
யாருக்காக நாம் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்?
இதில் யாரேனும் ஒருவர் நம்மை நினைவில் வைத்துக் கொள்வார்களா? அந்த நபர் யார்? யார்? யார்? என்ற கேள்வியுடன் வகுப்பறைக்குள் நுழைந்தேன்"


மாணவர்களைப் பார்த்து இங்கு யார் தண்ணீர் ஊற்றியது? யார் கரும்பலகையை அழித்தது? சாக் பீஸ் தூளாக்கியது யார்? என்று கோபமாக கேட்டேன். இதற்கு மாணவர்களின் பதில் ஹா.... ஹா.....ஹா... இந்தச் சிரிப்பு ஐந்து நிமிடங்கள் வரை ஓயவில்லை.

**யார்? யார்? விளையாட்டு**

பிறகு விளையாடுவதற்கு வெளியில் சென்றுவிட்டோம். "பப்பி பப்பி உன் எலும்பு துண்டை எடுத்தது யாரென்று சொல்வாயா?" என்று மற்ற மாணவர்கள் பாட, பப்பியாக உள்ள ஒரு மாணவன் எலும்பு துண்டை எடுத்துச் சென்றவனைக் கண்டுபிடித்தல்; மற்ற மாணவர்கள் கண்டுபிடிப்பதற்கு உதவியாக "இவன் அழகாக இருப்பான்" "ஆனால் பயங்கர வாலு", "மிஸ்ஸ டென்ஷன் ஆக்குவான்";, "முதல் பெஞ்ஜில் உட்கார்ந்து இருப்பான்", போன்ற குறிப்புகளைக் கூறினர். இவ்வாறாக நாங்கள் மகிழ்ச்சியாக விளையாடினோம்.


மாணவர்கள் ஒருவரையொருவர் எவ்வாறு தெரிந்து கொண்டு வைத்துள்ளனர் என்பது இதன் மூலம் நன்றாக தெரிந்தது.

பிறகு மைதானத்தில் வட்டமாக உட்கார்ந்தோம். சுற்றி சுற்றி பார்த்தோம். ஐந்து நிமிடம் கழித்து ஒரு மாணவன் மிஸ் மிஸ் இந்தப் பைப்பைத் திறந்து




விட்டு போயிட்டது, யார் மிஸ்? என்று கேட்டான். மரக்கிளையை உடைச்சி போட்டது யார் மிஸ்? என்று அடுக்கடுக்காக கேள்விகளைக் கேட்டுக் கொண்டு இருந்தனர்.

**குழு செயல்பாடு**:




மாணவர்களை ஐந்து குழுவாகப் பிரித்தேன், உடனடியாக பேப்பரை எடுத்து படம் வரைந்து, அதன் கீழே கேள்விகளை எழுதினர், எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவர்களின் கேள்விகள். எழுதத் தெரியாத மாணவர்கள் படம் மட்டும் வரைந்தனர். அனைத்து குழுவும் மிகச்சிறப்பான முறையில் வரைந்து கேள்விகளைத் தொடுத்து இருந்தனர். பின் வகுப்பறைக்குள் சென்றோம். யார், யார், யார்? என்ற பாடலை

**"இவன் அழகாக இருப்பான்" "ஆனால் பயங்கர வாலு", "மிஸ்ஸ டென்ஜன் ஆக்குவான்";, "முதல் பென்ஷில் உட்கார்ந்து இருப்பான்",**



இராகத்துடன் பாடி ஆடினோம். பாடவேளை முடியும் வேளையில் ஒரு மாணவன் மட்டும் என்னைப் பார்த்து இந்தாங்க மிஸ் பலூன், இந்த அழகான பலூனை ஊதியது யார், யார், யார்? என்று பாடி என்னிடம் கொடுத்தான், எனக்கு ஒரே சிரிப்பு, நான் அதற்கு "இந்த அழகான பலூனை ஊதியது என் அழகான ஆகாஷ் தான்" என்று கூறிவிட்டு முத்தமிட்டுச் சென்றேன். மிகவும் சுவாரசியமான பாடவேளையாக இருந்தது எங்களின் வகுப்பறை.

அவர்களே படம் வரைந்து அதன் கீழே அவர்களே பெயரை எழுதுவது முதல் வகுப்பில் இருந்தே என் குழந்தைகளுக்குப் பிடித்த ஒன்று. ஆதலால் இந்த வகுப்பு நேரம் சுறுசுறுப்பாகவும் சுவாரசியமாகவும் இருந்தது.



**த. கெஜலட்சுமி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப. கரிக்கலாம்பாக்கம்.

# புதிர் விளையாட்டின் கற்றல் பகிர்வுகள்

இரண்டாம் வகுப்பு மாணவர்கள் புதிர்களை எழுதி, வாசித்து,புதிர்களைக் கட்டவிழ்த்து விளையாடினர். பொருட்களை உற்று நோக்குவதும் அவற்றை விவரித்து கூறுவதும் பழக்கமாகிவிட்டது.

**என் முதல் முயற்சி**:

**யார்? யார்? யார்?**

இப்பாடலை நடத்துவதற்கு முதல்நாளே குழந்தைகளைப் பெற்றோர்களிடம் தங்களுக்குத் தெரிந்த விடுகதைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டு வருமாறு கூறினேன்.


மறுநாள் குழந்தைகளை இருகுழுக்களாகப் பிரிந்து, விடுகதை போட்டி நடத்தினோம். சிலர் வாய்மொழியாகவும் மற்றும் சிலர் எழுதிக்கொண்டும் வந்தனர். போட்டி மகிழ்ச்சியாக நடைபெற்றது.

**குழுவாக விளையாடி மகிழ்ந்தோம்** :

மாணவர்களிடம் இப்பொழுது நாள்தோறும் குறிப்புகளைக் கொண்டு அது என்ன கண்டுபிடியுங்கள் என்று கேட்ட பின்னரே பாடத்தைத் தொடங்குவேன். அதுபோல் இது என்ன? என்று கேட்டேன். 'காய்கறி' என்றனர். காய்கறி என்ற சொல்லைக் கரும்பலகையில் எழுதினேன். பிறகு பச்சைநிறம் என்று கூறியதும், பல காய்கறி பெயர்களைக் கூறினர். பின் கொழகொழப்பாக இருக்கும் என்றதும் வெண்டைக்காய் என்று



கூறிவிட்டனர். மீண்டும் ஒரு முறை அனைத்து குறிப்புகளையும் கரும்பலகையில் எழுதி வாசித்து காட்டினேன்.




குழந்தைகளைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிடமும் ஒருபடத்தை அளித்து குறிப்புகள் எழுதச் சொன்னேன். இச்செயலில் குழந்தைகள் குறிப்புகளை யோசிக்கவும் அதை எழுதவும் சிறிது உதவி தேவைப்பட்டது. ஒரு குழுவில் உள்ள அனைத்து குழந்தைகளும் ஒரு குறிப்பாவது சொல்ல வேண்டும் என்று விதிமுறை வகுத்தலால் எழுதத் தெரியாத குழந்தைக்குக் குழுவில் உள்ள மற்ற மாணவர்கள் உதவி செய்தனர்.

பிறகு ஒவ்வொரு குழுவும் தங்களது குறிப்புகளை வாசிக்க மற்ற குழுவினர் கண்டுபிடித்து விடை கூறினர்.

**சிறிது தடுமாறினேன்**:

வீட்டுப்பாடமாக ஏதேனும் ஒரு பழத்தை (அ) காய்கறியைப் பற்றிக் குறிப்புகள் எழுதி வரச் சொன்னேன்.


அவர்கள் குறிப்புகளாக இல்லாமல் விவரித்து எழுதி வந்தனர். குழந்தைகளுக்குச் சரியாகப் புரியவில்லை. அதனால் அவர்களுக்கு எளிதாக

புரிய வைக்க எண்ணினேன். ஓரிரு குறிப்புகளை அவர்களுடன் பகிர்ந்தேன். மாணவர்களுக்குப் பல உதாரணங்களைச் சுட்டிக் காட்டினேன். அதன் மூலம் அவர்கள் இந்தப் புதிர் விளையாட்டினைப் புரிந்து கொண்டனர். ஆர்வமாகப் பதில் கூறினர். பிறகு இரு குழந்தைகளை என்னுடன் சேர்த்துக் கொண்டு வேறு சில குறிப்புகள் உருவாக்கினோம். தொடர்ந்து இரண்டிரண்டு மாணவர்களாக இணைந்து குறிப்புகள் உருவாக்கினர்.

**விளையாட்டின் மூலம் கற்பித்தேன்:**

இச்செயலைத் தொடர்ந்து "ரோஜாப்பூவே ரோஜாப்பூவே மெல்ல வந்து கிள்ளிட்டுப்போ" என்ற






விளையாட்டை விளையாடினோம். கிள்ளியது யார் என்று அக்குழுவினர் குறிப்புகள் தர வேண்டும். இதில் குழந்தைகள் அருமையாக விளையாடினர். அவர்கள் குறிப்புகளும் அருமையாக இருந்தன.

**எடுத்துக்காட்டாக:** ஒரு மாணவி குறிப்புகள் கொடுக்கும்பொழுது, 'அந்த மாணவன் ஒல்லியாக இருப்பான், கைல பச்சை கலர் கயிறு போட்ருபான்', என்றாள். நான் அவளிடம் நீ அவனது அக தோற்றத்தினைப் பற்றிக் கூறுகிறாய் 'அவன் க்ளாஸ்ல என்ன பண்ணுவான்? எப்டி நடந்துப்பான்? அந்தமாதிரி குறிப்பு குடுக்ரியா', என்றேன். சரிங்க மிஸ் என்றாள். பிறகு விளையாட்டை தொடர்ந்தோம் அப்போது வேறொரு மாணவன் குறிப்புகள் கொடுக்க ஆரம்பித்தான், 'உன்ன கிள்ளிய பொண்ணோட வீட்ல மாடு இருக்கு, அவ டெய்லி தயிர் சாதம் எடுத்துட்டு வருவா', என்றான்.

இவ்வாறாக மாணவர்கள் விளையாட்டின் மூலம் குறிப்புகள் உருவாக்க கற்றுக் கொண்டார்கள்.

**காலை பேரவை அனுபவங்கள்:**

நாங்கள் தமிழில் குறிப்புகள் தயாரித்த அனுபவத்தைக் கொண்டு என் குழந்தைகள் 'இன்றைய புதிர்' என்று தலைப்பில் விடுகதைகளை காலைப்பேரவையில் பகிர்ந்து கொள்கின்றனர். மேலும் ஆங்கிலத்தில் அவர்களே உருவாக்கிய விடுகதையினையும் கூறுகின்றனர்.

இவ்வனுபவம் எம் குழந்தைகளுக்குத் தங்களால் புதிய புதிர்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையையும் ஆர்வத்தையும் வளர்த்துள்ளது.

காலைப் பேரவையில் கூறிய விடுகதைகளில் ஒருசில

| | | |
|---|---|---|
| It is a vegetable | It is a vegetable | It is yellow in color |
| It is long | It is orange in color | Small in size |
| It is green in color | Cone shape | Round Shape |
| It is like stick | We can eat raw | Juice போடலாம் |
| (drum stick) | (carrot) | (Lemon) |

**சு. கவிதா,** தொ.ப.ஆ,
அ.தொ.ப. மணவெளி (அ)

# கௌதாரியும் முயலும்

எங்களுக்குப் பிடித்த விலங்குகளும் நாங்களும்…

**படக்கதையைப் புரிந்து கொள்ளல்:**

தமிழ்ப் புத்தகத்தில் உள்ள கௌதாரியும் முயலும் என்ற கதையை புத்தகத்தில் உள்ள படத்தைப் பார்த்துக் கூறுமாறு கூறினேன். குழந்தைகள் படக்கதையைப் பார்த்து ஒவ்வொருவராக தங்களுக்குப் புரிந்த அளவு கூறினர். சில குழந்தைகள் ஏற்கனவே கதையைப் படித்து வைத்திருந்தனர். அதனால் கதை வாசிப்பு சுலபமாக முடிந்தது.

**வீட்டு விலங்குகள்- செல்லப்பிராணி பற்றிய உரையாடல்:**

குழந்தைகளிடம் உங்கள் வீட்டில் செல்லப் பிராணிகள் உள்ளனவா என்று கேட்டேன். சிலர் தங்கள் வீட்டில் செல்லப் பிராணிகள் உள்ளன என்றனர், ஆடு, மாடு, கிளி, கோழி… என அடுக்கிக் கொண்டே சென்றனர். சிலர் எங்கள் வீட்டில் செல்லப்பிராணிகள் இல்லை ஆனால், எலி, கரப்பான், அணில்… உள்ளன என்றனர். உடனே நான் சரி அவைகள் என்ன செய்யும் என்று கேட்டபொழுது. வகுப்பறையிலிருந்து வெவ்வேறு அனுபவங்கள் வந்தன. அவற்றை வரையுங்கள் என்று கூறியதும் மாணவர்கள் மகிழ்ச்சியாக ஈடுபட்டனர்.

**வரைய வைத்து எழுத வைத்தல்:**


குழந்தைகளிடம் செல்லப்பிராணிகளைப் பார்த்துக்கொள்ளும் முறைபோன்ற காட்சிகள் இடம்பெறுமாறு படங்கள் வரைய சொன்னேன். குழந்தைகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட செயல்பாட்டை ஆர்வமுடன் உற்சாகத்தோடு வரைய ஆரம்பித்தனர். பின்னர் அப்படத்தை ஒரு கதையாக எழுதுமாறு தூண்டினேன். முதலில் குழந்தைகள், கதையாக சொல்வதில்தான் ஆர்வம் காட்டினர், எழுதுவதில் அவர்களுக்கு அனுபவம் இல்லை என்பதால் முதலில் நான் கரும்பலகையில் ஒரு மாணவன் கூறிய கதையை எழுதி காண்பித்தேன். பின்னர் குழந்தைகளை, அவர்கள் வரைந்துள்ள படத்திற்குக் கதை எழுதுமாறு கூறினேன். ஒருசில மாணவர்களே கதையை முழுமையாக எழுதினர். சிலர் இரண்டு மூன்று வரிகள் எழுதினர். மூன்றாம் வகுப்பு மாணவர்கள் இந்த அளவிற்கு எழுதியதை நான் ஒருபெரிய முன்னேற்றமாக கருதுகிறேன்.



**எழுதியதை சரிசெய்தல்:**

எழுத்துப் பிழைகள் இருந்தாலும், அவற்றையும் சரியென்று கூறினேன். எனக்குப் புரியாத சில வரிகளை குழந்தைகளிடமே கேட்டுப் புரிந்து கொண்டேன்.

இச்செயலின் முடிவாக, குழந்தைகளிடம் ஒரு வெள்ளைத் தாளினைக் கொடுத்து, மீண்டும்




இதேபோல் வேறு ஒரு கதையை எழுதுமாறு வீட்டு வேலையாக கொடுத்து அனுப்பினேன். குழந்தைகள் வீட்டுவேலையை தங்கள் பெற்றோருடன் காண்பித்து, கதையைச் சொல்லி எழுத்துப்பிழை இல்லாமல், தங்களுடைய கையெழுத்தில் எழுதி வந்தனர்.



**கதைவாசித்தல்:**

அடுத்த நாள் பாடவேளையில் குழந்தைகளை சிறுசிறு குழுக்குகளாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிடம் விலங்குகள் மற்றும் பறவைகளை மையமாக கொண்ட கதைப் புத்தகங்களைக் கொடுத்து, அவற்றில் ஒரு படக்காட்சியைத் தேர்ந்த்தெடுத்து, அந்தப் பட காட்சியைத் தங்களுடைய வரைப்படதாளில் வரைந்து, பின் அதற்கு ஒரு கதை எழுதுமாறு கூறினேன். குழந்தைகள் குழுவில் அமர்ந்து, தங்களுக்குப் பிடித்தமான ஒரு படத்தைத் தேர்வுசெய்து, வரைந்து அவற்றிக்குக் கதையும் எழுதினர். பின்னர் அவர்கள் அக்கதை புத்தகத்தை வாசிக்கவும் ஆரம்பித்தனர். வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் கதைகூறுதல் மற்றும் கதை எழுதுதல் நிகழ்ச்சியில் ஆர்வமுடன் பங்கேற்றனர்.




குழந்தைகள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான செயல்பாடுகளை எதிர்பார்க்கின்றனர். அந்த எதிர்பார்ப்பின் தொடக்கமாக, குழந்தைகளை தங்கள் வீட்டில் உள்ள பத்திரிக்கையை எடுத்து வருமாறு கூறினேன். அவற்றில் தங்களுக்குப் பிடித்த செல்லப்பிராணியை வரைய சொன்னேன், அவற்றிக்கு வண்ணங்களைத் தீட்டி, அவற்றை பிங்கர் பப்பெட் (finger puppet) செய்ய வைத்தேன்.

குழந்தைகள் அனைவரும் விரல் பொம்மை (Finger puppet) செய்தனர். தாங்கள் செய்த பொம்மைகளை வைத்து கதையாகக் கூறினர். இச்செயல்பாடுகள் மூலம் குழந்தைகள் பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழ்க்கை முறை பற்றி ஒரு தெளிவான கருத்துகளைத் தாங்களே அறிந்துகொண்டனர்.

பின்னர் நான், கௌதாரியும் முயலும் என்ற கதையைக் குழந்தைகளே படிக்குமாறு தூண்டினேன். குழந்தைகள் கதையைப் படித்து அக்கதையை விளக்கவும் செய்தனர். பின்னர் வகுப்பில் வாசிப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.


கதை கூறுதல் முறை மூலமாக குழந்தைகளிடம் வளர்க்கப்பட்ட திறமைகள்

1. சிந்திக்கும் திறன்












2. வரையும் திறன்

3. கதையை கோர்வையாக கூறும் திறன்.

4. தன்னம்பிக்கை

5. அறியாததை தாங்களே அறியும் திறன்

6. பயமின்மை

7. பேசும் திறன்

இவைபோன்ற பல திறமைகளை குழந்தைகள் தாங்களே வளர்த்துக்கொண்டனர். இத்திறன்கள் குழந்தைகளிடம் வளர ஆசிரியர் ஒரு தூண்டுகோலாய் மட்டுமே இருந்தது போல் உணர்ந்தேன்.

நம் தமிழ்ப் பாட புத்தகத்தில் பல பாடங்கள், கதைகளாகவே உள்ளன. அவற்றை நடத்துவதற்கும், மாணவர்களின் மனதில் கதையை சுலபமான முறையில் கொண்டு செல்வதற்கும் படங்களின் மூலம் கதை எழுதும் மற்றும் கதை கூறும் முறை உதவியாக உள்ளது என நான் நம்புகிறேன்.



K. **பத்மினி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப. தாட்டாஞ்சாவடி

# இயற்கையை வருணித்தலும் வாசித்தலும்


**மரம் பற்றி கதை சொல்லி, கதை உருவாக்கி, மரம் பார்வையிட்டு, நமது மரம் கதை வாசித்து... இயற்கை பாடத்தைக் கற்றனர்.**

**அறிமுகம்**:

நான்காம் வகுப்பு மாணவர்களுக்குக் கற்பனை திறனையும் படைப்பாற்றலையும் வளர்க்கும் பொருட்டு பல்வேறு செயல்பாடுகள் மூலம் இயற்கையின் பல்வேறு கூறுகளான மரங்கள், செடிகள்,விலங்குகள் மற்றும் பறவைகள் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல்.

**கதை மற்றும் மரம் பற்றிய கதைகளைக் கூறுதல்**:


சுற்றுப்புறச்சூழல் உற்றுநோக்குதல் மற்றும் அவைகளை ஒருங்கிணைத்துக் கதை கூறுதல் மூலம் மாணவிகளின் இயற்கையான சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்



மாணவிகளுக்கு மிகவும் பிடித்த கதையைக் கூற வேண்டும் என்று கூறியவுடன் அனைவரும் ஆர்வத்துடன் கதை கூறினார். நீங்கள் கூறிய கதை மரத்தினை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறியவுடன் அதிலும் சில வித்தியாசமான கற்பனைக் கதைகள் வெளிவந்தன. அடுத்த கட்டமாக மரம் மற்றும் அதனுடன் ஏதேனும் ஒரு பறவை, விலங்கு அல்லது மனிதர்களை இணைத்து ஒரு கதை கூறுங்கள் என்று கூறியவுடன் ஒவ்வொருவரும் ஒரு கதாசிரியராக மாறிவிட்டனர். வெவ்வேறு விதமாக சிந்திக்க அவர்களால் மட்டுமே முடியும் என்பதை நிரூபித்தனர்.

**உதாரணம்**:

- ❖ பூனையும் மரமும்
- ❖ மரமும் நானும்
- ❖ ராஷாவும் மரமும்




**மரம் பார்வையிடல்**:

மாணவர்களை இரு குழுவாகப் பிரிந்து மா மற்றும்

நெல்லி மரத்திலுள்ளவற்றை உற்றுநோக்கச் சொன்னவுடன், அவர்கள் தாங்கள் கண்டவற்றைக் கவனமாகக் குறித்துக் கொண்டனர். வகுப்பறைக்கு வந்தவுடன் ஒவ்வொரு குழுவும் வருணனையாகச் சொல்லுங்கள் என்றவுடன் குட்டி குட்டி நெல்லிக்காய், காய்த்து தொங்கும் மாம்பழங்கள், காய்ந்த இலைகள் என்று தங்கள் வருணைகளை அடுக்கிக் கவிஞர்களாக மாறினர்

உறவினர்களிடம் கேட்டறிந்த கதைகளைப் பட்டியலிட்டு அக்கதைகளை யார் கூறினார்கள் என்று எழுதிவருமாறு கூறப்பட்டது. கதைகளாகக் குவிந்தன. பின் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட மரத்தைப் பற்றி எழுதவும் அதை அவர்கள் வருணித்து எழுதும் செயல்பாட்டையும் செய்யும்படி செய்தோம். மரத்தை அச்ச்சலாக வரைந்ததோடு வருனித்து எழுதினர்.

**கதை எழுதுதல் மற்றும் மரம் வரைதல்:**



படைப்பாற்றலை வளர்க்கும் பொருட்டு மாணவிகளை அவர்கள் பார்த்த மரங்களை ஓவியமாக வரையச் செய்தல் மற்றும் கதைகளை உருவாக்க ஊக்குவித்தல்.

மாணவிகள் எழுதி வந்த கதைப்பட்டியலை வகுப்பறையில் பார்வைக்கு வைத்து அனைத்து மாணவிகளையும் ஒவ்வொரு படைப்பையும் பார்வையிடச் செய்தல்.

மாணவிகளிடம் வரைபடத்தாளைக் கொடுத்து தங்களுக்கு பிடித்த மரம் ஒன்றை வரையுமாறு கூறப்பட்டது. இப்பொழுது மாணவிகள் ஓவியர்களாக மாறினர்.

தென்னை மரம், ஆப்பிள் மரம், நெல்லி மரம், வாழை மரம் என அவர்களின் படைப்புகள் என்னை வியப்பில் ஆழ்த்தின.

அதிலும் சில மாணவிகள் மரத்தில் மயில், வானவில், மழை, மேகம், கிளி, ஊஞ்சல்... என அவர்களின் கற்பனைத்திறன் ஊற்றெடுத்து நின்றது. மீண்டும் கதாசிரியர்களாக மாற தாங்கள் வரைந்த மரத்தையே மையப்படுத்தி கதை உருவாக்குங்கள் என்று கூறியவுடன் கதை ஊற்று அவர்களிடையே அருவியாய் மாறி ஒவ்வொருவருடைய கதையும் ஒவ்வொரு புதுமையை


புகுத்தி அவர்கள் தந்த தலைப்பு அருமையிலும் அருமை!

**நமது மரம் கதை வாசிப்பு**

வாசிக்கும் திறனை மேம்படுத்தவும் மாணவிகளிடையே வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தவும் உதவும் செயல்பாடுகளில் ஈடுபடுதல்



இந்நிலையில் மாணவிகளின் வாசிப்புத் திறனையும், சிந்திக்கும் திறனையும் அதிகரிக்கும் வகையில் பட வீழ்த்தி (Projector) இயந்திரம் மூலம் ஒரு மரத்தின் கதையை காண்பித்து பின் மாணவிகளை ஒவ்வொருவராகத் தனித்தனியே அழைத்து கதையை வாசிக்கச் செய்தோம். பின் மாணவிகளை அழைத்து இதிலிருந்து நீங்கள் ஒரு கதையைக்



கூற வேண்டும் என்று கூறியவுடன் மாணவிகள் ஒவ்வொருவரும் தன் சொந்த நடையில் ஒரு கதையினை மிக அழகாகக் கூறினார் அதிலும் அனுபவதாரணி எனும் மாணவி அழகு தமிழில் வருணனையாகக் கூறினர்.

மேற்கண்ட செயல்பாடுகள் மரம் பற்றிய மாணவிகளின் வெவ்வேறு புரிதல்களை ஒருங்கிணைக்கவும்,அவர்களின் கற்றல் திறன்களை மேம்பாடு அடைய செய்யவும் உதவியதுடன் , அவர்கள் முழு ஈடுபாட்டுடனும் மகிழ்ச்சியுடனும் கற்றல் செயல்பாடுகளில் பங்குபெற தூண்டுகோலாய் இருந்தது., அவர்களை முழு ஈடுபாட்டுடனும் மகிழ்ச்சியுடனும் கற்றல் செயல்பாடுகளில் பங்குபெற உதவியது.



**ஷாலினி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப சவரிராயலு

# இயற்கை

மரம் பார்த்து மரம் வரைந்து கதை எழுதினோம்

**செயல்பாடு** 1

வகுப்பில் உள்ள காகிதக் குடையைக் காட்டி அதைப் பற்றி மாணவர்களிடம் பேசச் செய்தோம்.

கூடையைப் பற்றி பல வகையில் வர்ணனை செய்யச் சொன்னோம். அதற்கு குழந்தைகள் பல பெயர்களை வைத்து வர்ணனை செய்தார்கள். உதாரணத்திற்கு, அழகான கூடை, வட்டமான கூடை, வண்ண வண்ண கூடை, ஓவியம் வரைந்த கூடை, மற்றும் பேப்பர் கூடை என்ற பெயர்களில் வர்ணனை செய்தார்கள். அச்சமயம் எங்கள் அறைக்கு வந்த தலைமை ஆசிரியர் பற்றியும் வருணிக்கத் துவங்கினர்.

மாணவர்களிடம் தென்னை மரத்தை வருணித்து சொல்லுங்கள் என்றால் அதற்கும் தயாராகி , உயரமானது. குலை குலையை காய்க்கும். கருப்பாக இருக்கும் எனத் துவங்கினர்.

**செயல்பாடு** 2

நமது மரம் புத்தகத்தைக் காட்டி மாணவர்களைக் கதை சொல்ல சொன்னோம்.

அடுத்து வர்ணனை சொற்களைப் பற்றி சொல்ல, புத்தகத்தில் உள்ள மரத்தை விவரிக்க சொன்னோம். மாணவர்கள் அதற்கு, சிட்டு குருவி பறக்கிறது, சிட்டு குருவி அமர்ந்து இருக்கிறது,

பெரிய மரம், அழகான மரம், சிட்டு குருவி இருக்கிற மரம், நிழல் தருகிற மரம், அசைந்து அசைந்து ஆடுகிற மரம், சல சல என சத்தம் போடுகிற மரம்.

**செயல்பாடு** 3 - **மரம் படம் வரைதல்**

குழந்தைகள் வீட்டில் உள்ள மரத்தைப் பற்றி கேட்டு அதை பற்றி கூற சொன்னோம். குழந்தைள் அவர்கள் வீட்டில் உள்ள மரம் பெயரை பற்றி சொன்னார்கள். அவர்கள் சொன்ன பெயரை வைத்து அவர்களை ஒரு மரம் ஓவியத்தை வரைய சொன்னோம். குழந்தைகள் தங்களுக்குப் பிடித்த மரம் ஓவியத்தை வரைந்தார்கள்.





**செயல்பாடு** 4 - **மரம் பார்வையிடல்**

மாணவர்கள் பள்ளியில் உள்ள மரத்தைப் பார்க்க அழைத்துச் செல்லப்பட்டார்கள். மரத்தைச் சுற்றி வட்டமாக நிற்க வைக்க பட்டார்கள். மரத்தை நன்றாக கவனித்து அதில் உள்ளதை வர்ணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். மாணவர்கள் அனைவரும் மரத்தைப் பற்றி வர்ணனை செய்து ஒரு வரி சொல்ல வேண்டும் என்று குறிப்பிட்டேன். ஒவ்வொருவரும் கூறத் துவங்கினர்.



இந்த மரம் ராட்டினம் மாதிரி இருக்கு

இலை ஊசி மாறி இருக்கு

மரத்தில் காகா அட காக்குது.

குட்டி குட்டி வேர் தெரியுது.

மரம் உயரமா இருக்கு.

மரம் பற்றிய தகவல் சேகரித்தல்:

மாணவர்களுக்கு மரத்தை பற்றி ஒரு வீட்டு பாடம் கொடுக்கப்பட்டது. அதில் அவர்கள் வீட்டில் அருகாமையில் உள்ள ஒரு மரத்தை நன்றாக கவனித்து அதை பற்றி ஒரு ஐந்து வரியில் குறிப்பு மற்றும் ஒரு ஓவியம் வரைய வேண்டும்.

நாம் வியக்கும்படி இருந்தது. அவர்கள் ஓவியம் மற்றும் எழுத்து. பனை மரத்தைப் பார்த்து அப்படியே வரைந்திருந்தனர். தென்னை மரத்தில் இளநி தொங்குவது போல் வரைந்தது மட்டுமல்ல, அதுபற்றி ஒரு பக்கத்திற்கு எழுதி வந்தனர். பார்க்கில் உள்ள ஆலமரத்தையும் அதன் அருகிலுள்ளவரையும் வரைந்திருந்தனர்... பார்த்துக்கொண்டே இருக்கலாம் போலிருந்தது.







**செயல்பாடு 5**

ஒவ்வொருவரும் எழுதி வரைந்திருந்ததை ஒரு புத்தகம் போல் மாற்றினோம். மாணவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.








**சௌ. மாலதி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப. நைனார்மண்டபம்

# இயற்கை

**சாதாரண வகுப்பறைப்போல் ஆசிரியர் தன் சிவப்பு மையினால் எது தவறு என சுட்டிக்காட்டுவதாக இல்லாமல் மாணவர்கள் தாங்களாகவே தங்கள் படைப்புகளை மாற்றம் செய்கின்றனர்.**

**படம் பார்த்து விவரித்தல்:**

பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள இயற்கைக் காட்சியை மாணவர்களிடம் உற்றுநோக்குமாறு கூறினேன். படத்தில் அவர்கள் பார்த்ததை வரிசையாகக் கூறினர். கூறுவதற்கு வாய்ப்பு வேண்டுவோர் கைகளை உயர்த்த வேண்டும் என்பது எங்கள் வகுப்பறை விதி. அதன்படி அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டு அவர்கள் கூறியவைகளை கரும்பலகையில் எழுதினேன். காடு, முயல், மீன், மரங்கள் என ஒவ்வொரு வார்த்தையும் வாக்கியமாகியது.

எ.கா. காடு

**மாணவர்** : இது ஒரு காடு.
**ஆசிரியர்** : அந்தக் காடு எவ்வாறு உள்ளது?
**மாணவர்கள்**: அழகாக; பசுமையாக; அடர்ந்த... என விவரித்து கூறினர்.

இவ்வாறு அவர்கள் விவரித்த வாக்கியங்கள் அனைவரின் ஒப்புதலுடன் கரும்பலகையில் எழுதினேன். ஒரு மாணவர், "மீன்கள் நீரில் துள்ளிக்குதிக்கிறது" எனக் கூறினான், மற்றவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டு 'துள்ளிக்குதிக்கின்றன' என மாற்றம் செய்து கரும்பலகையில் எழுதினேன். இவ்வாறாக படத்தில் அவர்கள் பார்க்கும் காட்சிகள், படத்தில் உள்ள செயல்கள், படத்தைப் பற்றி அவர்களின் கருத்து என விவரித்து எழுதுதல் தொடர்ந்தது. பிறகு, வரிசைப்படுத்தப்பட்டு அவர்களுடைய வகுப்புப்பாட நோட்டில் எழுத வைத்தேன்.

**குழு செயல்பாடு: விவரித்து எழுதுதல்**

மாணவர்கள் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவிற்கும் பாடப்புத்தகத்தில் உள்ள இயற்கைக் காட்சி படம் கொடுக்கப்பட்டது. முன்னதாக அந்தப் படத்தை விவரித்து கூறுமாறு மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. ஒவ்வொருவரும் பங்கு பெற்றனரா என்பதை உறுதி செய்தேன். வாய்மொழியாக கூறிய பிறகு குழுக்களில் கலந்துரையாடல் நடைபெற்றது. குழுவில் உள்ள ஒவ்வொரு மாணவரும் தங்கள் கருத்தைப் பகிர வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் குழு உறுப்பினர்களின் கருத்துக்குச் செவிமடுக்க வேண்டும். பின்னர் விவரித்து எழுத வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் விவரித்தலும் கருத்துப் பகிர்வும் நடைபெறுகிறதா என்பது ஆசிரியரால் உறுதிபடுத்தப்பட்டது. பின்னர்





குழுவிற்கு ஒரு வரைப்படத்தாள் கொடுக்கப்பட்டு மார்கரில் (marker pen) அவர்கள் விவரித்ததை எழுதினர். தனித்தனி வாக்கியமாக அல்லாமல் ஒரு பத்தியாக எழுதுகின்றனரா? முற்றுப்புள்ளி வைக்கின்றனரா? என்பதை ஆசிரியரால் உறுதி செய்யப்பட்டது.


**ஆசிரியர் வடிவத்தோடு ஒப்பிடுதல் மற்றும் தொகுத்தல்**


ஆசிரியரின் வடிவமும் தயார் செய்துகொண்டேன். குழுதயாரிப்புமுடிந்தவுடன்அவர்களின்படைப்புகள் ஆசிரியர் வடிவத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டது. இந்த ஒப்பீட்டில் மீண்டும் மீண்டும் வாசித்தல் நிகழ்கிறது. ஆசிரியர் வடிவத்தை வாசிக்கின்றார். பின்னர் மாணவர்கள் அதனுடன் ஒப்பிடுகின்றனர். இந்த ஒப்பீடு முடிந்தவுடன். (Editing) தொகுத்தல் நடைபெற்றது. சாதாரண வகுப்பறைப்போல் ஆசிரியர் தன் சிவப்பு மையினால் எது தவறு என சுட்டிக்காட்டுவதாக இல்லாமல் மாணவர்கள் தாங்களாகவே தங்கள் படைப்புகளை மாற்றம் செய்கின்றனர். வாக்கிய பிழை, எழுத்துப்பிழை இலக்கணப் பிழை அன அனைத்தும் அவர்களாலேயே மாற்றம் செய்யப்படுகிறது. எந்த இடத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதை அவர்களுக்குள்ளே கேட்டு மாற்றம் செய்தனர்.

நீக்கல், சேர்த்தல் என அனைத்தும் அவர்களே செய்தனர். இங்கும் மீண்டும் மீண்டும் வாசித்தல் நடைபெறுகிறது

**உதாரணம்: மாணவர்கள் ஒப்பிடுதல்**
ஆசிரியர் : ஆசிரியர் படைப்பையும் உங்கள் குழு படைப்பையும் ஒப்பிட்டு கூறுங்கள்
குழு 1 : நாங்கள் வாத்து பற்றி விவரிக்கவில்லை. நீங்கள் பூக்கள் பற்றி எதுவும் எழுதவில்லை.
இவ்வாறு ஒப்பிட்டு கூறுகின்றனர்.
**உதாரணம் : மாணவர்கள் தொகுத்தல்**
இலக்கண பிழைகளைத் திருத்தும் பொருட்டு, ஆசிரியர் குழுவின் ஒப்புதல் கேட்டல்.
எ.கா: பூக்கள் அழகாக இருக்கின்றது.
ஆசிரியர் : நீங்கள் இவ்வாக்கியத்தில் ஏதேனும் திருத்தம் செய்ய விரும்புகிறீர்களா ?
மாணவர்கள்: பூக்கள் அழகாக இருக்கின்றன.
மாணவனே மார்கர் (marker pen) கொண்டு "இருக்கின்றது" என்பதை "இருக்கின்றன" என திருத்தம் செய்தான்.

இவ்வாறு ஒவ்வொரு குழுவின் படைப்பும் மாற்றம் செய்யப்படுகிறது பின்னர் திருத்தப்பட்ட வடிவத்தை மாணவர்கள் தங்கள் வகுப்பறை சுவடியில் எழுதுகின்றனர். பின் அந்தப் படைப்பிற்குப் பொறுத்தமான படம் வரையப்பட்டு




வண்ணமும் கொடுக்கப்படுகிறது. வரைதலும் வண்ணம் பூசுதலும் தனி மாணவர் செயல்பாடு. மாணவர்களின் படைப்புகளை குழுவாகவே வாசிக்க வைக்க வேண்டும். மெல்ல கற்கும் மாணவர்களிடம் வார்த்தைகளை அடையாளம் காட்டச் செய்தல், சிறு வாக்கியத்தைப் படிக்க வைத்தல், எழுத்தை அடையாளம் காட்டுதல் என தனிக்கவனம் செலுத்த முடிகிறது. இவ்வாறு ஒவ்வொரு குழுவிலும் வாசிக்க வைக்கப்பட்டது.

பின்னர் தொடர்பணியாக மாணவர்களே ஒரு படத்தைத் தேர்வு செய்து விவரித்து எழுதுமாறு கூறினேன்.





மாணவர்களுக்கு நம்பிக்கை கிடைக்கிறது. அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை வரவேற்கின்றனர். மற்றவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுக்கும் பண்பை பெறுகின்றனர். சிவப்பு மையினால் ஆசிரியர் தவறுகளை மட்டும் சுட்டிக்காட்டும் வழக்கத்தில் இருந்து மாறுபட்ட ஒரு முறையாக இது இருக்கிறது. பிழை என்று எதுவும் சுட்டிக்காட்டப்படாமல் இருப்பதால் மாணவர்கள் பயம் இன்றி கருத்துளை வெளிப்படுத்துகின்றனர். படங்கள் மூலம் கற்பனைத் திறன் வலுப்பெறுகிறது.



**மு.சாந்தகுமாரி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப நோணாங்குப்பம்

# காடு எம் வீடு

**செயல் : 1**
**தொடர்புப்படுத்துதல்**

முந்தைய பாடப்பகுதியான 'எனக்கு இறக்கைகள் முளைத்தால்' என்ற பாடத்தின் தொடர்ச்சியாகவே 'காடு எம் வீடு' பாடம் அமைந்தது.

1. நீர்நிலைகள் எதனால் மாசடைகின்றன?
2. மக்கள் தொகைப் பெருக்கத்தினால் என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன?
3. மரங்களை நட்டால் என்ன மாற்றம் நிகழும்? மரங்களை நடுவது சரியா? தவறா?

போன்ற கேள்விகளைக் கேட்டு மாணவர்களை ஆயத்தப்படுத்தினேன். மேலும் முந்தைய பாடப்பகுதியின் மூலம் மாணவர்கள் அறிந்து கொண்ட விசயங்களைக் கேட்டுப் பெற்றேன்.

**செயல் : 2**
**பாடப் பகுதியினை விளக்கமாக எடுத்துரைத்தல்**

காட்டிலுள்ள விலங்குகள் அனைத்தும் ஒன்று கூடுகின்றன. காட்டில் உள்ள மரங்களின் எண்ணிக்கை குறைவது பற்றியும் நீர் வறண்டுபோகும் விதம் பற்றியும் உரையாடின. மனிதர்கள், எதிர்காலத்தினைப் பற்றி சிந்தனை இல்லாமல் மரங்களை வெட்டி காடுகளை அழிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டின. மேலும் விலங்குகளும் பறவைகயுளும் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பது என்று முடிவு செய்து, அதன்படி செயல்பட்டு காட்டை பசுமையாக்கின. புதிய மரங்கள் ஓங்கி வளர்ந்து காணப்பட்டன. இதன் மூலம் விலங்குகள் மகிழ்ச்சியடைந்தன. அவை அனைத்தும் புதியதோர் உலகை உருவாக்கி வாழ்ந்தன. ஆனால் மனிதன்....

மனிதன் தன்னுடைய தேவைகளுக்காக காடுகளை அழிக்கின்றான். ஆனால் இயற்கையாகவே பறவைகள் மரத்திலுள்ள பழத்தைச் சாப்பிட்டு அதன் விதைகளை கீழே போடும். விழுந்த விதைகள் மரமாக வளரும். நாமும் நம் பள்ளியில் இருக்கும் வேப்பம் விதைகளை, நமக்கு அருகில் இருக்கும் ஏரிக்கரை ஓரங்களில் காடுகளில் வீசினால், அது மரமாக வளரும் என்று மாணவர்களிடம் சொன்னேன். "தண்ணி ஊத்தாம எப்படி சார் மரம் வளரும்? " என்று கேட்டனர். மழை பெஞ்சா தண்ணி கிடைக்கும் என்று சொன்னேன். உங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் போய் உங்க விதைக்குத் தண்ணி ஊத்துங்க என்று சொன்னேன்.

இதன் தொடர்ச்சியை மாணவர்களிடம் கேட்டு காடுகளை அழிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களை விளக்கமாக எடுத்துரைத்தேன். மேலும் காடுகளை அழிப்பது மற்றும் மரங்களை வெட்டுவது நன்மையா? தீமையா? என்று கேட்டதற்கு, பெரும்பாலான மாணவர்கள் தீமையே என்று கூறினர்.

நமக்கு தேவையான மரங்களை வெட்டி , வணிக ரீதியாகவும் நாம் பயன்பெற்று வருகிறோம். ஆனால் மரங்களே இல்லாமல் இருந்தால் அது தீமையாகத்தான் இருக்கும் என்றேன்.

**செயல்-3 ஆவணப்படம், கதைப்புத்தகம் மற்றும் பொம்மலாட்டம் மூலம் பாடப்பொருளை விளக்குதல்**

பூமி வெப்பமயமாதல் குறித்து மாணவர்களை அறியச்செய்தல்.

பூமி எதனால் வெப்பமயமாகிறது என்பதனையும் அறியச்செய்தல்.

பூமி வெப்பமயமாதல் பற்றிய ஆவணப் பாடத்தைத் திரையிட்டு காண்பித்தல்.


அதன் மூலம் அவர்கள் உணர்ந்த செய்திகளைப் பற்றி உரையாடுதல் அதற்குரிய தீர்வினையையும் மாணவர்களிடம் பெறுதல்.

நெகிழிப் பொருட்கள் பயன்பாட்டைக் குறைப்பது குறித்தும் உரையாடுதல்

நீர் சேமிப்பு குறித்தும் நீர் இல்லாமல் வாழ்வது இயலாது என்பதைக் குறித்தும் மாணவர்களிடம் நீரை எவ்வாறு சிக்கனமாக பயன்படுத்துவது என்பதை குறித்தும் உரையாடுதல்.

மாணவர்கள் நன்கு பாடத்தைப் புரிந்து கொண்டனரா என்று அறிந்து கொள்ள இப்பாட செய்தியைக் கருத்துப்படமாக வரையச் செய்தல். நன்கு வரைந்த மாணவர்களை பாராட்டுதல்.





மேலும் பாடக்கருத்தை வலுப்படுத்த :

1. ஷாதாவின் காடு
2. தண்ணீர் காடு

போன்ற கதைப் புத்தகத்தைக் கொடுத்து வாசிக்கச் செய்து அதன் மூலம் அவர்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் திரட்டி காடுகளின் அவசியத்தை உணர்த்துதல். மேலும் வாசிப்புப் பழக்கத்தையும் ஊக்குவித்தல். காடு எம் வீடு பாடக்கதையை பொம்மலாட்டமாக நடிக்க வைத்தேன். பாடப் புத்தகத்தில் கொடுத்த உரையாடலை எடுத்துக் கொண்டு மாணவர்கள் தனக்கான கதாபாத்திரங்களை, அவர்களே தேர்வு செய்து இயல்பாக நடித்தனர்.

மாணவர்களைக் கொண்டு காடு எம் வீடு பாடக் கதையை பொம்மலாட்டமாக நடிக்கச் செய்ததினால் மாணவர்கள் பயமின்றி பேசும் திறனை வளர்த்துக்கொள்ளல்.

**செயல்-4**

**மரக்கன்றுகள் நடுதல்** :

மாணவர்களைக் கொண்டு பள்ளி அருகில் உள்ள இடத்தில் மரக்கன்றுகளை நடுதல். அவர்கள் நட்டு வைத்த மரக்கன்றுகளுக்கு அவர்களாகவே நீர் ஊற்றி பராமரிக்கச் செய்து மரக்கன்று வளர்ப்பதன் அவசியத்தை அறியச் செய்தல்.



மேலும் அவர்களின் பிறந்தநாள் அன்று வீட்டில் மரக்கன்றுகளை நடுமாறு அறிவுறுத்துதல். மாணவர்களும் பின்பற்றுவதாக உறுதியளித்தனர்.

**விளைவுகள்**:

தாம் கற்றுக் கொண்ட பாடக்கருத்தை மாணவர்களிடம் தங்கள் வீட்டில் பெற்றோரிடம் கூறி உள்ளார்கள். அதில் ஒரு சில பெற்றோர்கள் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவேன் என்றும் நெகிழிக்குப் பதிலாக துணிப்பையைப் பயன்படுத்துவேன் என்றும் கூறி உள்ளார். ஒரு சில பெற்றோர்கள் உன் ஆசிரியர் கூறுவதை எல்லாம் வீட்டில் வந்து கூறாதே என்று கூறியுள்ளார். எனினும், என்னுடைய வகுப்பு மாணவர்கள் புரிந்து கொண்டனர் என்பதை எண்ணி இப்பாடத்தை முடித்தேன்..





**ராஜேஷ்,** தொ.ப.ஆ,
அ.உ.ப. கொடாத்தூர்.

# ஒரு கதை சொல்லவா?

**ஒரு கதை கேட்டோம் ! பல கலை படைத்தோம்!!**

கருவறையிலிருந்தே இவ்வுலகத்தில் வாழக் கற்றுக் கொள்ளும் வழிகளை, கதைகளாய் வாழும் கலையைத் தாயிடமிருந்து கற்கின்றோம். கதைகளின் வாயிலாக நாம் கேட்டதைப் பிறகு கண்களால் பார்த்து தாய், தந்தை உறவுகளின் இனிய மொழிகளைக் கதைகளாய் உள்வாங்கி மொழியறிவைப் பெறுகிறோம். இதை இதிகாசங்ளும் நமக்கு விளக்குகின்றன.

கதைகள் என்பது நம்மில் ஊறிப்போன ஒன்றாகும் என்பதில் துளியும் ஐயமில்லை. கதை கேட்க விரும்பாதோர் யாரும் இருக்க மாட்டார்கள். கதைகளின் மூலம் குழந்தைகளின் கற்கும் ஆர்வத்தைத் தூண்டும் பொழுது குழந்தைகளால் மகிழ்வுடன், எளிமையாகவும் இனிமையாகவும் கற்கமுடிகிறது. குழந்தைகளின் திறன் மேம்பட புதிய முறையில் வடிவமைத்த செயல்பாடுகள் மொழியில் மாற்றத்தை ஏற்படுத்துயிருக்கின்றது என்பது உண்மை.

அதுபோல, கதை சொல்வது என்பது மேம்போக்காக உணர்வில்லாமல் சொல்லும் பொழுது சுவாரசியமாக இருக்காது என்பதுடன் கதை கேட்கும் ஆர்வத்தை சிதறடிக்கும்.... கதை கூறுபவர்க்கென்று சிலபல சிறப்புகள் வேண்டும் என்பதை கற்றல் திருவிழாவின் பொழுது தான் நான் உணர்ந்து கொண்டேன். ஆகவே அத்தகைய ஒருவரை வரவழைத்து முதலில் குழந்தைகளை ஈடுபடுத்தினேன். (உ.ம) திரு. பூபதி ஐயா அவர்கள் கேட்டதும் ஒப்புக்கொண்டார். பள்ளிக்கு வந்து குழந்தைகளைப் பல கதைகளில் மகிழ்வித்தது மட்டுமின்றி கற்பித்தலில் எங்களுக்கும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தித் தந்தார்.

அவர் எளிய மேக்கப் போட்டு குழந்தையோடு குழந்தையானார். சார்லி சாப்ளின் போல், ஜோக்கர் போல் நடித்துக் கதை சொல்வதை, குழந்தைகள் ரசித்ததுடன், அவர் கூறிய அத்தனைச் செய்திகளும் அவர்களின் மனதில் பதிந்தது. அவர் கூறிய கதைகளைக் குழந்தைகளின் பெற்றோர்கள் கேள்விப்பட்டதும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

**கதை கூறும் தன்மைகள்** :

- கதை கூறுபவர் எங்கு? யாருக்கு? கதை சொல்லப் போகிறோம் என்பதில் தெளிவு வேண்டும்.
- எந்த வயதினருக்குச் சொல்லப் போகிறோமோ அதற்கு ஏற்றாற்போல் கதைக்கரு மற்றும் கதாபாத்திரங்கள் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.
- கேட்போரின் சுவையறிந்து அதற்கு ஏற்றாற்போல் சொல்லுதல் வேண்டும்.
- கதைகளை நேர்த்தியாகச் சொல்லுதல் ,உணர்வு பூர்வமாக நகைச்சுவையுடன் கூறுதல்.
- கேட்பவர்கள் அனைவரையும் நடுநடுவே கதாபாத்திரமாக மாற்றுதல்.
- கதையின் முடிவைப் பற்றிக் கவலைப்படாது சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் ஏற்றுக்கொள்ளுதல்.
- கதையின் போக்கைக் கதை கேட்பவர்களைச் சொல்லச் செய்தல்
- அறிந்த தெரிந்த நிகழ்வுகளை அதிகம் கதைக் களத்திற்குப் பயன்படுத்துதல்.

இவற்றை உணர்ந்த பின் இப்படி ஒரு கதை வேண்டும் என்று போண்டா பள்ளியில் போண்டாட்டம் கதையைக் கூற, குழந்தைகள் மிக்க ஆர்வமும் ஈடுபாடும் கொண்டனர், அதில் வரும் வார்த்தைகளை உச்சரிக்கவும் எழுதவும், கதையைத் திரும்பக் கற்கவும், நடிக்கவும் செய்தனர்.

ஒரு கதையின் மூலம் எத்தனை திறன்களை வளர்க்க முடிந்தது என்பதை நினைக்கும் பொழுது மகிழ்ச்சியாக இருந்தது.

இதைத் தொடர்ந்து கற்றல் உருவாக ஈச்சா பூச்சா கதையைத் தேர்வு செய்தோம்.

**காரணங்கள் :**

1. பெயர் புதுமையாக கவரும் வண்ணம் இருந்தது.
2. படங்கள் வண்ணப் படங்களாகவும் கவரும் வண்ணமும் அமைந்தது.
3. குழந்தைகளுக்குத் தெரிந்த அறிந்த சூழல்.
4. வார்த்தைகள் எளிமையாக மீண்டும் மீண்டும் இடம்பெற்றதும் குழந்தைகளுக்கு எழுத்து வடிவமும் மனதில் பதியும்.
5. முடிவு சொல்லப்படவில்லை. அதனால் குழந்தைகளின் படைப்பாற்றலுக்கு வாய்ப்பு கிடைக்கும்.



■ குழந்தைகளுக்கு முதலில் கதையைக் கூறி குழந்தைகள் அனைவரும் கதையை ஆர்வத்துடன் முழுமையாகக் கேட்டனர். இடையிடையே கேட்ட அத்துணை கேள்விகளுக்கும் மிக அழகாக பதில் கூறினர். அனைவரையும் ஈடுபடச் செய்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

■ பின்னர் கதையைச் சில மாணவர்கள் முன்வந்து முழுமையாகக் கூறினர்.

■ குழந்தைகள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அவர்களுக்கென செயல்பாடுகளைச் சிறுதாளில் எழுதி மடித்து குழந்தைகளிடம் தந்தோம்.

1. பேசாமல், கதை முழுவதையும் செய்கை மூலம் நடித்துக் காண்பித்தல்.
2. கதையை நாடகமாக நடித்தல்.
3. கதை நிகழ்வுகளைப் படமாக வரைந்து படக்கதை மூலம் விளக்குதல்.
4. நடுவே காணாமல் போன 'ஈ" வர ஏன் தாமதம்? அங்கு என்ன நடந்திருக்கும்? என்று கூறுதல்.
5. பூனையை ஈ துரத்திச் சென்றபின் கதையின் முடிவு என்னவாக மாறியிருக்கும்?
6. கதை மாந்தர்களில் யாரைப்பிடிக்கிறது? ஏன்? யாரைப் பிடிக்கவில்லை? ஏன்?

ஒவ்வொரு குழுவுடனும் ஆசிரியர்கள் சென்று குழந்தைகளை வழிநடத்தினர்.

**விதிமுறைகள் :**

- அனைவரும் ஈடுபட வேண்டும்
- கண்டிப்பாக ஒவ்வொருவரும் தத்தம் கருத்துக்களைப் பதிவு செய்ய வேண்டும்
- 20 நிமிடங்களுக்குப் பின் ஒவ்வொரு குழுவும் தங்கள் குழுச் செயல்பாடுகளை விளக்க வேண்டும்
- ஆசிரியரின் வழிகாட்டுதல் மட்டும் தர வேண்டுமே தவிர தன் கருத்தைத் திணிக்கக் கூடாது.
- குழந்தைகள் முழு சுதந்திரத்துடன் ஒன்றாகச் செயல்பட தம் கருத்தைப் பதிவு செய்ய வாய்ப்புத் தரப்பட வேண்டும்.

முதல் குழு மிக அழகாகச் செய்கை மூலம் நடித்துக் காண்பித்தனர். முகமூடிகள் தயாரிக்கப்பட்டு முகமூடிகளுடன் இறக்கை போன்றவற்றை செய்து அழகாக பாத்திரமாகவே மாறி மிகவும் இயல்பாக நடித்தனர். குறுகிய காலத்தில் மேக்கப்பிற்கான பொருட்களைத் தேடி முழுமையாக நடித்துக்

காண்பித்தனர். இது எந்த அளவு குழந்தைகள் கதையைப் புரிந்து கொண்டனர் என்பதை உணர்த்தியதுடன் அதில் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டையும் வெளிப்படுத்தியது.



இரண்டாவதாக கதையை நாடகமாக நடித்துக் காண்பித்தனர். மிக எளிமையாக தங்கள் சொந்த நடையில் வார்த்தைகளைப் பேசுவது சிறப்பாக அமைந்தது. குறுகிய காலத்தில் உரிய மேக்கப் போட்டு நடித்தது வியப்பாக இருந்தது. இந்தத் தாக்கம் முந்தைய நாள் கதை கூறியவரின் மேக்கப் என்பது புரிந்தது.

மூன்றாவது குழு கதையை மிக அழகாக அதை படக்கதை புத்தகமாக மாற்றியிருந்தனர். பூனையின் வயிறு சப்பையாக இருப்பது; குண்டாக இருப்பது; ஈ இலையை இழுத்து வருவது என அனைத்தையும் கருத்தில் கொண்டு மிக அழகாக படக்கதை புத்தகத்தை உருவாக்கித் தந்தனர் அதைப் பார்த்த பொழுது இந்தக் குழந்தைகளால் இதைச் செய்ய முடியுமா? என்று மிகவும்



ஆச்சரியமாக இருந்தது.

**எனது பார்வையில்,**

→ மாணவர்களிடம் கதையினை முன் கூட்டியே சொல்லியதனால், அவர்களுக்கு எளிமையாக கதையின் அமைப்பு புரிந்து விட்டது.

→ கதையோ நடிப்போ அதற்குரிய தன்மையுடன் குழந்தைகளை நடித்தது அவர்களுக்கு அதில் உள்ள ஈடுபாடு விளங்கியது.

→ கதையில் வரும் வார்த்தைகள் திரும்பத் திரும்ப வந்ததால் எளிதாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

→ மாணவர்கள் இதனை நாடகமாக நடிக்க ஆசைப்படுவதற்குக் காரணம் இதிலுள்ள கதாபாத்திரங்களே. மாணவர்கள் தினமும் பார்க்கும் விலங்குகளாக இருந்ததால் அவற்றின் கதாபாத்திரங்களை உணர்ந்து அதற்கேற்றாற்போல் வசனங்களை அவர்களாகவே உருவாக்கி பேசி நடிக்க முடிந்தது.

→ மாணவர்களே கதாபாத்திரங்களைப் பகிர்ந்து கொண்டு அதற்கேற்றாற்போல் மேக்கப் போட்டுக் கொண்டார்கள். மேக்கப்புக்குத் தேவையான பொருட்களை அவர்களாகவே தேடித்தேடி எடுத்துக் கொண்டார்கள். மேடையில் நடிக்கும்பொழுது எந்தவிதமாக கூச்சமும் இல்லாமல் நடித்தார்கள்.

**பள்ளி ஆசிரியர்கள் பிரதிபலிப்பு** :

1. மாணவர்கள் கதையை மிகச் சரியாக கூறினார்கள், இதுவே முதல் வெற்றி.
2. ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு கதாப்பாத்திரம் தரும்பொழுது அவர்களால் செய்யமுடிந்தது.
3. கதாப்பாத்திரங்களை மாணவர்கள் உள்வாங்கிக் கொண்டதால், அவர்களே முகமூடி செய்வதிலும், வசனங்கள் பேசுவதிலும் ஆர்வம் காட்டினர்.
4. மாணவர்கள் கதாப்பாத்திரத்தின் நன்மை தீமைகளை அவர்களே ஆராய்ந்து அறிந்தனர்.

**குழுக்களின் படைப்புகள்** :

குழு நான்கு - இலையைத் தேடிச் சென்ற ஈ

ஈச்சா இலையைத் தேடி வெகுதூரம் சென்றது. அப்போது செல்லும் வழியில் ஒரு பலாமரம் இருப்பதைக் கண்டது. அப்பலாமரத்தில் ஓர் இலையைப் பார்த்தது. அதனால் பறிக்க முடியவில்லை. மரத்தின் கீழே ஒரு குச்சியினைக் கண்டது. அந்தக்குச்சியின் அருகே சென்று தன் கதையைக் கூறி உதவி கேட்டது. குச்சியானது உன்னால் முடிந்தால் என்னை எடுத்து அடித்துக்கொள் என்றவுடன், குச்சியைத் தூக்க முயன்றது. ஈச்சாவால் குச்சியைத் தூக்கமுடியவில்லை. சரி நாமே மறுபடியும் முயற்சி செய்யலாம் என்று தட்டித்தட்டிப் பார்த்தது. இலை கீழே விழவில்லை. அதனைப் பார்த்துக்கொண்டிருந்த பலாமரம் ஈச்சாவிடம் என்ன வெகுநேரமாக ஏதோ செய்து கொண்டிருக்கிறாயே... என்ன செய்கிறாய் எனக் கேட்டது. தன்கதையை ஈச்சா பலாமரத்திடம் கூறியது. இதை நீ என்னிடம் முதலிலேயே கூறியிருக்கலாமே என்று சொல்லி தன் இலை ஒன்றினை உதிர வைத்தது. கீழே விழுந்த இலையை ஆவலுடன் தூக்க முயன்ற ஈச்சா, தூக்கமுடியாமல் அவதிப்பட்டது. சோகத்துடன் அங்கேயே அமர்ந்தது. இதனைப் பார்த்த காகம் ஏன் சோகமாக உட்கார்ந்திருக்கிறாய் என ஈச்சாவிடம் கேட்டது. ஈச்சா தன் கதையைக் கூறி இந்த இலையை என்னால் தூக்கமுடியவில்லை. என்ன செய்வதென்று தெரியவில்லை. என் நண்பன் அங்கே பசியுடன் இருப்பான் என்றது. சரி இதில் நூல் ஒன்றினைக் கட்டித்தூக்கு என்று கூறி நூலினை எடுத்துவந்து, இலையில் கட்டிக் கொடுத்தது. ஈச்சா அதனை மெல்ல மெல்ல இழுத்துச் சென்றது. அங்கே செல்லும் வழியில் ஒரு கல்லில் இலை மாட்டிக்கொண்டது. இலையை இழுக்க முடியாமல் ஈச்சா சிரமப்பட்டது. அதனைக் கண்ட எறும்பு ஒன்று என்ன செய்கிறாய் என்றது. ஈச்ச தன் கதையைக் கூற எறும்பு சரி நான் உனக்கு உதவி செய்கிறேன் என்று இலையின் அடியில் சென்று அதனைத் தூக்கி விட்டது. பிறகு இலையை இழுத்துக்கொண்டு மெல்லமெல்ல சென்றது. ஈச்சா உதவி செய்த எல்லோருக்கும் நன்றி கூறியது. எதிரே பூச்சா வேகமாக ஓடி வருவதனைக் கண்டது.



ஈச்சா இலையை எடுக்கச் சென்றது என்று தொடங்கிய கதையை மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கற்பனையில் தோன்றியதைக் கூறிக்கொண்டே இருந்தார்கள். அதில் ஒரு மாணவன் காகம் நூலைத் தந்த கதையைக் கூறியது சிறப்பாக இருந்தது. ஆசிரியர் ஈச்சாவிற்குப் பலர் உதவி செய்வதுபோல் கதையை ஆரம்பிக்கலாம் என்று கூறியதும் மாணவர்கள் குச்சி, காகம், எறும்பு என்று அவர்கள் எவ்வாறு உதவி செய்தார்கள் என்பதனைச் சிறுசிறு வாக்கியமாகக் கூறினார். பின் அதனைத் தொகுத்து வழங்கினார்.




**மு.சாந்தகுமாரி,** தொ.ப.அ,
அ.தொ.ப வடுவகுப்பம்

# என் குழந்தைகளும் எனக்குள் நடக்கும் கற்றலும்...

நமது வகுப்பறையின் ரத்த ஓட்டமே குறும்புக்கார குழந்தைகள் தான் என்பது கல்வியாளர் யாஸ்பால் அவர்களின் கருத்து. இத்தொடர் நம் எல்லோர் பள்ளியிலும் ஒவ்வொரு வகுப்பிலும் நம்மால் உணரப்பட்டதே. கடந்த ஆண்டு முன் மழலையர் குழந்தைகளோடு என் கற்றலும் கற்பித்தலும் ஆரம்பமான நிலையில் அவர்களை மனதில் நிறுத்தி APF - TRC ல் இருந்து The First Six Weeks of School என்னும் புத்தகத்தை எடுத்து படிக்கலானேன் சற்று தடியாகவே காட்சியளித்த அப்புத்தகத்தில் Primary Grades சம்மந்தப்பட்ட பகுதிகளையும் பொதுவான விளையாட்டுகள் செயல்பாடுகளையும் உள்வாங்கிக் கொண்டேன்.

வெளிநாட்டவர் இருவர் அந்நாட்டு பள்ளிக் குழந்தைகளுக்காக எழுதியது. நம் வகுப்புச்சூழல்; என் குழந்தைகளின் மனநிலை என்னால் என் பள்ளி ஆசிரியர்களால் தயாரிக்கக் கூடிய உபகரணங்கள் இவற்றை முன்வைத்து சிலபல மாற்றங்களோடு இப்புத்தகத்தின் வழி நான் கற்றதை வகுப்பில் நடைமுறைப்படுத்தி வருகிறேன். முதலில் Temporary Time Schedule தயார் செய்து விடுமுறையிலே அதற்கான உபகரணகளை மூட்டைக்கட்டி பள்ளிக்கு எடுத்துச் சென்றேன் Our Learning Basket என்று பெயர்; கொடுக்கப்பட்ட பெரிய கூடையில் அதை வைத்தேன். ஏதோ வைக்கறாங்கடா miss என்று UKG குழந்தை ஒருவன் கூற ஏய் ! எல்லாம் நம்மளுக்கு தாண்டா,இல்ல miss ? என்று கேட்டான் வெறும் புன்னகையோடு அங்கிருந்து நகர்ந்தேன் தினமும் அதிலிருந்து பொருட்களை எடுத்து விளையாட பாட படிக்க முற்பட்டபோது குழந்தைகளின் ஆர்வம் அதிகமானதை உணர்ந்தேன். அவர்களுக்குநானே ஒரு கால அட்டவனையை தயாரித்தேன். 09.45 -Classroom Greeting, 10.00 - Meeting, 10.30- Garden Walk + Bathroom procedure, 11.00 - CircleTime, 11.15-Snacks, 11.30 - Guided Discovery, 12.00 -Rhyme Time, 12.30 - Lunch, 1.30- 2.00Rest if they want, 2.30 - Outside Game / Activity, 3.00 - Number Work, 3.30 - Story Time, 4.00 -Closing Circle, 4.15 -Greeting & Dismissal. இந்த அட்டவனையை முயற்சித்தேன். முதல் வாரம் தட்டுத்தடுமாறியே Time Schedule-™ எங்களால் பின்பற்றப்பட்டது ஆயினும் தொடர் ஈடுபாட்டால் அது சாத்தியமடைந்து வருகிறது.

அட்டவனைச் செயல்பாடுகள்: Classroom Greeting: குழந்தைகள் தங்கள் பெயர்களைக் கூறுதல்ளதோடு ஒவ்வொரு நாளும் வகுப்பிலுள்ள பிற குழந்தைகள் பெயரைக் கைக்குலுக்கிக் கூறுதல். LKG UKG குழந்தைகள் ஆதலால் நான் வண்ணக் கோலப் பொடியில் அவர்கள் சொல்லும் பெயர்களை எழுதுவேன் (அவரவர்கள் விரும்பும் வண்ணத்தில் அவரவர் பெயரை எழுதுவேன் ). அது அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. வணக்கம் ! காலை வணக்கம் Good Morning. Have a Happy day Ahead ! போன்ற வாக்கியங்களால் நான் வாழ்த்த அவர்களும் அதை பிறருக்குக் கூறி மகிழ்வர்.

**Morning Meeting:** அவர்களோடு நானும் கைக்கோர்த்து வட்டமாக நின்று சில சைகைகளை (Actions) செய்வோம். LKG குழந்தைகள் விளையாடுவது எனக்கு சுலபமாக உள்ளது.பறப்பது ஓடுவது (நின்று கொண்டே), கண்களை மூடுவது, சாப்பிடுவது, குதிப்பது, கை தட்டுவது என்று ஒர நாளைக்கு ஏதேனும் 5 Actions பெயரோடு கூறிச் செய்வோம். பின்னர் அவரவர் சாப்பிட்ட உணவு, காலையில் அவர்கள் பள்ளிக்கு வந்த விதம் இவற்றை உரையாடுவோம்.

“நானே சாப்பிட்டேன் மிஸ்”

“இன்னிக்கு மீன் கொழம்பு நக்கி நக்கி சாப்பிட்டேன்”

“நான் தண்ணீ வரலன்னு குளிக்காமல் வந்துட்டேன் மிஸ்”

“காலையில் எங்க வீட்டல நந்தினி பாம்பு வந்தது மிஸ்”

“நீ என்ன மிஸ்ஸு சாப்பிட்ட “

“அம்மா கூட நான் பூ பறிச்சாந்த மிஸ்”

என்று எங்கள் Meeting நீளும் .குழந்தைகள் கூறும் ஒவ்வொரு குறிப்பிடத்தக்க செய்தியையும் Anecdotal Record ல் நான் பதிவு செய்து வருகிறேன்.

**Garden Walk & Toilet Training :**

பேசிக்கொண்டே தினமும் எங்கள் பள்ளித் தோட்டத்தை சுற்றுவோம்.அங்குள்ள எறும்பு, வண்ணத்துப்பூச்சி அணில், தேனீ, வண்டு, தவளை, செடி, பூக்கள், மரங்கள், புல் இவற்றைப் பற்றி பேசுவோம். மகிழ்ச்சியும், உற்சாகமும், புன்னகையும் கலந்த கலவை குட்டி குழந்தைகளின் முகங்கள் மேலும் பிரகாசிக்கச் செய்யும் நான் தான் 10.30 மணியளவிலேயே 4.15 மணி ஆவதை போல உணர்வேன். இதற்கிடையில் மூன்றாம் வகுப்பு குழந்தைகளுக்கு வெட்டி ஒட்டுவது, பரமபத விளையாட்டு, விடுகதை பணித்தாள் கொடுத்திருப்பேன் அவர்களும்10 - 30 - 11.00 வரை எங்களோடு பயணிப்பார்கள். Toilet training கொடுப்பதிலும், பள்ளியை சுற்றிக்காட்டி எங்கு எதை வைப்பது, எங்கு எது இருக்கும், எங்கெல்லாம் செல்வது பாதுகாப்பானது என்பன பொன்றவற்றை மூன்றாம் வகுப்பு மாணவர்கள் உதவியோடு மழலையர் வகுப்பு குழந்தைகள் அறிந்து கொண்டு செயல்படுவர்.







ஒவ்வொரு செயல்பாடுகளும் நீளமானது என்பதால் Circle Time< சிற்சிறு செயல்பாடுகள் அடங்கியது Circle Time ( ஒரு நாளைக்கு ஒன்று ), Balance on Boxes தரையில் பெட்டிபோன்று வரைந்து வரிசையாக அதன்மீது நடக்குதல். மகிழ்ச்சியாக அச்செயலில் ஈடுபட்டனர். முதல் முறை இரண்டாம் முறை மூன்றாம் முறை என தாண்டினாலும் அவர்கள் ஆவல் அடங்குவதே இல்லை. Ghop and Pop பலூன் ஊதி அதை நாற்காலியில் வைத்து அதன் மீது உட்கார்ந்து வெடிக்கச் செய்தல். அவர்களால் வெடிக்க வைப்பது கடினமாக இருந்தது. குழந்தைகளின் கவனமெல்லாம் வெடிக்கும்பொழுது கேக்கும் சத்தத்தை எதிர்பார்த்தே இருந்தது. பலூனைக்கொண்டு அதன் நிறங்களை சொல்லிக்கொடுக்க முடிந்தது. Dosa batter in Fevicol tube - Fevicol bottle லில் தோசை மாவை ஊற்றி அதை பிதுக்கச் செய்து ஏதேனும் உருவம் வரைதல் (Inside the Tray). Tree mark - Rubbing :மரப்பட்டைகளை trace செய்தல். அஞ்சறை பெட்டி : Seed Sorting, Paper Cup பயன்படுத்தலாம்.அரிசி, கோதுமை, பருப்பு, கடுகு, உளுந்து, கடலை போன்ற தானியங்களை வைத்து தொட்டு உணர்ந்து பெயர் கூறுதல். அவர்களுக்கு அதைத் தொட்டுப்பார்ப்பது மற்றும் பெயர்களைக் கூறுவது பிடித்திருந்தது. Coin Trace, Leaf Trace,Woollen நூலில் மணி கோர்த்தல்,Letter / No. Writing in Sand Salt ,Clay Work Vegetable, Foot Print ,Cotton Print,Car walk along the pathஎன்று அடுக்கிக் கொண்டே போகலாம். Strong Planning மிகவும் முக்கியமானதாக உள்ளது. Guided Discovery:கற்றலை மேம்படுத்த கையாளபடுவது Guided Discovery செயல்பாடுகள்,(எ.க) பெயர் கூறுதல்.ஒரு பெரிய அட்டை பெட்டியில் ஏதேனும் ஒரு பொருளை குழந்தைகளுக்கு தெரியாமல் வைத்து. அவர்கள் கை நுழையும்படியாக சிறு துளையை பெட்டியில்

பொடுதல் அதன் உள்ள கைவிட்டு தொட்டு என்ன பொருள் என்பதைக் கூறுதல் அவர்கள் கூற கூற நான் கரும்பலகையில் வரைந்து எழுதுவேன். சரியாக கூறினால் அதை வண்ண கலக்கட்டியில் எழுதுவேன். அப்போது பெட்டியை திறந்து பொருளை வெளியில் எடுத்துப்பார்ப்பர் அதன் வடிவம், பயன்பாடு, நிறம் ஆகியவற்றை அறிய நான் உதவுவேன். அதேபோல் குழந்தைகள் Explore செய்து கற்கும் கூறுகள் மூலம் Text Book ல் உள்ளவற்றையும் அறிய வாய்ப்பளிக்கிறேன். Rhyme time & story Time -குட்டிகுட்டி பாடல்கள் பாடுவோம். குழந்தைகளை பேச வைத்து கதைகள் உருவாக்குவோம். ஹிரிநி குழந்தைகள் கதை சொல்லியாக இருக்கு லிரிநி குழந்தைகள் கதை கேட்பவர்களாக உள்ளனர். (Writing) Number Work & Letter Work -UKG குழந்தைகள் Slate





கரும்பலகை, தரை Cheeked Note ஆகியவற்றில் கலர் பென்சிலைக் கொண்டுஎண்களையும் எழுத்துக்களையும் (அவர்களுக்கு பிடிக்கும் போது மட்டும் ) எழுதுகின்றனர்.

இப்படியாக June ல் 4 வாரங்கள் ஓடின july மாதத்தில் முதல் வாரம் நான் Training சென்றுவிட்டேன். july ல் வேறு Time schedule தயாரித்துள்ளேன். அதன்படி பயணிக்க அடியெடுத்து வைத்தள்ளோம். எங்கள் பள்ளிக் குழந்தைகள் தினமும் முகத்தில் சிரிப்பைச் சுமந்துகொண்டே வருகின்றனர். வீடும் திரும்புகின்றனர். ஒரு ஆசிரியராக இதை கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

Kinesthetic learner வகையையே பெரும்பாலும் UKG குழந்தைகள் காணப்படுகின்றனர். மிகவும் சுறு சுறுப்பாக துறுதுறுப்புடன் இருக்க ஆசைப்படும் எண்ணத்தை மூலக்கூறாகக் கொண்டு அதன் மூலம் கற்றலை நடத்திவருகிறோம். அதிலும் LKG மாணவர்களை கண்- கை - கால்கள் ஒருங்கிணைக்கும் விளையாட்டுகளை விளையாடச்செய்வதால் அவர்கள் பொருட்களைப் பிடிக்க ஆயத்தமாகி ( புத்தகம் தட்டு க்ரியான் டம்ளர் தண்ணி பாட்டிள் டஸ்டர் ஸ்லேட் சாக் பை... ) எளிதாகப் பிடிக்க முனைகின்றனர். வெறும் பென்சில் நோட் ஆகியவற்றைக் கொண்டு மட்டும் எழுதாமல் வெவ்வேறு முறையில் குழந்தைகள் கற்பதால் எழுத்துக்களின் வடிவங்களை உள்வாங்குகின்றனர். மகிழிச்சியுடன் கற்பதால் நினைவாற்றல் நீடிக்கும் என நம்புகிறேன்.

**சவால்கள்**: இம்முறையை செய்யும்பொழுது சவால்களாக நான் பார்த்தவை - பொருள்களை சேகரிப்பதைவிட பாதுகாப்பது கடினமாக உள்ளது. அதற்காக இன்னும் வகுப்பறை ஒருங்கிணைப்பைப் பற்றி யோசித்து வருகிறேன். ஒவ்வொரு செயல்பாடுகளை திட்டமிடும்பொழுதும் அத்திட்டம் எந்த மாணவருக்கு எந்த மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை யூகிக்க முடிகிறது அல்லது அதை மனதில் வைத்து திட்டமிட வேண்டியுள்ளது சில செயல்பாடுகள் LKG மாணவர்களை விட UKG மாணவர்களுக்கு சுலபமாக இருந்தது. அப்படிதானே இருக்கும். நாம் ஏன் அவர்களையும் பெரியவர்களாகக் கருதுகிறோம் என்று எண்ணிக்கொண்டேன். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட செயல்பாடு விளையாட்டை விளையாண்டு முடிக்க முடியாமல் போகிறது. சிற்சில உபகரணங்களை செய்ய மூன்றாம் வகுப்புக் குழந்தைகளை ஈடுபடுத்துகிறேன். அது அவர்களுக்கு பயனுள்ளதாக மாறும்படியான பாடச்செயல்பாடுகளைத் திட்டமிட நிறைய யோசிக்கவும் திட்டமிடவும் வேண்டியுள்ளது



**இரா. அனிதா**, தொ.ப.ஆ,
அ.தொ.ப அகரம்.

# விசையும் இயக்கமும்

**விசையும் இயக்கமும் ஓடியாடிக் கற்றல் தானே இயல்பு!!!**

உயிரோட்டமான வாழ்விற்கு அடிப்படை விசையும் இயக்கமும். உலகில் எந்த ஒரு நிகழ்வும் இவற்றுடன் தொடர்புடையவை. ஆகையால் விசையும் இயக்கமும் பற்றிய அறிவு மாணவர்களுக்கு இன்றியமையாதது.

**வகுப்பறைச் செயல்பாடுகள் (தள்ளு/இழு)**:

1. ஒரு பொருள் ஓய்வு மற்றும் இயக்க நிலையில் இருப்பதை விளக்க மாணவர்களிடம் ஒரு சில கேள்விகள் கேட்கப்பட்டன பாடப்புத்தகத்தில் உள்ள செயல்பாடுகளை அவர்கள் ஆர்வமுடன் செய்தனர்.


**தொடர்பு மற்றும் தொடர்பில்லா விசை** : தொடர்பு விசைக்கான ஒரு பொருளை இடம் பெயர்த்தல், தூக்குதல், பந்தை உதைத்தல், போன்றவற்றில், தள்ளுதல் அல்லது இழுத்தல் செயல் அல்லது இரண்டு செயல்களுமே அடிக்கடி நிகழ்கிறது. ஆனால், தொடர்பில்லா விசைக்கான மழை நீர் பூமியை நோக்கி விழுதல், மேலே எறியப்பட்ட ஒரு பொருள் மீண்டும் பூமியை நோக்கி வருதல், காந்தம் ஓர் இரும்பிலான பொருளை இழுத்தல் ஆகியவற்றில் இழுத்தல் செயல் மட்டுமே நிகழ்கிறது. இதிலிருந்து, தொடர்பில்லா புவியீர்ப்பு விசையில், இழுத்தல் செயல் தவிர, தொடர்பு விசையைப்போல் தள்ளுதல், இழுத்தல் போன்ற இரண்டு செயல்களுமே நிகழாது என்று கூறலாமா என்று கேட்டதற்கு, ஒரு மாணவி எழுந்து இரு காந்தங்களை ஓர் இடத்தில் வைத்து, ஒரு காந்தத்தின் பகுதியை மாற்றினால், அங்கே தள்ளும் செயல் நடக்குமென்றும், இதன்மூலம் தொடர்பு மற்றும் தொடர்பில்லா விசை இரண்டிலுமே தள்ளுதல், இழுத்தல் இரண்டு செயல்களுமே நிகழ்கிறதென்று கூறியது அருமை.

மேலும், காற்றாலையில் நிகழும் விசையை எடுத்துக்காட்டி கூறியபொழுது, அதில், தொடர்பில்லா விசை நிகழ்கிறதென்று கூறினார்கள். இங்கு, காற்று ஒரு பருப்பொருள், மேலும் அது விசையை ஏற்படுத்துகிறதென்றும் புவியீர்ப்பு விசை, காந்தவிசை இவை பருப்பொருட்களில்லை என்றும் எடுத்துரைப்பது இன்றியமையாதது.

விசையானது, ஒரு திசையில் (முன்னோக்கிய திசை) மட்டுமே நிகழுமென்று மாணவிகள் தொடக்கத்தில் நினைத்திருந்தனர். பல்வேறு படங்கள் மூலமும், அவர்களைப் படத்திலுள்ளவாறு செய்து காட்டிய பின்பு, விசையானது, இரு திசையிலும் நிகழுமென்று மாணவிகள் எளிதில் புரிந்துகொண்டனர்.

**இயக்கம் /ஓய்வு** :





ஒரு பொருள் ஓய்வு நிலையில் உள்ளதா அல்லது இயக்க நிலையில் உள்ளதா என்பதைத் திரையில் படம் மற்றும் கேள்விகள் மூலம் மாணவர்களிடம் விவாதித்தோம்




அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்று பதில் அளித்தனர்

**3.இயக்கத்தின் வகைகள்**:

பல்வேறு வகையான இயக்கங்களின் வகைகளை, படங்களை திரையில் காட்சிபடுத்தி விளக்கியது மாணவர்களிடையே மகிழ்ச்சி அலையை ஏற்படுத்தியது

எடுத்துக்காட்டாக, திரையில் காட்சிப்படுத்தியுள்ள பம்பரம்

எவ்வகை இயக்கமென்று கேட்கையில், அனைவரும் இது சுழற்சி இயக்கமென்று கூறினர். திரையில் காட்சிப்படுத்தியுள்ள




பம்பரம், இயக்கதிலுள்ளதென்று எவ்வாறு கூறுகிறீர்களென்று கேட்டதற்கு, பம்பரம் இயக்கதிலுள்ளதால்தான் , அது நேராக உள்ளது. இயக்கத்தில் இல்லையெனில், சாய்ந்தவாறு இருக்குமென்று கூறினார்கள்.

**இதிலுள்ள கடினமான பகுதியை கையாண்ட முறை**:

வட்ட இயக்கம் மற்றும் சுழற்சி இயக்கம் இவற்றிற்குள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்வது மாணவிகளுக்கு சிறிது கடினமாக இருந்தது. மேலும், இவற்றில் சில எடுத்துக்காட்டுகள் கொடுத்து, சுழற்சி இயக்கம் ஓர் அச்சைப்பொறுத்தும், வட்ட இயக்கத்தில், வட்டப்பாதையைக் கருத்தில் கொண்டு நினைவுபடுத்தியதன் மூலம், ஒரு வகையில் கற்றல்/கற்பித்தல் எளிமையாக இருந்தது. மேலும், மாணவிகளே பம்பரத்தின் இயக்கம், நிலை தன்னையும், பூமியையும் சுற்றுவதிலுள்ள இயக்கம் மற்றும் அதிலுள்ள வேறுபாடுகள் இவற்றை கூறினர். மேலும், மிதிவண்டியில் நிகழும் பல்வேறு இயக்கங்களைக் கற்பிக்கும் பொழுது, மாணவிகள் தாங்களாகவே, அலைவு இயக்கதிற்கான எடுத்துக்காட்டுகளாக தொட்டில், நகல்படி மற்றும் அச்சு எடுக்கும் இயந்திரத்தில் முன்னும், பின்னும் வரும் ஒளியின் இயக்கம் போன்றவற்றைக் கூறினர். சில இயக்கங்களை ஒரு துண்டு காகித்தில் எழுதி,



அதை சில மாணவிகளை அழைத்து அதிலுள்ளபடி செய்துகாட்டியது, மேலும், இயக்கத்தின் வகைகளை மாணவர்கள் நன்கு புரிந்துகொள்ள உதவியது,


**4.வேகம் கணக்கீடு** :

வகுப்பறையைக் குறுக்கும் நெடுக்குமாக அமைத்து

மூன்று வெவ்வேறு தொலைவுகள் (12m, 15m, 18m) குறிப்பாக மாணவிகளை மூன்று குழுவாக (10 பேர் குழு ) பிரித்து கொண்டோம். மாணவிகள் உற்சாகமாக பங்கேற்றனர் .

**சீரான மற்றும் சீரற்ற வேகம்**:

வேகம் கணக்கீடு பற்றி மாணவர்களுக்கு விளக்கி கூறப்பட்டது.வேகக்கணக்கீடு செயல் முடித்தபின்பு, எந்தெந்த காரணிகள் வேகத்தை பாதிக்கிறதென்றும், ஓடுபாதை எவ்வாறு வேகத்தை பாதிக்கிறதென்றும் ஆர்வமாக விவாதித்தார்கள். நேரானபாதையில் ஓடுவதில், விரைவாக வேகம் ஏற்படுகிறதென்றும், வளைவான பாதையில், வளையும்பொழுது, வேகம் குறைகிறதென்று அவர்கள் செய்துணர்ந்து கூறினர்


Answer the following questions.

1. What do you need to determine an object's speed?

Ans: Distance, time, Place, Stop clock, measuring tape.

2. Who had the fastest speed in any race? What was their speed?



**ம. அகிலா,** ப.ப.ஆ,
அ.பெ.உ.ப. மதுகரை.

# Learning Circle

*This article helps to understand how multiplication tables can be taught easily through fun filled activites without the barriers of memorizing*

This activity can be used to teach multiplication tables and we can involve ten students at a time. Before we begin the activity, we have to make the number cards from 0 to 9 and pin them on the shirts of the ten students and ask them to stand in a circle as shown below.



- In the initial round of practice, ask children to tell their numbers from 0 to 9. They would say - I am zero, I am one and so on upto nine.
- In the next round, they have to add the tens and represent the number. For example, the student who has zero must say that I am ten...
- In the successive rounds, he/she would say I am twenty, thirty etc. The other numbers will also follow the same rule.

**Learning the multiplication tables**


- Let us begin with the multiplication table of 2. The odd numbers (1, 3, 5, 7) will say that we are odd numbers, we cannot come forward and sit in their place. The student who has the number "2" will start and jump one-step forward. This will be followed by 4, 6, 8 etc. The student who has “0” will say “10” and




jump forward and likewise 2 will say 12 and jump forward. This can be done until they reach 100.

- Similarly, repeat this process for tables of 3, 4 and 5.
- When it comes to tables of 5 only two students will be involved in the game – 0 and 5 and the others will sit. For table of 10 only "0" will be standing and the others would sit. The teacher has to repeat this for a few rounds till the children have understood the concept of multiplication and are able to identify patterns involved in the multiplication tables.


From below diagram, one can visualize how the tables are compressed in a number wheel.



This picture represents multiplication table of 2 - only the numbers 2, 4, 6, 8, 0 are involved. In this, the wheel runs in a clockwise direction, which is easy for student to understand. The table of 3 and 4 also run in the clockwise direction.




This picture represents table of 6, where the numbers 6, 12, 18, 24 etc. are touched. However, it moves in the anti-clockwise direction, which is slightly harder for students to comprehend. This applies for tables of 7, 8 and 9 as well.




This picture represents table of 7 where the it goes in the anticlockwise direction.

Students find it easier to understand the table up to 5 beyond which they struggle. This method, however would help simplify the learning process it for them.

**Reflection**

The following concepts can be taught to students through this learning circle.

- Multiplication concepts
- Odd and Even numbers
- The 5’s table ends only in 0 & 5, 10's table ends only in 0.
- Even number forwards end only in even numbers.

Since the students are physically involved in learning the tables, it gives slow learners also the opportunity to engage and learn the tables in a fun manner. This is an effective method to teach the multiplication tables.

**Link:** https://www.youtube.com/watch?v=s10dpqbJgZE&feature=youtu.be

**For access this video into the mobile:** Download Q.R Code APP in Play store and scan this Q.R code for access this Video.




**S. Kamalan**
GPS, Thengaithittu

# Event Updates

## Art in Education

**The objective:** The workshop on 'Art in Education' aimed at helping teachers learn the process of making a comic strip out of a textbook story and the process of helping children acquire language while they try to produce comic strips.

**The process:** Once children have read the story, the below mentioned steps are to be followed:

1. **Teaching to draw Stick Figures:** Teacher draws a few variations of easy-to-draw stick figures in some basic poses like standing, walking, running, sitting etc., and students try some on their own.
2. **Whole Class Activity:** Teacher interacts with children to identify the characters, location, event and dialogues required for the first frame of the comic strip and draws the first frame based on the inputs from the children.
3. **Group Activity:** Each group is asked to draw what they think would be the second frame. Teacher then reviews each group's work by displaying it and interacting with the whole class.
4. **Individual Activity:** Each student draws the third frame of the comic strip. And reviews his/her work with his/her partner.
5. **After Class Activity:** Students who are interested can make a complete comic strip of the story in their free time.

**Ensuring Language Acquisition:** Language acquisition can be ensured by (i) using English as much as possible to interact with children, asking probing questions, not judging any answers as right or wrong and not supplying ideas. (ii) directing children to re-read the text when they want to identify the next event, character, location and dialogues.

**Teacher Feedback:** After the workshop, teachers felt that generating comic strips would be an interesting and easy way to improve children's English.





## ■Documentary Screening and Discussion – Island of Lemurs

The documentary – Island of Lemurs, Madagascar – was screened followed by the discussion about the island nation Madagascar, its flora and fauna. Flora like Baobab trees and Fauna like Lemurs were taken for discussion. There are more than 99 different species of Lemurs endemic to Madagascar, out of which some five species (Indri, Sifaka, Greater bamboo, ring-tailed and mouse lemurs) were mentioned in the documentary. As the discussion on endemic species was going on, we listed down some animals endemic to Tamil Nadu such as the Nilgiri Langur (கருமந்தி), Lion-tailed macaque (சிங்கவால் குரங்கு), Nilgiri Tahr (வரையாடு), Nilgiri Marten (மரநாய்), Nilgiri Laughingthrush (நீலகிரிச் சிரிப்பான்), Nilgiri Pipit (நீலகிரி நெட்டைக்காலி), Nilgiri Wood Pigeon (நீலகிரி காட்டுப்புறா), Nilgiri Flycatcher (நீலகிரி ஈப்பிடிப்பான்) etc.



Nilgiri Langur (கருமந்தி)



Nilgiri Laughingthrush (நீலகிரிச் சிரிப்பான்)

We also discussed about non-native species like Prosopis juliflora, Parthenium hysterophorus, Eucalyptus and its impact on the native species and the entire ecosystem. As a follow-up, Madagascar animated movie was suggested for screening in schools for kids

## ■Have you seen forests in cities?

The discussion on forests was initiated as part of International day for forests (21st March). A story Elephant doctor – about a veterinary doctor Dr. V. Krishnamurthy, his narration of forests and life in forests – from the book Aram for reading.

Discussion on forests, its types (deciduous forests - இலையுதிர்க்காடு, alpine forests - அல்பைன் காடு, coniferous forests - ஊசியிலைக்காடு, savannah grasslands - மிதவெப்ப மண்டல புல்வெளிப் பகுதி, temperate grasslands - மிதவெப்ப மண்டல புல்வெளிப் பகுதி deserts - பாலைவனம் and littoral swamps - சதுப்புநிலக்காடு) and urban forests (In Puducherry and Chennai) was carried out with teachers. Videos on Hornbill, urban forests, marsh lands (Pallikaranai marsh) was screened and discussed.

Puducherry has tropical dry evergreen forest type and it was discussed with the examples of forest department and bharathi mills. Then we talked about the common animals like Indian palm squirrel, spotted deer, Civet, monitor lizard and birds in Puducherry. Finally, the significance of the urban forests was discussed – regulating air pollution, food source, habitat for wildlife.



## Engaging learners in EVS classroom

A workshop was conducted on 7th July 2018 at Nonankuppam Educational Resource Center for Government school teachers handling EVS for primary grades. Poornima, from Marudham Farm School, Thiruvannamalai, facilitated the session. The workshop highlighted multiple pedagogical ideas that can make EVS classes interesting, engaging and most importantly create a sense of curiosity and sensitivity towards our plant and animal counterparts.

An activity for integrating language (English & Tamil) with EVS was discussed. Some samples are shown below:

| | | |
|---|---|---|
| A crow | | no legs |
| An ant | | four legs |
| A monkey | | six legs |
| An elephant | has | two legs |
| A lion | can | many legs |
| A dragonfly | can't | climb trees |
| A caterpillar | | dance |
| A snake | | fly |
| A fish | | walk |
| A snail | | swim |

Children can be asked to tell out sentences in full by combining the right facts about animals. Examples: A lion has four legs. An elephant can't swim.

Such games help in improving the reasoning skills of children. Learning EVS can be so much fun!

## Are Plastics really needed for our life?

The objective of the workshop was to realize the amount of plastics in use, the issues in the current life chain of plastics, the need for action as well as the actions that one could take as an individual and finally how a teacher could take all of this understanding to students.

The discussion was initiated by listing the plastics we use in our daily life and the list was quiet alarming. Then moved on to the codes numbers used in plastic products which represent their chemical composition. We moved on to discussing the issues of plastics by analyzing the life cycle of a plastic bottle, Plastic Ocean formed by a huge patch of plastic garbage in Pacific Ocean, Microplastics and common misconceptions on plastic. Then moved on discussing the larger politics revolving around plastics by noting that there is discrepancies in practice against policies. For example 'when the government was planning to ban plastic packaging, the same government decided to fight the issue of mustard oil adulteration by mandating the sale of mustard oil in plastic packages' and other example is the export of plastic waste to developing nations. Then concluded by discussing the ideas for schools and classrooms, waste timeline for realizing plastic decomposition time and trash art to realize the amount of plastics wastes we generate. The discussions were guided by short videos, readings from the book 'Neghizhi' by Poovulagu Nanbargal and news articles



*Students doing waste timeline activity in GHS Kalmandapam (here seen burying plastic wastes. The pit will be opened and plastics to be observed after 3 months)*



## ■ Exposure Visit to Nadukuppam GHSS and Pitchandikulam Forest

An exposure visit was planned for teachers to Nadukuppam GHSS and Pitchandikulam Forest to discuss the same as well as the importance of forest conservation. The visit was guided by a team from the Pitchandikulam Forest, a unit of the Auroville Foundation – Lourde Nadin Epinal, Ramu, Sadasivam, Damodaran and Kamala.

School as an Environmental Education Centre – We visited the school and was explained the initiatives in the school by 'Pitchandikulam forest' organization which are developing the school into an environmental education centre, mapping the watershed of Kaluveli lake, built-in structures of solar system, water cycle, integrated sewage treatment system, farming unit, nursery etc. enabling the students to be environmentally sensitive and to improve their skills of observation, investigation and data collection. We were also introduced to various other initiatives like bird and tree observation charts, bala grama sabha and campus ambassadors. We then visited a nearby forest of 35 acres in the Nadukuppam village which was developed and maintained by the Pitchandikulam Forest.

Pitchandikulam Forest – It is a community in Auroville that develops forest since 1970. We took a short walk around Pitchandikulam forest. The history of the place and the initiative to create a forest in the place was explained. We observed various trees like Red sandalwood (செம்மரம்), Arjun (மருத மரம்), Sacred Fig (அரச மரம்) and White Gulmohur (வாத நாராயணன் மரம்) and discussed about it. We also observed the seed bank collection, traditional tools like winnower, storage vessels, etc. collected from the locality as well as places like Ethiopia. Among the many interesting collections, one is the African Tamarind (யானைப் பிடுக்கன்) which is used like tamarind in Africa. These trees can be found in Seliamedu, Indira Gandhi signal and Ajantha signal where the fallen tamarinds never get picked up to be used by anyone. There were posters on estuarine ecosystem, fresh water ecosystem and mangroves which show all the animal species in these ecosystems. It was also discussed how such a poster can be developed for our surrounding ecosystems as well, for example a pond as a project and used as a teaching, learning aid. Later all of us climbed up and observed the surroundings from a tree house. It was built using the wood of trees which had fallen during a cyclone. We had a good view of the forest from the tree house.

After an informative and adventurous day with nature, we headed back to Puducherry.



## ■ Nature and Pedagogy of Mathematics

The session was planned to address few challenges and understand the nature of the subject. Activities were demonstrated on how to let a child visualize the formation of triangle and will also enable the child to think on reasons why a triangle cannot be formed with 7 or 22 buttons. This will let the child think and also helps the teacher in understanding the thinking level of each child.

The activity can be further modified to introduce number patterns to the students and will also enable the students to overcome visual difficulties. This will also help the teacher in making the class easier and interesting. The next part of the session was Understanding the Low Floor High Ceiling Pedagogical Strategy Differentiated Teaching, Higher Order Thinking Skills.

Low Floor High Ceiling Tasks are those that all students can access but that can be extended to high levels. These tasks are important because all classes are heterogeneous. LFHC tasks allow students work at different pace and take work to different depths at different times. The low floor high ceiling tasks preferred are those that are also visual and lead to rich mathematical discussion. Followed by the discussion, the teachers came up with an activity to create right triangles from a sheet of paper as an example for differentiated strategy thinking.

The common challenge in math classroom is making the child speak, this strategy will help the students come up with different thinking and make the child comfortable with math classroom. The next session was on square root algorithm and activity based learning. We always follow the usual long division method to find the square root and we do not understand why such steps are followed and we end up in memorizing method indirectly. This activity will address this issue related to square root. The last part of the session was on how an open ended question can be taken to students of various grade to improve their logical thinking and reasoning skills.

The full event report will be available at our website- www.azimpremjifoundationpuducherry.org



## ■ Number Skills – Workshop Summary


The workshop was facilitated by Monika Kochar focused on the perspective and pedagogy in teaching and learning number sense. Participants were introduced to many activities that could make the learning fun-filled in Math classrooms.

**Session 1: Number Gymnastics**

The numbers are brain's gymnastic. It makes the brain think flexibly.


Activity 1: Always… Never… Sometimes… (Developing number Sense)

Activity2:Fact Family (How math facts can be represented in Multiple ways)




Activity 3:ODD One Out (Developing Number Sense)

**Session 2: Operations**





Activity 1: Using Fingers (Multiple representation of Numbers)

Activity 2: Using Poly Plug Grids (for Better understanding of Place Value)

Activity 3: Ten Frame Games Ten-Frame Flash - (4 -6 years) - 4 players (number concept)

Activity 4: Base-10 blocks (Diene's blocks)

- ❖ Introducing addition and subtraction using Diene's Blocks
- ❖ Introducing multiplication using Diene's Blocks
- ❖ Introducing division using Diene's Blocks




**The Highlight of the workshop is the ELPS method of teaching Mathematics:**

E- Experience: this implies using experimental, hands-on activities.

L- Language: speaking about a problem and what we have to do to solve the problem.

P- Picture: implies using representational pictures for understanding.

S- Symbols: this includes introduction of arithmetic operator signs.

The above activities gave simple ideas how to take math to the children easily through activities and games. The workshop covered where children are really struggling in math and how to overcome it.

## ■ Workshop on Motion

A workshop on Motion was organized on 30th June at Mudaliarpet ERC. This article summarizes the key things learned from that workshop.

**Early Understanding of Motion**

The discussion began on how the understanding of motion evolved over time. A reading of Aristotle's and Galileo's ideas on Motion was shared with the participants.

Human beings have always been curious about the universe. Since early days, they have observed various phenomena and have tried to rationalize how they operate. Among them, one of the first phenomenon that was studied was Motion. The Greek scholars were among the first to try to systematically gather knowledge. However, it was only through reasoning. Aristotle, a prominent philosopher and scientist of his time, explained motion as how bodies move and what causes them to move. However, his views on motion are very different from our current understanding.



According to Aristotle, objects were made of fundamental elements that had their natural place in the universe. Objects moved to come to back to their natural state. Therefore, a stone that is made of earth, when held in mid-air would fall down as it is eager to come back to the centre of the earth, its natural place. Smoke had fire, and always moved up. Extending this idea, it meant that heavier objects would fall faster to the ground than lighter objects.

However, Galileo disproved this 2000 year old belief through his famous experiments at the leaning tower of Pisa. He dropped a heavy and a light object from the top of the tower and proved that objects fall at the same rate of motion.

**Do objects fall at the same rate of motion?**

Our experiences have led us to believe that if we drop two objects from the same height, the heavier object will hit the ground faster than the lighter object. Therefore, we associate free fall with mass. However, on closer examination, we come to understand that it is not true.

Then why does a piece of paper fall slower than a cork ball? Let us also consider a second scenario. Drop two sheets of paper, one folded and another flat. Here the mass is the same, but the surface area is varied. How has this affected the time taken for both objects to fall to the ground? Here, air resistance comes into play.


A video clip of an experiment was screened, where scientists wanted to find out what happens when a bowling ball and a feather are dropped together in vacuum. The video showed that in the presence of air, the ball reaches the ground first. However, in the absence of air, both the objects hit the ground at the same time. The iron ball, having a greater mass creates a greater impact on the surface of the box and breaks it.

**Crime Scene Investigation**

The focus of this activity is to represent and interpret motion through distance-time graphs. Designed as a crime scene investigation, it presents a problem-solving approach to interpret distance – time graphs and understand some key features of the graph.

The case - A speeding car inside a tunnel killed a man. The accident happened in an area, which was in the blind spot of the cameras. The information available is the position of the close circuit television (CCTV) cameras inside the tunnel and the time at which four cars passed their view. Participants are required to plot the graph, reconstruct the incident and identify the car responsible for that act.

In the discussions that followed, teachers presented their investigation and argued their case. This also led to the discussion on the importance of graphs and using them to interpret the motion of objects. The straight line represents what happened and a curved line plots and tells us about the motion of the object.




**Investigating Motion – Experiments on an inclined plane.**

It was time for some action and hands on investigation. The inclined plane set up was ready. Participants were given stopwatches, balls of different masses and data collection sheet.

They were involved in testing the following hypotheses:

1. Balls of different masses roll down at the same time.
2. Increasing the slope of the plane increases the acceleration of the ball.
3. The acceleration of different balls remains constant for a constant slope.

From the experiment, the above-mentioned hypotheses were verified. This discussion was extended to how the motion on an inclined plane can be compared to a free-fall. A free-fall is a special case of motion on an inclined plane, where the angle of inclination is $90^0$. Galileo therefore used an inclined plane to calculate the time taken by objects to fall. To calculate the acceleration of the balls rolling down the inclined plane, the formula S = ut + 0.5at2 is used.

Teachers discussed how friction comes into play when investigating the motion on an incline plane and affects the results. Some considerations to be kept in mind in this experiment are to use balls that have the same shape but larger difference in masses, so that the results offer conclusive evidence to test the hypotheses.

**ICT:** The PhET interactive simulation tool was introduced and it was used to differentiate the movement of a person travelling in constant velocity and constant acceleration. The simulation depicts a man running and the three graphs: distance – time, velocity – time and acceleration – time. This would make it one-step easier for students to relate the physical phenomena with the graphs. It helps us visualize how a person travelling in constant velocity will maintain the same speed throughout the journey. A person travelling in constant acceleration, however, has to keep increasing speed every second and therefore will cover larger distance as each second passes.

# வகுப்பறையைத் தயார் செய்வோம்

**கல்வித்திறன்களை வளர்த்தெடுக்க வேண்டுமெனில் மாணவர்களின் சமூகத்திறன்களும் வளர்க்கப்பட வேண்டும். அவற்றை எவ்வாறு வளர்ப்பது ?**





ஒன்றரை மாதம் விடுமுறைக்குப் பிறகு வரும் குழந்தைகளை எவ்வித முன் ஆயத்தமும் இன்றி வகுப்பறைக்குள் அடைத்து புத்தகங்களைக் கொடுக்கும் பொழுது கோபமும் வெறுப்பும் ஏற்படுவது இயற்கையே. வானில் இன்பமாகப் பறந்து திரிந்த பறவைகளைக் கூண்டுக்குள் அடைப்பது போல் அடைப்பதை விட, அதற்கு முன் என்னென்ன செய்யலாம், அவர்களை நம் பக்கம் எப்படித் திருப்பலாம், அவர்களின் முழு கவனத்தையும் நம்மிடம் கொண்டு வருவது எப்படி போன்ற பல கேள்விகள் எழும்பிக் கொண்டே இருந்தன. இத்தனை கேள்விகளுக்கும் பதிலாய் அமைந்தது இந்த அமர்வு.

வகுப்பறை மேலாண்மை என்று வரும்பொழுது குழந்தைகள் பள்ளிக்கு வருவது முதல் வகுப்பறை தூய்மை, ஒழுங்குமுறை, அமரும் விதம் போன்ற அனைத்தும் அடங்கும்.

காலைக் கூட்டம் முடிந்து குழந்தைகள் வரிசையாய் செல்வது முதல் ஒழுங்கினைக் கடைப்பிடிப்பது என்பது விவாதிக்கப்பட்டது. குழந்தைகளை வகுப்பறைச் செயல்பாடுகளில் எவ்வாறு ஈடுபடுத்துவது என்று விவாதித்தபோது சுபாஷினி ஆசிரியை "முன் மாதிரியாக ஒவ்வொன்றையும் நானே செய்வேன். உதாரணமாக, வகுப்பறைக்கு வெளியே செருப்பு விடுவது, ஜன்னலைத் திறப்பது போன்றவை. அதைப்பார்த்த எனது குழந்தைகள் அடுத்த நாள் முதல் அவர்களே செய்ய ஆரம்பித்து விட்டனர்" என்று கூறினார்.

பரமேஸ்வரி ஆசிரியை, "நான் எனது வகுப்பறையில் ஒரு துடைப்பம் வாங்கி வைத்துச் சுத்தம் செய்தேன். அதைப் பார்த்து எனது மாணவர்களும் வகுப்பறையைச் சுத்தம் செய்யக் கற்றுக் கொண்டார்கள். வகுப்பறைக்கு வெளியே அனைவரும் காலணிகளை வரிவையாக அடுக்கி வைப்பார்கள். காலையில் வந்ததும்; வகுப்பறை ஜன்னல்களையும் திறந்து வைக்கப் பழகிக் கொண்டார்கள்," என்றார்.

இது போன்ற அனுபவம் எனக்கும் இருந்தது. பள்ளி வளாகத்தில் கிடக்கும் குப்பையை நான் எடுக்கத் தொடங்கினேன். இப்போதெல்லாம் என் குழந்தைகளே அவற்றை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போடுவர். நான் சொல்லாமலே என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. எப்பொழுதும் ஒரு செயலை மற்றவரை செய்யச் சொல்வதற்கு முன் நாம் முன் மாதிரியாக நடக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் எண்ணம் வெற்றியடையும். இது நான் என் அனுபவத்தில் கண்ட

**இத்தகைய பல செயல்பாடுகள் குழந்தைகள் ஒருவருக்கொருவர் பழகவும் புரிந்துகொள்ளவும் ஆசிரியருடன் இயல்பாகப் பழகவும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. குழந்தைகள் வகுப்பறை தனக்குரியது, தன்னுடையது என்று ஏற்றுக்கொள்ளும்பொழுது மட்டுமே நாம் எதிர்பார்க்கும் கற்றல் விளைவுகள் கிடைக்கின்றன.**

உண்மை என்பதைப் பகிர்ந்த பொழுது மற்ற அனைவரும் அதை ஆமோதித்துப் பாராட்டியது மகிழ்ச்சியளித்தது.

‘காலை தகவல்’ பற்றி ஆசிரியை சுபாஷினி பகிர்ந்து கொண்ட போது, “அன்றைய செயல்பாடுகளைக் கரும்பலகையில் எழுதுவேன். மேலும், எனக்கு இன்று இந்த உதவி தேவைப்படுகிறது, யார் தயாராக இருக்கிறீர்கள் என்று எழுதிப் போடும் பொழுது உடனே குழந்தைகள் நான் அதைச் செய்கிறேன் என்று தானாக முன்வருவர்” என்று கூறினார். மேலும் ஆசிரியருக்குக் குழந்தைகள் காலை தகவல் எழுதுவார்களாம். (உம்) இன்று என்னைக் கூப்பிடுங்கள் என்று மாணவன் எழுதியிருந்ததைக் கூறினார். இச்செயல்பாடு ஆசிரியருக்கும் குழந்தைகளுக்குமான உறவை பலப்படுத்துவதோடு குழந்தைகள் எவ்வித பயமும், தயக்கமும் இன்றித் தங்கள் கருத்தைக் கூறவும் முடியும்.

“கருத்து சுதந்திரம் பெட்டி ஒன்றை உருவாக்கி அதை வகுப்பறையில் வைத்தேன். அதில் மாணவர்கள் பெயர் எழுதாமல் தங்களுக்குத் தோன்றும் கருத்துக்களை எழுதிப் போடுவர். இதனால் மாணவர்கள் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கின்றன.”- சுபாஷினி

தொடந்து வீட்டுப்பாடம் பற்றி விவாதித்தோம். குழந்தைகள் அனைவரும் வீட்டுப்பாடத்தைச் செய்து முடிக்க நாம் என்ன செய்யலாம் என்று கேட்டபொழுது திரு. சங்கர் அவர்கள் பள்ளியில் அதுபோன்று எழுதாமல் வரும் குழந்தைகளை வேறு வகுப்பிற்கு அனுப்பி எழுதிவரச் செய்வது என்று குறிப்பிட்டதும், பல கேள்விகள் எழுந்தன. அந்தக் குழந்தைக்குச் சங்கடமாக இருக்காதா? அடுத்த வகுப்புக்குத் தொல்லை தருவதாகாதா? அப்பொழுது அக்குழந்தை படிக்க வேண்டிய பாடத்தைப் படிக்க முடியாமல் போய் விடுமே? அந்தப் பாடத்தை எப்பொழுது படிப்பது? போன்ற பல கேள்விகள் எழுந்தன. அதற்கு அவர் அவன் அப்படி வருந்தப்படும் பொழுதுதான் மீண்டும் அத்தவறைச் செய்யமாட்டான் என்று கூறினார்.

பரமேஸ்வரி ஆசிரியை, “என்னால் அதை ஒப்புகொள்ள முடியவில்லை. ஒரு நாள் என் வகுப்பு குழந்தைகளைச் சும்மா மற்ற வகுப்பிற்குச் சென்று பார்த்து வரும்படி கூறினேன். அவர்களுக்கு அது பிடிக்கவில்லை. “நம்ம வகுப்பிற்குப் போகலாம் மிஸ்” என்று கூறினர். சந்தோஷமாகக் கூட அடுத்த வகுப்பிற்குச் செல்ல விரும்பாத குழந்தையை வீட்டுப்பாடம் எழுதி வா என்று வேறு வகுப்பிற்கு அனுப்ப வேண்டாமே” என்று கூறினார். நான் மதியம் உணவு இடைவேளையில் வீட்டுப்பாடத்தை எழுத வைக்கிறேன் என்று கூறினார்.

இப்படிப்பட்ட முன் செயல்பாடுகள் பள்ளிக்குத் தேவையா, இதனால் குழந்தைகளின் படிப்பு பாதிக்காதா என்ற கேள்விக்கு, இது மிகவும் அவசியமான ஒன்று என்பதை ஆணித்தரமாகக் கூறினேன். ‘வாங்க பழகலாம்’ என்பது போல் இத்தகைய பல செயல்பாடுகள் குழந்தைகள் ஒருவருக்கொருவர் பழகவும் புரிந்துகொள்ளவும் ஆசிரியருடன் இயல்பாகப் பழகவும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. குழந்தைகள் வகுப்பறை தனக்குரியது, தன்னுடையது என்று ஏற்றுக்கொள்ளும்பொழுது மட்டுமே நாம் எதிர்பார்க்கும் கற்றல் விளைவுகள் கிடைக்கின்றன.

**சங்கர் ஐயாவின் பகிர்வுகளின் சுருக்கம்** :

வகுப்பறையைத் திட்டமிடல்: காலையில் வந்தவுடன் ஒவ்வொரு வகுப்பறையிலும் மின்விளக்குகள், மின்விசிறி, ஜன்னல் திறந்து வைத்தல் உட்காருவதற்கு பெஞ்ச் அனைத்தும் ஒழுங்கான முறையில் இருக்கிறதா என்று சரி பார்த்தல் அவசியம். இவை அவர்களின் கற்றலில் நேரிடையாகத் தொடர்புடையவை.

காலை செய்தி: காலையில் வந்தவுடன் கரும்பலகையில் ஓர் ஓரத்தில் அன்றைக்கு நடக்கும் செயல்பாடுகள் அனைத்தையும் செய்தியாக எழுதுவோம்.

வகுப்பறை விதி முறைகள்:

ஆசிரியர்களுக்கு - ஆசிரியர்கள் தங்களுக்குத் தேவைப்படும் கற்பித்தல் பொருள்கள் எதுவாக இருந்தாலும் இரண்டு நாட்களுக்கு முன்பே தெரிவிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு,

1. துரு துரு என்று இருக்கும் மாணவர்கள் தங்கள் வேலையை முடித்துவிட்டால், அவர்கள் மழலையர் வகுப்பு மாணவர்களுடன் சேர்ந்து விளையாடலாம்.

2. வீட்டுப்பாடம் செய்யாமல் வரும் குழந்தைகள் வேறு வகுப்பிற்குச் சென்று எழுதிவர வேண்டும்

3. குழந்தைகள் செய்த நல்ல செயல்களைப் பச்சை நோட்டில் எழுதித் தருவது, அவர்கள் செய்த தவறுகளை சிவப்பு நோட்டில் எழுதித் தருவது. ஒரு மாணவனுக்கு மூன்று முறை சிவப்பு நோட்டைக் கொடுத்து அனுப்பி விட்டால், அதற்கு அடுத்த நாள் அவன் பள்ளிக்கு வராமல் தன் தவறு என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். இது பெற்றோருக்கும் தெரியும். முன்பே கூறிவிடுவோம். பெற்றோர்கள் கட்டாயம் ஆசிரியருடன் வந்து உரையாடுதல் வேண்டும்.

**வகுப்பறையில் அமைதிகாத்தல்:**

சுபாஷினி: ஒரு நாள் வகுப்பறை ஒரே சத்தமாக இருந்தது. நான் ஒரு மாணவனை அழைத்து ஒரு தகவலை மாணவர்களுக்குச் சொல்லுமாறு கூறினேன். அப்பொழுதும் ஒரே சத்தம். அந்த மாணவன் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான். என்ன செய்யலாம் என்று யோசனைக் கேட்ட பொழுது அனைத்து மாணவர்களும் சத்தம் போடாமல் இருந்தால்தான் ஒருவர் சொல்வதை மற்றவர்கள் கேட்க முடியும் என்று முடிவு செய்தார்கள். அதன் மூலம் அவர்களாகவே ஒரு விதியை ஏற்படுத்தினார்கள். இவ்வாறு பல விதிகளை உருவாக்கினர். அவற்றிலிருந்து 15 விதிகளைத் தேர்ந்தெடுத்து கடைபிடித்துக் கொண்டிருக்கிறோம்.

பரமேஸ்வரி: 5 விரல்களைக் காட்டி ஒவ்வொரு விரலாக மடக்கும் பொழுது அனைவரும் அமைதியாகி விடுவர்.

அனிதா: சிறிய விசில் ஒன்று வைத்துள்ளேன். அதை அடித்தால் அமைதியாக இருக்க வேண்டும் என்பது எங்கள் வகுப்பின் விதிமுறை.

சாந்தகுமாரி: வகுப்பறையில் 3 முறை ஆழ்ந்த மூச்சு பயிற்சி செய்வதன் மூலம் வகுப்பறையில் அமைதி நிலையைக் கொண்டு வருவேன்

சங்கர்: 3 விரல்களைக் காட்ட வேண்டும். 1) பார்க்க வேண்டும்; 2) கேட்கவேண்டும்; 3) வாய் மூடவேண்டும். அதேபோல் சிறிய மணி அடித்தும் வகுப்பறையில் அமைதி காக்கலாம்.

சங்கர் ஐயா கூறிய பச்சை மற்றும் சிவப்பு நோட்டைப் பயன்படுத்தும் முறை புதுமையான ஒன்றாக இருந்தது. வகுப்பறை விதிமுறைகளை மாணவர்களே உருவாக்கிக் கடைபிடித்தல் மற்றும் கருத்துச் சுதந்திரப் பெட்டி போன்றவை அனைத்து வகுப்பறைகளுக்கும் பொருந்தும் ஒரு செயல்பாடாகும்.


**மு.சாந்தகுமாரி,** த.ஆ,
அ.தொ.ப வடுவகுப்பம்


**த. சுமதி,** தொ.ப.அ,
அ.தொ.ப அரியாங்குப்பம்பேட்

# கைவினையும் கதையும்

மகிழ்ச்சியான வகுப்பறை படைப்பாற்றலின் அடிப்படை

## பட்டாம் பூச்சியும் படைப்பாற்றலும்

படம் வரைவதற்கும் மொழிக் கற்றலுக்கும் என்ன தொடர்பு என்பதைத் தெரிந்து கொண்டோம். திரு.எழில் அவர்களின் பயிற்சிப் பட்டறையில் காகிதத்தில் பட்டாம்பூச்சி செய்யக் கற்றுக்கொண்டோம். சரி, இதை என் குழந்தைகளுக்கும் கற்றுத் தரலாம். ஆனால் அது வெறும் கைவினையாகக் இருக்கக் கூடாது, அவர்களது மொழித்திறன் வளர்ச்சியையும் கருத்தில் கொள்ள வேண்டும் அல்லவா?

ஆகையால், நாங்கள் வகுப்பறையில் காகித பட்டாம்பூச்சி செய்தோம். பிறகு அதற்கு வண்ணம் தீட்டினோம். பட்டாம்பூச்சிகள் பற்றி உரையாடினோம். இறுதியாக குழந்தைகள் அனைவரும் தனித்தனியாகப் பட்டாம்பூச்சியைப் பற்றி 5 முதல் 6 வாக்கியங்கள் தங்களுக்குத் தெரிந்ததை எழுதினார்கள்.

ஒவ்வொரு குழந்தையின் சிந்தனைத் திறன் வேறுவேறாக இருந்தது. அவர்களது சொற்களில் பிழை இருந்தது. திரும்பத் திரும்ப உச்சரிக்கச் செய்து எழுதிப் பிழைகளைக் களைந்தேன்.





## கதாப்பாத்திரங்களை ஆராய்தல் - போண்டா பள்ளியில் போண்டாட்டம்

போண்டா பள்ளியில் போண்டாட்டம் என்ற கதை குழந்தைகளுக்குச் சொல்லப்பட்டது. இந்தக் கதையில் இடம் பெற்றுள்ள படங்கள் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்திருந்தது. கதை கூறும் போது ராஜா ராணியின் குழந்தைக்கு என்னவென்று சொல்வோம் என்ற கேள்விக்கு உடனடியாக அரண்மனை இளவரசன் என்ற பதில்கள் வந்தது ஆச்சரியமாக இருந்தது.

போண்டா எப்படி இருக்கும்? என்றதற்கு,

லைட் ஆரஞ்சு கலர்ல, மெது மெதுண்ணு உள்ள சாப்டா, சூப்பரா இருக்கும் என்று அனுபவித்து குழந்தைகள் கூறியபோது நிஜமாகவே போண்டா சாப்பிட்டு சொல்வது போல் இருந்தது.

சமையல்காரருக்கு ஏன் வியர்த்தது? என்றதற்கு, “மற்றவர்கள் விட நிறைய வேல செய்றாரு அதனால்” என்றனர். ஆனால் ஒரு மாணவன் மட்டும் பயந்தான் என்று கூறினான். கதை சொல்லும் நேரம் முழுவதும் குழந்தைகள் உற்சாகத்துடனும் ஈடுபாட்டுடனும் இருந்தனர்.

கதை கூறலின் தொடர் பணியாக முதலில் char-

acter Mapping/ Analysis என்ற செயல்பாட்டைச் செய்தோம்.

குழந்தைகள் கதையில் தங்களுக்குப் பிடித்த கதை மாந்தர் ஒருவரைப் பற்றிப் பிடிக்காதது பிடித்தது என்ன என்பதற்குக் காரணங்களும் கூறினால் அதுவே character Mapping எனலாம்.

உதாரணமாக,

- ராணியைப் பிடிக்கும் என்று சொன்ன குழந்தை, இளவரசனுக்குப் பிடிச்ச சாப்பாடு சமைக்கச் சொன்னாங்க என்று காரணம் கூறினான்.



- ராஜாவைப் பிடித்தற்குக் காரணமாக, அவர் நாட்டு மக்கள் எல்லாரையும் போண்டா சாப்பிடச் சொன்னார் என்றான்.
- இளவரசனைப் பிடித்தற்குக் காரணமாக, எதிரி நாட்டைத் தோற்கடித்ததற்குப் பிடித்தது என்றான்.

இதற்குப் பிறகு குழந்தைகள் இருகுழுக்களாக பிரிந்தனர்.

ஒரு குழுவினர் கதையை நாடகமாக நடித்துக் காட்டினார். மற்றொரு குழுவினர் கதை நிகழ்வுகளைப் படமாக வரைந்தனர்.





**சு. கவிதா,** தொ.ப.ஆ,
அ.தொ.ப. மணவெளி (அ)

# கதையும் கலையும் - திரு . எழில் அவர்களின் பயிற்சிப்பட்டறை அறிக்கை

**வண்ணம் பூசி பட்டாம் பூச்சியாய் மாற்றிய பட்டறை எங்களை**

எழிலின் எழிலான குரல் வளத்தோடு முதல் பாடல் - அதுவே பயிற்சிப் பட்டறையின் துவக்கம்.

*வந்தனம் ஐயா வந்தனம்*

*வந்த சனம் எல்லாம் குந்தனும் (2)*

*வரும்போது வாங்கி வந்த வாசமுள்ள சந்தனம்*

*சந்தனத்தை பூசுங்க சந்தோசமா பாடுங்க*

*பிச்சி மலரெடுத்து பெரியவங்கள கும்பிட்டோம்*

*மல்லிகை பூச்சுடும் மாதர்களை கும்பிட்டோம்*

*குழப்பம் வந்திருக்க இளவட்டங்களைக் கும்பிட்டோம்*

*சண்டை சத்தம் செய்யாதிங்க சின்ன பசங்களைக் கும்பிட்டோம்*

*பாயிருந்தா போடுங்க விசிறி இருந்தா வீசுங்க*

*நிக்காதிங்க உட்காருங்க உட்காருங்க நிக்காதிங்க*

*பின்னாடி இருப்பவரே முன்னாடி வந்து உட்காருங்க*

*ஓரசாரம் நிற்பவரே முன்னாடி வந்து உட்காருங்க*

*ஆன்டராய்டு பார்ப்பவரே முன்ன வந்து உட்காருங்க*

*நீங்க பெத்த புள்ள நானுங்க*

*பாட்டில் பிழை இருந்தா பொருத்துக்கோங்க !*

ஆசிரியர்கள் அனைவரும் உற்சாகத்தோடு பங்கேற்க தயாராகினர்

திரு. எழில் :தெருக்கூத்து - அந்தக் காலத்தில் வயலில் உழவு செய்து வரும் மக்கள் மாலையில் இளைப்பாற ஏற்படுத்தப்பட்ட இசை நாடகம் ஆகும். அந்தக் காலகட்டத்தில் மக்கள் கூத்துக்கு தேவையான உடை கலை அலங்காரம் அனைத்தையும் தாங்களாகவே செய்து வந்தனர். காலப்போக்கில் இக்கலை அரிதாகி வருவதை பற்றியும் உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது.

அடுத்ததாக படம் வரைய தேவையான அடிப்படை விதிகளை திரு எழில் மற்றும் திரு இராகேஷ் விளக்கினார்கள். கோடு என்பது இரு புள்ளிகளை இணைப்பது அல்ல. பல சிறுசிறு புள்ளிகளின் இணைந்த ஒன்றே கோடு ஆகும் என கோட்டின் தத்துவத்தை விளக்கினர்

பின்பு ஐந்து வளைவு மற்றும் கோடு பயன்படுத்தி 10 படங்கள் ஒவ்வொரு ஆசிரியரும் தனித்தனியே வரையச் சொன்னார்கள். படங்களை எவ்வாறு வரையக் கூடாது என்றும் சில படங்களை வரையவே கூடாது. என்றும் ஏனெனில் அவை அனைத்தும் காலம் காலமாக நாம் வரைந்து வரும் படங்களே என கூறினார். உதாரணமாக வீடு , உதய சூரியன்,மரம், மலை போன்றவை படங்கள் வரைய தேவையான சில நுணுக்கங்களைக்



கற்றுத்தந்தனர் படங்களுக்கு உயிர்அளிப்பது கோடுகள் என்பதை உணர்ந்தோம்.

**படக்கதை உருவாக்கம்:**

ஆசிரியர்கள் அனைவருக்கும் காகிதம், வண்ணங்கள், போன்றவை வழங்கப்பட்டது. காகிதத்தை எட்டு பாகமாக பிரித்து படம் வரைந்து அதை ஒரு படக்கதையாக உருவாக்கினோம். பின்னர் படக்கதை உருவாக்கிய ஆசிரியர்கள் தங்கள் படக்கதையைக் கூறினார்கள். பின்னர்,அதில் ஒரு கதையை எழிலும், இராகேஷும் கதைக்கு உண்டான அம்சங்களோடு நடித்துக்காண்பித்தனர்.

**வண்ணங்களின் பிறப்பு:**

திரு. எழில் : படங்களை மேலும் உயிரோட்டம் உள்ளதாக மாற்ற உதவுவது வண்ணங்கள் என்று கூறினார்.வண்ணங்களின் வகைகள் மற்றும் அதை உருவாக்கும் விதம் பற்றி அறிந்தோம். எந்த வண்ணங்களை கலந்தால் , எந்தெந்த வண்ணங்களை உருவாக்க முடியும் என்பதனை எளிமையாக விளக்கினார் எழில்.

முதன்மை வண்ணங்கள் - நீலம், சிவப்பு, மஞ்சள்

முதன்மை வண்ணங்களை ஒன்றோடு ஒன்று சேர்க்கும் போது பிறக்கும் வண்ணங்களை எடுத்துக் காட்டுடன் இராகேஷ் அவர்கள் விளக்கினார்.

இரண்டாம் நிலை வன்ணங்கள்

நீலம் + மஞ்சள் = பச்சை

நீலம் + சிவப்பு = ஊதா

மஞ்சள் + சிவப்பு = இளஞ்சிவப்பு

**கேப் மாறி போச்சி:**

ஆம், ஒரு செய்தித்தாள் ஒன்றன் பின் ஒன்றாக சில மடிப்புகளோடு 5 வகை கேப் தொப்பி ஆகா மாறி விட்டது.



1. பிஜப் தொப்பி
2. நேரு தொப்பி
3. போலீஸ் தொப்பி
4. பட்டமளிப்பு தொப்பி
5. இராஜா, இராணி தொப்பி

பெரியவர்கள் ஆகிய எங்களுக்கே ஒவ்வொரு வகை தொப்பியம் செய்து அணியும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை எனலாம். நாங்கள் ஒவ்வொருவரும் இராஜாக்களாகவும், இராணிக்களாகவும் மாறிவிட்டோம் அந்த கணத்தில்.

ஒரிகாமி (ஜப்பானின் கலை - காகித மடிப்புக் கலை)

காமி- மடித்தல்

ஒரி- காகிதம்

காகித பட்டாம்பூச்சிகள் ஒரிகாமி முறையில் செய்து பார்த்தோம்.கம்பீரமாக இருந்த எங்களை சிறகடித்து பறக்க செய்தது. ஆம், காகிதம் மடித்தல் மூலம் அழகான வண்ணத்துப்பூச்சியை செய்து சிறகடித்தோம். அடுத்தபடியாக, நாங்கள் உருவாக்கிய படக்கதையை புத்தகத்தோடு ஒப்பிட்டு பார்த்து அதன் தன்மைகளை அறிந்தோம்.

எழிலின் இனிமையான குரலில் மேலும் ஒரு பாடல். இந்தமுறை ஆடலும் பாடலுமாக பயிற்சிப் பட்டறை நிறைவடைந்தது.



**கேசவர்தினி,** தொ.ப.ஆ,
அ.ந.ப. நெல்லித்தோப்பு

**Event Updates**

# பறை இசையும் பாட்டும்

**சமத்துவத்தை, பாரம்பரியக் கலையை, பாடலைஞ்... ஆசிரியர்கள் கற்கும்பொழுது மாணவரையும் சென்றடைகிறது.**

அசிம் பிரேம்ஷி ஃபவுண்டேஜன் கடந்து வந்த பாதையின் வரலாற்று அடிச்சுவடுகளைச் சற்றே திரும்பிப் பார்த்தோமேயானால், அதில் நிச்சயம் இடம் பெற்றிருக்கும் நிகழ்வு கற்றல் திருவிழா. 2018-ஆம் ஆண்டு திணையளவெணும் சாதித்து விடமாட்டோமா என்ற எண்ணம் மலையளவு எழுந்ததினால் ஒன்றுபட்ட எங்கள் ஆசிரியச் சமூகம், கற்றல் திருவிழாவில் கற்றுக் கொண்ட விசயங்கள் ஏராளம்! ஏராளம்! அவற்றினை இயன்றவரை வகுப்பறை களத்திலே மாணவர் மத்தியிலே எப்படியாவது கொண்டு சேர்த்து விட வெண்டும் என்ற ஆவல் எங்களை உந்தித் தள்ளியதால் கற்றல் திருவிழாவில் எங்களை மிகவும் ஈர்த்த சில கலைகளில் நாங்களும் தேர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இயல்பாகவே ஏற்பட்டது. பல்கலைகள் எங்களை ஈர்த்திருந்த போதும் “பறை இசை“ கலை எங்களை மிகவும் கவர்ந்தது. சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் கேட்ட வினாடியே தாளமிட வைத்த உன்னத இசை அது. அதனை முறையாகத் தெரிந்து கொள்வதன் மூலம் பள்ளிப் பாடங்களை மாணவர்களுக்குப் பறை இசையுடன் கூடிய இனிய அனுபவமாக வழங்க முடியும் என்ற எண்ணம் எங்களுக்கு வந்தது. எங்களின் எண்ணத்தை அசிம் பிரேம்ஷி ஃபவுண்டஜன்க்கு வேண்டுகோளாக விடுத்தோம். அதனை ஏற்று புத்தர் கலைக் குழுவின் மூன்று நாள் பறை இசை பயிற்சிப் பட்டறைக்கு ஏற்பாடு செய்து இருந்தனர். இந்த 3 நாள் முகாம் மே, 10, 11, மற்றும் 12 - ம் தேதிகளில் வில்லியனூர் விவேகானந்தா அரசு மேனிலைப்பள்ளியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் கிட்டத்தட்ட 40 ஆசிரியர்கள் மற்றும் சிறுவர்களும் பங்கேற்றனர். புத்தர் கலைக் குழுவினர் நிறுவனரும் பயிற்றுனருமான திரு. மணிமாறன் அவர்களும் அவருடைய மனைவி. திருமதி. மகிழினி மணிமாறன் மற்றும் அவர்களின் இரண்டு மகன்கள் என நால்வரும் எங்கள் அழைப்பினை ஏற்று எங்களோடு வந்து தங்கியிருந்து இந்த 3 நாட்களும் எங்களுக்கு மிகச் சிறந்த பயிற்சியினை அளித்தனர்.

முதல் நாள் பயிற்சிப் பட்டறைக்குச் செல்லும்போது பொதுவாக எங்களுடைய மனோநிலை ஒரு தொன்மையான கலையைக் கற்றுக் கொள்ளப் போகிறோம் என்ற அளவில் மட்டுமே இருந்தது.

ஆனால் பயிற்சியானது திரு. மணிமாறன் அவர்களின் நோக்க உரையோடு தொடங்கியதுமே எங்களுக்குப் புரிய ஆரம்பித்து விட்டது. நாங்கள் கற்கவிருக்கும் பறை என்பது வெறும் இசை மட்டுமல்ல. அது தமிழ் கலாசாரத்தின் அடிப்படை அடையாளங்களுள் ஒன்று. சாதி மத வேறுபாடுகளின்றி அனைத்துத் தமிழர்களும் ஆனந்தமாய் ஒலித்த உயர்ந்த இசைக் கருவி என்று.



“ பறை! பறை! இது வெறும் சப்தமிடும் கருவியன்று. சமதர்ம சமுதாயம் படைக்க வேண்டும் என்ற உயரிய எண்ணம் உடைய உன்னத மனிதர்களைக் கொண்ட புண்ணிய பூமியாம் நம் தமிழ் திருநாட்டில், சாதி, மத பேதமற்ற நல்லதொரு சமுதாயம் படைக்கும் சீரிய முயற்சியில் நமக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதை உரத்துச் சொல்ல உதித்த

பறை! வீரத் தமிழன் காக்கும் பறை! ஆதித் தமிழன் ஒலித்த பறை! அடிமைத் தளையை உடைத்த பறை! கேட்போர் செவிகளுக்கு விருந்தான பறை! காண்போர் கண்களுக்கு மருந்தான பறை! ”

இத்தகைய மேன்மை மிக்கப் பறை இந்த மூன்று நாள் பயிற்சிப் பட்டறையிலே எங்களைக் கிறங்க அடித்தது என்பது மறுக்க முடியாத உண்மை.பறை இசையின் தொன்மையை முதன்மையானதாகப் பறைசாற்றினார் திரு. மணிமாறன் அவர்கள். அவரின் வரிகள் இதோ அப்படியே உங்களுக்காக!

பறை! பறை !! பறை!!! விரையம் என்கிற சொல்கூட விரையம் என்கிற “ஆக்காதே” என்று சொல்வதற்குப் பயன்படும். உலகில் எதுவும் விரையமில்லை என்பதன் வெளிப்பாடுதான் பறை! உலகில் விலங்குகளை மனிதன் வெற்றிக் கொண்டான் என்பதன் அடையாளம் தான் பறை? இது சாவுக்கான பறை அல்ல! வாழ்வுக்கான பறை! எமது பறை முழக்கம் சாமிகள் ஆடுவதற்கு அல்ல! ஆதிக்கம் ஆட்டம் காண்பதற்கு ! ஓங்கி அடிப்பதில் கிழியட்டும் - பறைகள் அல்ல! சாதிகள்! அவரின் இந்த வரிகள் எங்களுக்குள் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியது என்றால் அது மிகையல்ல.

பறை இசை - அது வீணை போன்ற மெல்லிசை அல்ல. புல்லாங்குழல் போன்று மனதை வருடும் இசையும் அல்ல. நம் நாடி நரம்புகளை முறுக்கேற்றும் போர்த் தமிழ் இசை. அதுவே தமிழனின் இசை. ஆனால் இந்திய மண்ணில் புரையோடிப் போயிருக்கும் சாதிப் பிரிவினை இந்த ஆதிக் கருவியை சாதிக் கருவியாய் மாற்றிவிட்டது. சாவுக்கான இசையாய் ஒலிக்கவிட்டது. இந்த இழிநிலையை மாற்றி பறை மீது படிந்திருக்கும் கறையினைத் துடைத்து அதைக் கொண்டாட்டத்திற்கான இசைக் கருவியாக மாற்ற வேண்டும் என்கிற எண்ணம் எங்களுக்குள் முளைவிட்டது இந்தப் பயிற்சிப் பட்டறையின் போதுதான். ஒரு கலையை கற்றுக் கொள்வதின் மூலம் தீண்டாமை ஒழியும் என்றால் ஏன் அந்தக் கலையைப் பரவலாக்கக் கூடாது என்ற கேள்வி எங்களுக்குள் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது.

பறை இசையினைக் கற்பதினால் மட்டும் சாதிகள் எவ்வாறு ஒழியும் என்பது நம்மில் பலருக்கும் இருக்கும் கேள்வி. நம் சமூக அமைப்பில் புரையோடிப் போயிருக்கும் சாதி முறைகளும் வருண தர்மமும் மக்களில் மட்டுமல்லாது கலைகளிலும் ஏற்ற தாழ்வுகளைப் பார்க்கும் மனப்பான்மையை மக்களிடயே ஏற்படுத்திவிட்டது. கிராமிய கலைகளை உயர்வாகவும், நாட்டுநாட்டுப்புறக் கலைகளைத் தாழ்வாகவும் எண்ண வைத்துவிட்டது. இந்நிலையில் வேற்றுமைகளை வேரறுக்கும் முயற்சியினை, முதலில் கலைகளிருந்து தொடங்குவதே சாலச்சிறந்தது. பறையிசையினையும் அதன் மேன்மைகளையும் மாணவர்களுக்குக் கற்பிப்பதன் மூலம் அது ஒரு குறிப்பிட்ட சமூக அடையாளம் என்பதனை விடுத்தது தமிழ் பண்பாட்டின் அடையாளம் என்ற கருத்து மாணவர்களிடையே வலுப்பெறும். இதன் மூலம் அக்கருவியின் பெயரால் வழங்கப்படும் மக்கள் ஒரு குறிப்பிட சாதியினர் என்ற கருத்தாக்கம் மறைந்து அனைவரும் தமிழ் மக்கள் என்ற உணர்வு வலுப்பெறும். மேலும் பறை இசையினைப் போன்று சாதி அடையாளங்களாக இனம் காணப்பட்டுள்ள பல்வேறு நாட்டுப்புறக் கலைகளை மாணவர்கள் தங்கள் ஆசிரியர்கள் மூலமாகவும் பெற்றோர்கள் மூலமாகவும் அறிந்துகொள்ள உந்துகோலாய் இருக்கும். சாதி ஒழிப்பிற்கான ஒரு சிறு நடவடிக்கையாக இது அமையும்.

இந்த 3 நாள் பயிற்சிப் பட்டறையில், பறை இசையை மட்டும் நாங்கள் கற்றுக் கொள்ளவில்லை. சாதியற்ற சமதர்ம சமுதாயம் படைக்கும் முயற்சியில் ஒரு சிறு அங்கமான எங்களின் பங்கும் இருக்கிறது என்ற எண்ணத்தை எங்கனுக்குள் விதைத்த பெருமை இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு உண்டு.

நாங்கள் ஓர் இசைக் கருவியைத் தொடவில்லை. ஒரு மானுடத்தின் வரலாற்றைத் தொடுகிறேம் என்ற உணர்வை எங்களுக்குள் ஊட்டியது இந்தப் பயிற்சிப் பட்டறை.

பறையைத் தொடுவது என்பது ஓர் இசைக் கருவியைத் தொடுவது அல்ல. அது ஆதி மனிதனைத் தீட்டு என்று ஒதுக்கி வைக்காமல் அந்த மனிதனைத் தொடுவது. இத்தனை காலமும் சாதியத்தை தன் வலது தோளிலே சுமந்து கொண்டிருந்தவர்கள் எல்லாம் அந்த எண்ணத்தை அடியோடு இறக்கி வைத்து விட்டுத்தான் பறையை தன் தோளில் ஏற்றுகிறான் என்ற உண்மையை உணர வைத்ததே இந்தப் பயிற்சிப் பட்டறையின் முத்தாய்ப்பாக நாங்கள் கருதுகிறோம்.

செவ்வியல் கலைகளைப் போலவே பறை இசையிலும் தாளங்கள், சதிகள், அடவுகள் உள்ளன என்பதையும், இசை என்பதற்கு இங்கே சொற்கட்டுக்கள் என்ற வார்த்தையைக் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் கற்றுக் கொண்டோம்.

**ஆசிரியர்களை ஆடவைத்த ஆதிக்கலை பறையிசையாட்டம்**

-இரா.அனிதா, அதொப, அகரம்.

தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் தமிழிசைக்கருவி. 5000 வருடங்களுக்கு முன்னரே எழுதப்பட்ட தொல்காப்பிய இலக்கண நூலிலேயே குறிப்பிடப்பட்ட இசைக் கருவி.ஏல்லாத் தோல் இசைக்கருவிகளுக்கும் தாய்க்கருவி அதுவே பறையிசைக்கருவி.

கோடை விடுமுறையில் கிறிதி அளித்த பயிற்சிகளில் மூன்று நாட்கள் ஆசிரியர்களை ஆடவைத்து பாடவைத்து ஆட்டுவித்த ஆதிக்கலையான பறையிசையாட்டம் பற்றிய என் அனுபவம் இதோ!

பறையிசையாட்டத்தை உலகெங்கும் ஒலிக்கச்செய்வதும் அதை பரப்புவதுமே தங்களின் கொள்கைப் பாதையாக வகுத்து அண்டமெல்லாம் வலம் வரும் 'புத்தர்" கலைக்குழு கலைக்குடும்பமாகவே வாழ்ந்துக்கொண்டிருக்கிறது.

திரு. மணிமாறன் மகிழினி, திருமதி.மகிழினி மணிமாறன் தம்பதியினரும் அவர்களின் குமாரர்களுமான செல்வன் சமர் செல்வன், இனியன் ஆகியோரும் பறையை நடனமாக, பாடலுக்குத் தாளமாக, தங்கள் கருத்துகளுக்கு உறுதுணையாகஞ் அதை தங்களின் இரத்த ஓட்டமாகவே கருதுகின்றனர்.வாழ்வுக்காகவும் கொண்டாட்டத்திற்காகவும் எழுச்சிக்காகவும், சமத்துவத்திற்காகவும் இசைத்து ஆடுவதே பறையின் இலக்கணமாக திரு.மணிமாறன் மகிழினி குறிப்பிடுகிறார்.

**பறை இசைக் கருவி:**

சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தூரம் வரை தள்ளி இருப்பவர்களைக் கூட தன்வசப்படுத்தி கேட்கவைக்கக் கூடிய திறனை தன்னகத்தே கொண்ட இசைமுழக்கம் நிறைந்த கருவி என கருவியின் பலங்களை ஆங்காங்கு பயிற்சியில் எடுத்துறைத்தார்.

வெற்றியைப் பறைசாற்ற திருமண நிகழ்வுகளில் போர்காலங்களில் என்று கிட்டத்தட்ட 35 வகை நிகழ்வுகளுக்கும் பயன்பட்டு வந்த வரும் அபூர்வமான ஒர் இசைக்கருவி பறை என்று பறையின் பெருமையை அடுக்கிக் கொண்டே போகலாம். அடிக்குச்சி, சிண்டுகுச்சி அடிக்க பறை ஒலிக்கிறது.



**பயிற்சியில் பறை:**

தாய் தந்தை குரு பறை<br>
தக தக திம்<br>
தகு கூ தா<br>
தகு கூ த க திம்<br>
சஞ் சஞ் நகுடி - நக்கா

என்று பதினோறு பறை தாளங்களை அறிமுகப்படுத்தி நாளொன்றுக்கு ஐந்து தாளங்கள் வீதம் மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.; பயிற்சியில் சுமார் 31 ஆசிரியர்களும் 10 குழந்தைகளும் பாடி ஆடி பறையோடு கலந்தனர்.குழந்தைகள் ஆசிரியர்களாகவும் ஆசிரியர்கள் குழந்தைகளாகவும் அவ்வப்போது மாறியத் தருணங்கள் மறக்க முடியாதது.

**பாடல் பயிற்சி:**

திருமதி. மகிழினி மணிமாறன் அவர்கள் அளித்த பாட்டுப்பயிற்சி அவர்களுடன் நாங்கள் பாடிய நிமிடங்கள் இவையணைத்தும் நெஞ்சில் நிறைந்த நிகழ்வுகள்.

பாடலுடன் வகுப்பில் குழந்தைகளை வழிநடத்தும்

ஆசிரியர்களுக்கு இது போன்ற பாடல்கள் கிடைக்கப்டிபற்றது பெரும்வசதியே. கண க்குப்பாடல் சமத்துவப்பாடல்,அரசுப்பள்ளி மாணவர்கள் பற்றிய பாடல் ஞ் என பாடல் வரிகளும் பாடல்களும் எங்களுக்காகவே எழுதப்பட்டது.



**காட்டுக்குள்ளேப் பாடல்**

காட்டுக்குள்ளே பள்ளிக்கூடம் நடக்குது - அங்கே
கரடி ஆனை சிங்கமெல்லாம் படிக்குது (2)

சிங்கந்தான் ஹெட்மாஸ்டெரு சிறுத்ததான் டீச்சரு
ஒட்டகம் பி டி மாஸ்டரு பாம்பு க்ளாஸு லீடரு
காட்டுக்குள்ளே பள்ளிக்கூடம் நடக்குது - அங்கே
கரடி ஆனை சிங்கமெல்லாம் படிக்குது (2)

மேசமீது குந்திகிட்டு குரங்கு தாளம்போடுது
மேட மேல ஏறிகிட்டு குத்தாட்டம் போடுது
நாங்க அப்டி செய்வதில்ல
நாங்க யாரும் குரங்கு இல்ல (2)

காட்டுக்குள்ளே பள்ளிக்கூடம் நடக்குது - அங்கே
கரடி ஆனை சிங்கமெல்லாம் படிக்குது (2)

காடெருமை வகுப்பரையில் காட்டுகத்து கத்துது
பள்ளிக்கூடம் வராமலே பார்க்கு பீச்சு சுத்துது
நாங்க அப்டி செய்வதில்ல
நாங்க யாரும் எருமை இல்ல (2)

காட்டுக்குள்ளே பள்ளிக்கூடம் நடக்குது - அங்கே
கரடி ஆனை சிங்கமெல்லாம் படிக்குது (2)

**கணக்குப் பாடல்**

சுட்டிப்பாப்பா சுட்டிப்பா
குட்டிக்கதை கேளு
எட்டிப்பரிச்ச மாம்பழம்
எண்ணிப்பாத்தேன் நாலு
அனில் கடிச்ச மாம்பழம்
சுவையா இருக்கும் முன்னு
வகுப்பு தோழன் சேஷ்வரு
வாங்கிக் கிட்டான் ஒண்ணு
மிச்சமுள்ளது ஒண்ணு
அத என்ன பண்ணுவேன் நானு
அஞ்சு பேருக்குக் குடுக்கனும்
அதையும் சமமா கொடுக்கனும்
கொட்ட தனியா தோலு தனியா
பிரிச்சுபுட்டேன் பாரு
அது எண்ணோட சேர்ந்து ஆறு
எல்லோரும் சமமா
பங்குபோட்டோம் கேளு

இப்படி வகுப்பறைக்கு ஏற்ற பாடல்கள் கற்றுக்கொண்டோம். பாடல்களும் பாடல்களைக் ஆசிரியர்கள் குழந்தைகளோடு இணைந்து கற்றுக்கொண்ட விதமும் அருமையாக இருந்தது. பள்ளியில் எங்கள் வகுப்புக் குழந்தைகள் பாடுவது இன்னும் அருமை.

**ஆடலும் பாடலும்** :

ஆடலும் பாடலும் கலந்து பாடங்களைப் உள்வாங்கும் போது குழந்தைகளின் மூளையும் உடலும் புத்துணர்வு அடைந்து கற்றல் செம்மைப்படும் என்பது நிதர்சனம்.

வகுப்பறைக் கற்றலை உயிரோட்டமாக்க ஒலிக்கு உரிய இடமுண்டு. அவ்வொலியை ஓங்கி ஒலிக்கசெய்யும் பறையை இளம் தலைமுறைக்கு அறிமுகப்படுத்தி

கூட்டுறவை வளர்த்தெடுக்கவும் வரலாற்றை எடுத்தியம்பவும் ஆசிரியர்கள் பழகிக் கொண்டனர். நம் கலையை காப்பாற்றிய பங்கு நமக்கும் கிட்டும்.

உழைக்கும் மக்களின் வாழ்வியலோடு உறவாடும் தோழன் பறை இசைப்போரையும் இரசிப்போரையும் ஈடில்லா எண்ணிக்கை கொண்டது பறை கைத்தட்டத் தெரிந்த அனைவரும் எளிதாக கற்றுக்கொண்ணக்கூடிய அரியதொரு இசை பறை!

ஓங்கிக் கொட்டுவோம் பறையை !
ஒழித்துக்காட்டுவோம் சாதியை !!



**கு. பச்சையம்மாள்,** TGT
அ.பெ.மே.ப காலாப்பட்டு


**இரா. அனிதா,** தொ.ப.ஆ,
அ.தொ.ப அகரம்.

# கதை கூறலும் கலந்துரையாடலும்

**கதை என்பது கதைதான், அதற்கு ஆரம்பமும் இருக்காது, முடிவும் இருக்காது**

கதை சொல்லி சத்தீஷ் அவர்கள் வருகைக்கு முன் ஆசிரியர்களும் சிறுவர்களும் இணைந்து பாடிய வண்ணம் இருந்ததால் பயிற்சியின் ஆரம்பமே மிக அருமையாக தொடங்கியது.

ஆசிரியர்களின் பாடல்களின் இடையில் திடீரென்று தோன்றினார் "கோமாளியா" மாறிய சத்தீஷ். அவரை கண்டவுடன் சிறுவர்கள் அனைவரும் ஆர்வத்தோடு ஆரவாரம் செய்து மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

கோமாளியாக வந்திருந்த அனைவரையும் வரவேற்கும் விதமாக சத்தீஷ் " வந்தனம் ஐயா வந்தனம்" என்ற பாடலுடம் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார். வயது வரம்பற்று கூடியிருந்த ஆசிரியர்களும் சிறுவர்கள் போலவே அவரோடு இணைந்து பாடியது சிறப்பு.



பின்பு அனைவரும் அறிந்த காக்கா வடை சுட்ட கதையை நகைச்சுவை கலந்து, வசீகரமான அசைவுகளுடன், ஆச்சரியமான திருப்பங்களுடன் வித்தியாசமாக சிலபல மாற்றங்களோடு மிக அழகாக அங்கும் இங்கும் ஓடி குழந்தைகளோடு இணைந்து அவருக்கே உரிய பாணியில் கதையை ஒரு நாடக வடிவில் கூறியது பாரட்டதலுக்கு உரியதாகும். கதையை சொல்லி முடித்தபின், அவர் கதை சொல்லும் விதத்தில் இருக்கும் சிறப்பு அம்சத்தைப் பற்றி ஆசிரியர்களைக் கூற சொன்னார்.

ரொம்ப நேரம் மெய்மறந்து கதைக் கேட்ட ஆசிரியர்கள், அவர் கதை சொல்லல் எவ்வாறு வித்தியாசமாக இருந்தது என்பதைக் கூறினர். அதாவது, நல்ல விசயங்களை மட்டும் திரும்ப திரும்ப கதையில் வலியுறுத்துவது மற்றும் நகைச்சுவை, பல உத்திகளின் மூலம் பார்வையாளரை தொடர்ந்து ஈடுபத்துவது, பார்வையாளர் கவனத்தை முழுவதும் கதையுடன் கட்டி வைப்பது போன்றவற்றை கூறினர்.

அடுத்து அவருடன் மேற்கொண்ட கலந்துரையாடல் மூலம் பின்வரும் வினாக்களுக்கு விடை காண முடிந்தது.

1.கதை என்றால் என்ன?

கதை என்பது கதைதான், அதற்கு ஆரம்பமும் இருக்காது, முடிவும் இருக்காது மற்றும் அறநெறி பண்புகள் மையப்படுத்திதான் கதைகளைச் சிறார்களுக்குச் சொல்ல வேண்டும் என்பது அவசியமில்லை.

2.ஏன் மாணவர்களுக்கு கதைக் கூற வேண்டும்? மாணவர்களிடம் ஆர்வத்தை வளர்ப்பதற்கு ஞாபக சக்தி திறன் வளர்ப்பதற்கு

கற்பனை மற்றும் படைப்பாற்றல் திறன் வளர்ப்பதற்கு

புரிதல் திறன் வளர்ப்பதற்கு

மொழி திறன் வளர்ப்பதற்கு

முடிவு எடுக்கும் திறன் வளர்ப்பதற்கு

3.அவர் ஏன் கோமாளி வேடத்தைத் தேர்ந்து எடுத்தார் போன்ற பலவித வினாக்களுக்கு மிக தெளிவாக பதிலளித்தார். பின் ஆசிரியர் மற்றும்



சிறுவர்கள் விரும்பிய புத்தகத்தை எடுக்கச் சொன்னார் சத்தீஷ். அவர் கூறிய சில நொடிகளில் அனைவரும் ஓடிப்போய் ஆளுக்கொரு புத்தகத்தை எடுத்து அப்புத்தகத்தைப் புரட்ட ஆரம்பித்தனர்.

அனைவரின் கவனமும் புத்தகத்தின் மீதே இருக்கும் தருவாயில் சத்தீஷ் தன் கையைத் தட்டி அனைவரின் கவனத்தையும் அவர்மீது ஈர்த்து மீண்டும் கலந்துரையாடலில் இறங்கினார்.

எடுக்கப்பட்ட புத்தகத்திலிருந்து ஏதேனும் ஒரு பக்கத்தை மட்டும் எடுத்து வாசிக்க சொன்னார். பின்பு ஒவ்வொருவராக கூப்பிட்டு அவர்கள் படித்த பகுதியை சந்தோஷமாக, அழுதபடி, குரல் உயர்த்தி, கோபத்துடன் என பல வடிவங்களில் படிக்கச் சொல்லி அதனால் ஏற்படும் மாற்றங்களை கலந்துரையாடல் மூலம் விளக்கினார்.

இவ்வாறு சத்தீஷ் “கதை கூறல் மற்றும் கலந்துரையாடல்” பகுதி பாடல், கதை , நடிப்பு, வாசிப்பு, கலகலப்பு மற்றும் கலந்துரையாடல் என பல பரிணாமங்களில் சென்றது. ஒரு கதை சொல்லியாக மாற இக்கலந்துரையாடல் சிறந்த தூண்டுதலாக அமைந்தது என்றே கூறலாம்.





**L. Rajathilagam,** PST
GPS, Sembiyapalayam.

# School Event Updates

## World Environment Day Celebration



A play was conceptualised by our Keezhparikal pet Government High School students in view of the World Environment Day 2018. The theme was 'Beat Plastic Pollution'. Students identified areas where we consume too many plastics that lead to pollution and suggested simple remedial measures that each individual can practice to reduce the pollution. In their play, they talked about the disadvantages of using plastics, eating snacks packed in plastic packets, polluting the school by dropping plastics in ground, classroom, staircases, etc., This was then scripted into a dialogue and song method. By that, they had chosen effective medium to communicate the message to a larger audience. They presented this during the special assembly gathering on World Environment Day – June 5, 2018 to create an awareness among all the students in the school

**William, GMS, Keezhparikalpet**

## World Environment Day Celebration

In our school, Cheddial Government High School, we celebrated 'World Environment Day' on 5th June, 2018 by taking some important decisions:



1. To make our school a plastic-free .
2. To plant a minimum of 500 saplings and make it a 'green school'campus.
3. To protect the plants and environment inside the school by preventing cattle from entering the campus. Cattle are also not to be tied outside the school walls.
4. To stop littering inside the school premises and also remove any garbage thrown inside the campus.
5. To create awareness among students to segregate biodegradable and non-bio degradable wastes and to dispose it in appropriate places inside the school.



6. Students celebrating their birthday will not distribute chocolates to their friends, but, will substitute them with healthy food-items like guava, amla, groundnut cake, etc.,
7. On the day of their birthday, students will plant sapling in their name inside the campus and take care of it until their time with the school.
8. Prizes will be awarded to students whose plants are well-maintained.
9. To set up a vermicomposting pit.
10. To set up a herbal/flowering garden.

**Jaya Sundar, GHS, Abhishegapakkam**

# ■ Foldscope – Microscopy for all

Exploring microorganisms with a microscope gives immense pleasure to kids. Their enthusiasm and laughter fill the classroom when they are able to view the movements of microorganisms like amoeba and paramecium. However, it is a challenge to provide a microscope to each student. Some of the difficulties are:

- A microscope is heavy and difficult for students to handle.
- It has breakable parts - if it falls, the lens and the glass parts are likely to get damaged.
- Cleaning the lens is also difficult for students.
- It is expensive and difficult to transport from one place to another.

The Department of Biotechnology, Government of India, has made 'Microscopy for all' possible by providing it in the form of a 'Foldscope'. It is cost effective and weighs less than 20g. A Foldscope can be taken in a purse to the field while travelling from one place to another.

**Foldscope has many advantages:**

- The phone camera can be fixed on the eyepiece to capture the image on the phone screen.
- The photographed images can be recorded and viewed later.
- The slide image can be projected on the screen through a torch.
- A Foldscope is unbreakable even when it falls on the ground.
- It is easy to transport from one place to another.
- The image can be enlarged up to 100x.

**Hands on action:**

Foldscope made learning interesting and easy. Students were paired and each pair was given a Foldscope on Friday evening. A topic for observation was discussed and finalised, for example insects. They spent their Saturday & Sunday in a fruitful manner, observing insects.

Students were given hands on experience to prepare slides. They prepared their own slide and observed it. They photographed/video graphed their recordings (https://www.youtube.com/watch?v=Xgv1gJG5nlk) and sent it to their teacher through WhatsApp. They raised queries and sought clarifications during the process. This provided an opportunity for the children to learn at their own pace without interruption. Self-learning was also found to be highly motivating.

**Skill attained by them:**

- Preparing the slide.
- Observing the slide and identifying the structure.
- Handling a foldscope and other instruments with care.
- Fine tuning the foldscope.
- Synchronising the foldscope with technology.








**Rajkumar, GHS, Kattrikuppam**

# ■ தேசிய வாசிப்பு நாள்

நம் எண்ணங்களே நம் செயல்களை தீர்மானிக்கின்றன.அத்தகைய எண்ணங்களை தீர்மானிப்பது நாம் வாசிக்கும் புத்தகங்கள் தான். காந்தியைப் படித்த மனம் அகிம்சை மீதும், காரல் மார்க்ஸைப் படித்த மனம் கம்யூனிசத்தின் மீதும் ஈடுபாடு கொள்வது இயல்பு. நல்ல புத்தகங்களை வாசிக்கும் போது நம் மனம் நம்மையும் அறியாமல் அதில் உள்ள நற்கருத்துக்களின் மீது ஈடுபாடு கொள்ளும். வளரும் பருவத்தில் மாணவர்களிடையே காணப்படும் வாசிப்பு பழக்கமானது அவர்களின் சிந்தனையை விசாலமாக்குவதுடன், அவர்கள் படிக்கும் நற்கருத்துகளும் 'பசுமரத்தாணி போல்" அவர்களின் மனதில் பதிந்து விட ஒரு வாய்ப்பாக அமையும். ஆகவே மாணவர்கள் நல்ல புத்தகங்களை தேடி வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். வாசிப்பு பழக்கம் ஒரு நல்ல மனிதனை உருவாக்கும் .நல்ல மனிதன் நல்லதொரு சமுதாயம் படைப்பான். சீர்மிகு சமுதாயம் படைக்க உற்றத் துணையாக இருக்கும் இந்த வாசிப்புப் பழக்கத்தை மாணவர்கள்பால் கொண்டு செல்ல வேண்டிய தலையாயக் கடமை நமக்கு உள்ளது. இந்த ஆண்டு நமது இந்திய அரசாங்கம் 22 - ஆவது தேசிய வாசிப்பு நாளை கொண்டாடியது.

அதன் அடிப்படையில், கேரள நூலக இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படும் மறைந்த பி.என். பனிக்கர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் ஜூன் 19 , 2018 முதல் ஜூலை 19, 2018 வரை தேசிய வாசிப்பு மாதமாகக் கொண்டாட வேண்டுமென நிதி ஆயோக் அறிவுறுத்தியிருந்தது.

இதனைப் பின்பற்றி, எங்கள் பள்ளியிலும் ஜூன் 19 , 2018 முதல் தேசிய வாசிப்பு நாள் , தேசிய வாசிப்பு மாதம் ஆகியவை கொண்டாடப்பட்டு வருகின்றன. அன்றைய தினம் பள்ளியின் துணை முதல்வர் அவர்களின் முன்னிலையில், சமூக அறிவியல் ஆசிரியை திருமதி கு. பச்சையம்மாள் வாசிப்பு பழக்கத்தின் அவசியத்தையும், தேசிய வாசிப்பு நாள் விழாவின் காரணத்தையும்பற்றி உரை நிகழ்த்தி தேசிய வாசிப்பு நாளைத் தொடக்கி வைத்தார். தமிழில் "ஒரு பழமொழி உண்டு 'கண்டதும் கற்றவன் பண்டிதனாவான் மாணவர்கள் பாட புத்தகங்களுக்கு அப்பால் நல்ல கதை, கவிதை மற்றும் கட்டுரை புத்தகங்களையும், செய்தி தாள்களையும் நாள்தோறும் படிக்கச் வேண்டும். அவற்றில் உள்ள தகவல்களை உட்கிரகித்து ஆசிரியர்களின் உதவியுடன் அதனை சீர்தூக்கிப் பார்க்க பழக வேண்டும் என்பதனை தன் பேச்சில் சுட்டிக் காட்டினார். தேசிய வாசிப்பு மாதத்தை எப்படியெல்லாம் கொண்டாடவேண்டும் என்று பள்ளியின் தலைமை ஆசிரியை செல்வி திலகவதி மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். அதன்படி, ஒவ்வொரு நாளும் காலைப் பேரவையில் ஒரு மாணவி பாடலோ, கதையோ, நாட்டுப்புற கலையினையோ செய்து காண்பிப்பார். ஒவ்வொரு நாளும் ஒரு அருமையான தொடக்கத்தை உருவாக்கித் தந்துள்ளது இந்த தேசிய வாசிப்பு நாள் கொண்டாட்டம்.






**கு. பச்சையம்மாள்,** TGT அ.பெ.மே.ப காலாப்பட்டு

## Reading Month Celebration






Reading month is being celebrated in our school, GPS Reddiarpalayam, from June 19 to July 19, 2018. As part of this, Class IV children were made to read from Tamil and English storybooks. It was observed that children enjoyed reading stories from these books.

Children were also given colourful pictures of wild and domestic animals and birds and they did picture-reading. They were asked to identify the animals and birds and read about their sounds, food and appearance, migration and life cycle. The sessions were quite interesting and children eagerly participated in the many reading activities. During this time, they learnt more than 60 names of animal species

**Premalatha, GPS Reddiarpalayam.**

---

## Reading Month Celebration

Reading is a good habit which develops the values, crucial for creation of an egalitarian and tolerant society. The hon'ble Prime Minister of India inaugurated the 22nd National level Reading Day and Reading Month celebration at Kerala.








In this regard, Reading Month celebration started from June 19th in tribute of late P. N. Panickar, the Father of the Library Movement of Kerala, in our school, Mahatma Gandhi Government Middle School, Nellithope.

The events that had happened during the month were:

- Story-telling
- Poetry recitation during our morning assembly
- After reading storybooks students created storyboards
- Drawing and colouring activities were given to them based on picture stories
- Folk art, Villupaatu was performed by our students to enhance the importance of reading

**S.Kesavardhinye, MGGMS, Nellithope**

## ■ Student's Day Celebration

On the event of Students' Day, a grand function was held at our school GPS Nonankuppam on 13.07.2018. Respected Vice Principal Mr E.Nagappan presided over the function and our guest of honour was Mr Kumar, DIS of Zone 3.






PTA members and parents graced the occasion with their presence. Various competitions were held, and prizes were distributed to the students. Teachers Mrs Vinothini, Mrs Subashini , Mrs Nalini , Mrs Vasudha, and Mrs Azhagammal had organised the cultural programmes.

**G. Subashini, GPS, Nonankuppam**

---

# School Gallery



GPS Seliamedu - Children reading books from reading corner



GPS Thanampalayam - Parents welcoming students on the first day of this academic year 2018-19



GPS Sulthanpet - Pravesh Utsav



GPS Sulthanpet - Mango Festival



GGHSS Periyakalapet - Reading Day Celebration



GHS Katterikuppam - World Population Day & Tree Plantation Day Celebrations



GHS Kodathur - National Science Day Celebration



GHS Kodathur - Rally Against Drug Abuse



GHS Kalmandapam - Clay Modeling



GHS Katterikuppam -
வீட்டுக்கொரு விஞ்ஞானி - புதிய தலைமுறை



GHS Kodathur - Puppetry Program
on National Level Reading Day




GHS Mangalam - Student's Day Celebration



GHS Mettupalayam - Hands on inquiry in a science classroom on plant adaptation




GMS Nallavadu - Student's Day Celebration



GPS Edaiyarpalayam - Student's Day Celebration



GPS Irulan Sandhai - International Yoga Day Celebration



GPS Archivakpet - International Yoga Day & Environment Day



GPS Edaiyarpalayam - International Yoga Day Celebration



GPS Kakayanthope - Student's Day Celebration



GPS Karikalampakkam - Drama to create awareness on plastic


GPS Kirumapakkam - ஆசிரியர் காந்திமதி பாரதியார் வேடம் அணிந்து மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி பாடி கற்ப்பித்தார்


GPS Nainar Mandapam - Reading activity using Tamil letter cards


GPS Nettapakkam - Magic Show as a tool to enhance English language skills


GPS Pudukuppam (A) -  Student's Day Celebration


GPS Moorthikuppam - Pen stand made out of waste papers by students


GPS Nainar Mandapam - Reading activity using Tamil letter cards



GPS Pillaiyarkuppam - EVS lesson activity for 'Day With Nandu', Grade 4


GPS Pudukuppam (A) - Clay modelling



GPS Pudukuppam (B) - Teaching long and short concept through long jump game



GPS Thanampalayam - Students talking about Kamarajar on students' day celebration



GPS Vaduvakuppam - Reading Festival



PKGBHS Muthialpet - Student's Day Celebration



GPS Thanampalayam - Children reciting rhymes and telling stories to our DIS, Zone 3



GPS Thiruvandarkoil - Kamaraj's Face using waste plastic bottle caps




GPS Veerampattinam - Origami activity for super senses lesson (EVS, grade 5)




Savarirayalu GGPS - இயற்கையை வருணித்தலும் வாசித்தலும்

# கற்றல் பயணம் ஜூலை 2018



மஞ்சுளா, அரசு தொடக்கப்பள்ளி, வடுவகுப்பம்
சமையல் குறிப்பு



ராமகிருஷ்ணன் - அரசு தொடக்கப்பள்ளி, சுல்தான்பேட்டை
பரப்பளவு காணல்




அனிதா - அரசு தொடக்கப்பள்ளி, அகரம்
வகுப்பறை மேலாண்மை




க. சுபாஷினி - அரசு தொடக்கப்பள்ளி, நோணாங்குப்பம்
இயற்கை



ராஜேஷ் - அரசு உயர்நிலைப்பள்ளி, கொடாத்தூர்
காடு எம் வீடு




ஷாலினி - சவரிராயலு நாயக்கர், அரசு தொடக்கப்பள்ளி
இயற்கை




ராஜ்குமார், அரசு தொடக்கப்பள்ளி, வினாயகம்பேட்டை
சமையல் குறிப்பு



கஜலட்சுமி, அரசு தொடக்கப்பள்ளி, கரிக்கலாம்பாக்கம்
பொருட்களைக்கொண்டு கூட்டல் கழித்தல்




சங்கர தேவி - அரசு தொடக்கப்பள்ளி, அபிஷேகப்பாக்கம்
காடு எம் வீடு



கவிதா, அரசு தொடக்கப்பள்ளி, மணவெளி (அ)
புதிர்களை உருவாக்குதல்




நாகம்மா, அரசு தொடக்கப்பள்ளி, தானம்பாளையம்
இயற்கை




ரேவதி, அரசு தொடக்கப்பள்ளி, பிள்ளையார்குப்பம் (பா)
பூச்சிகள் - குறிப்பேடு



மாலதி, அரசு தொடக்கப்பள்ளி
நைனார்மண்டபம் - இயற்கை




நம்பிக்கைமேரி, அரசு தொடக்கப்பள்ளி, ஓடைவெளி
விலங்குகள் - குறிப்பேடு



சாந்தகுமாரி - அரசு தொடக்கப்பள்ளி
வடுவகுப்பம் - திருக்குறள் படவிளக்கம்



பத்மினி, அரசு தொடக்கப்பள்ளி, தட்டாஞ்சாவடி
கௌதாரியும் முயலும்



அகிலா, அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மடுகரை
விசையும் இயக்கமும்

## கற்றல் பயணம் பங்கேற்பாளர்கள்

1. சசிரேகா, அரசு நடுநிலைப்பள்ளி, டி.என். பாளையம் - தாவரம்
2. புஷ்பவள்ளி, அரசு தொடக்கப்பள்ளி, தானம்பாளையம் - படங்களை விவரித்து எழுதுதல்
3. இந்திரா பிரியதர்ஷினி, அரசு தொடக்கப்பள்ளி, கே.டி.குப்பம் - தாவரங்கள்
4. சந்தோஷ்குமார், அரசு தொடக்கப்பள்ளி, வடுவகுப்பம்
5. வனிதா, அரசு தொடக்கப்பள்ளி, வடுவகுப்பம்
6. மகேஸ்வரி, அரசு தொடக்கப்பள்ளி, கே.டி.குப்பம் பேட்
7. சுமதி, அரசு தொடக்கப்பள்ளி, அரியாங்குப்பம் பேட் - விலங்குகள் - குறிப்பேடு
8. லீனா, அரசு தொடக்கப்பள்ளி, தவளக்குப்பம் - எழுத்துக்களை அறிதல்

MOTHER'S GRACE 0413 2336204

AZIM PREMJI FOUNDATION
#5 Nessa Illam, PSCB Nagar, Opp. RTO Office, Puducherry - 605 004.
www.azimpremjifoundationpuducherry.org, www.azimpremjifoundation.org

Send us your articles and feedback :
thisaimaani@azimpremjifoundation.org
8220001765 - 9500400446